# உள்ளே!


| | பக்கம் |
|---|---|
| இரண்டு வழிகள் | 7 |
| தீமைகளின் தாயகம் | 9 |
| அருள்வழி பிறந்தது | 14 |
| மதுவெனும் மாயப் பிசாசு | 18 |
| மதுவோடு நடத்திய மறைவழிப்போர் | 22 |
| மதுவுக்கு எதிராக மாநபி | 29 |
| மதுவும் மறுமை வாழ்வும் | 31 |
| மதுவை வென்ற மகான்கள் | 36 |
| மது பாவங்களின் தாய் | 38 |
| மது பற்றிய எச்சரிக்கை | 44 |
| மதுவும் நமது காலமும் | 48 |
| விபச்சாரம் கடுங்குற்றம் | 50 |
| திருந்திய திருக்கூட்டம் | 53 |
| விபச்சார வேர்கள் அறுப்பு | 57 |
| சாவிலும் உயர்ந்த சீலர்கள் | 60 |
| அச்சமும் தடுப்பு வழிகளும் | 65 |
| விபச்சாரத்தின் ஆதிக்கம் | 71 |
| கடுமையான தண்டனையல்லவா? | 74 |
| சூதாட்டம் | 80 |
| திருட்டு | 89 |
| தீமைகளை வெல்வோம் | 103 |
| வியாதிக்கு தெய்வங்கள் | 103 |
| சகுனங்கள் பார்த்தல் | 104 |
| நல்ல நாள், கெட்ட நாள் | 104 |
| சாதகம் குறி நம்பிக்கை | 105 |
| நம்மில் சில பலவீனர்கள் | 106 |


بسم الله الرحمن الرحيم

## முதல் பாகம்

## தீமைகளை வெல்வோம்

# 1. இரண்டு வழிகள்

நன்மையும் தீமையும் கலந்தது உலகம்.
இவற்றைப் பிரித்தறிவிப்பது வேதங்கள்.

மனித வாழ்க்கையில் நல்வழி-தீயவழி எனஇரண்டு வழிகளும் ஊடாடுகின்றன. நல்வழி இறைவழியாகவும், தீயவழி ஷைத்தான் அல்லது சாத்தான் அல்லது துர்த்தேவதைகளின் வழியாகவும் குறிப்பிடப்படுகின்றன.

இறைவழி என்பது மறைவழி. மறைகளுக்கெல்லாம் இறுதி மறையான, சம்பூர்ணமான வேதமறை திருக்குர்ஆன். முன்னுள்ள வேதங்கள் அனைத்துடையவும் சாறு அது. நன்மை தீமைகளைப் பிரித்து அறிவதற்கும், நன்மையின் பக்கம் சார்ந்து வாழ்வதற்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திருக்குர்ஆன் திகழ்கிறது. அதற்காகவே திருக்குர்ஆன் அருளப்பட்டுள்ளது.

திருக்குர்ஆன் வழி என்பது, இறுதி இறைத் தூதர், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய, போதித்த, அறவழி; நெறிவழி; உயர்வழி. கோடானு கோடி உத்தமர்களை, சத்திய சீலர்களை, சன்மார்க்க மேதைகளை உலகுக்கு அளித்த வழி. ஒளிகாட்டும் அருள்வழி, சுவர்க்கத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் பெருவழி.

ஷைத்தானின் வழி, அழிவு வழி. மனம் போன போக்கெல்லாம் மனிதனை இழுத்துச்சென்று, அவனை இழிந்தவனாக அழிந்தவனாக ஆக்கிய வழி; மனிதனின் புனிதப் பிறவியை நிர்மூலமாக்கி, அவனை மிருகமாக-மிருகத்தினும் கேடுகெட்டவனாக மாற்றும் தீயவழி. அவனுடைய ஒப்பற்ற அறிவைச் சூன்யமாக்கி, கண்ணிருந்தும் குருடனாக்கும் இருள்வழி. அவனை நரகத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் நாசவழி.

இறை வழியைவிட ஷைத்தானுடைய வழியில் கவர்ச்சி அதிகம்; ஈர்க்கும் சக்தி அதிகம். ஆதலால் அதில் மனிதனுக்கு மோகம் அதிகம். இறைவனை மறந்து, இறைமறையைப் புறக்கணித்து, இறுதித் தூதராம் அண்ணல்நபி (ஸல்) அவர்களின், 23 ஆண்டுகாள் எளிய இனிய நல்வாழ்வைத் திரும்பிப் பாராமல், மனம்போன போக்கிலே, கண்டதே காட்சி கொண்டதே கோலமாக வாழ விரும்புகிறான். அதையே இன்ப வாழ்க்கையாகக் கருதுகிறான்.

எப்படியும் வாழலாம் என்பது ஷைத்தானின் மார்க்கம். இப்படித்தான் வாழவேண்டும் என்பது இறைவனின் மார்க்கம். இறைத் தூதரின் மார்க்கம். இதுவே இஸ்லாம் மார்க்கம். மனிதன் எவ்விதம் வாழவேண்டும் என்பதற்கு, நேரிய, சீரிய பல விதிமுறைகளை வகுத்து, அவைகளை இலகுவான வழியில் மனிதன் கடைபிடிக்கும், வழிகளை அல்லாஹ் தன் அருள் மறையான திருக்குர்ஆனில் பரவலாகப் பல இடங்களில் கூறியுள்ளான். அத்தோடு தீமைகளைக் குறித்து அச்சுறுத்தியும் எச்சரித்துள்ளான்.

வெறும் போதனைகளோடு மட்டுமல்லாமல், அவற்றை மனித சமுதாயத்தின் கண்ணெதிரே அமுல் நடத்திக்காட்ட ''அழகிய முன் மாதிரி''யாக அருமை நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை அனுப்பி வைத்து, 23 ஆண்டுகாலம் செயல்படுத்தச் செய்து காட்டியும், உலக மக்களின் உள்ளங்கள்



உருகும்படி மேலும் உபதேசங்கள் செய்யும் படியும் ஆக்கினான்.

உலக வரலாறு காணாத விதத்தில், கோடானு கோடி தொல்லைகளைச் சகித்துக்கொண்டு, அன்பே உருவாய், அருமை நபி (ஸல்) அவர்கள் சத்திய சன்மார்க்கத்தை, தமது செயல்களாலும், சொற்களாலும் போதித்தார்கள். 'ஒரு நபியால் தான் இது முடியும்' என்று மனிதன் மலைப்பாக நினைத்து விடாமலிருக்க, அந்த சத்திய நபிக்கு, பலநூறு உத்தமத் தோழர்களை-சஹாபா பெரு மக்களை-அளித்து, அவர்கள் காட்டிய அறப்பாதையில் அணுவளவு கூட தவறாமல் நடக்கச் செய்து, தொடர் உதாரணமாக ஆக்கினான். அடுத்தடுத்து வந்த அவ்லியாக்களும், அறிஞர் பெருமக்களும் அந்தச் சீரிய நெறிகளைப் பின் தொடர்ந்து வழி காட்டினார்கள். சத்திய சன்மார்க்கப் பாதை இன்னும் தொடர்கிறது. உலகம் உள்ளளவும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

## 2. தீமைகளின் தாயகம்

நன்மை தீமைகளைத் தெளிவாகப் பிரித்தறிவிக்க, இறைவன் தன் இறுதி மறையை அரபு பூமியிலிருந்து ஏன் வெளிப்படுத்தவேண்டும்? அருமை அண்ணலார் (ஸல்) அவர்களை ஏன் அங்கிருந்து வெளிப்படுத்த வேண்டும்?

இந்தக் கேள்விக்கு பதிலாக 1400 ஆண்டுகளுக்கு முன்னால், உலகம் இருந்த நிலையையும், அரபு நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். உலகின் மற்ற எல்லா பாகங்களையும்விட தீமைகளின் பிறப்பிடமாய் அரபு நாடு இருந்து வந்ததை அறிய முடிகிறது.

மதுவருந்துதல் அந்நாட்டு மக்களின் அன்றாடப் பழக்க வழக்கமாக இருந்தது. வீட்டுக்கு வீடு குடங்குடமாய் மது

வைச் சேகரித்து வைத்து, முடிந்தவரை ஆணும் பெண்ணும்
குடிப்பதே அவர்களின் கலாச்சாரமாக இருந்து வந்தது. யார்
அதிகமாகக் குடிப்பார்களோ அவர்கள் வீரர்களாகக் கருதப்
பட்டனர். யார் வீட்டில் அதிக மது சேகரித்து வைக்கப்பட்டி
ருந்ததோ அவர்கள் பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்டார்
கள். விருந்துகள், கேளிக்கைகளில் எல்லோருமே குடித்து
விட்டு மதிமயங்கி மல்லார்ந்து விடுவது அவர்களுக்கிடையில்
பெருமையாக இருந்தது. மனிதர்களுக்கு மட்டுமல்ல, அவர்
கள் வளர்க்கும் குதிரைகள், ஒட்டகங்கள், கழுதைகள் முத
லானவற்றுக்கும் மதுவை ஊற்றிக்கொடுத்து மகிழ்ச்சியடைந்
தார்கள். குடிப்பழக்கத்தில் உலகத்திலேயே ஈடு இணை
அற்றவர்களாக அரபுகள் இருந்தனர்..

சூது அவர்களின் பொழுது போக்காக இருந்தது. சூதாட்
டத்தை ஒரு கலையாக அவர்கள் பேணிக்காத்தார்கள். எந்த
வொரு பிரச்சனையையும் அவர்கள் சூதாட்டத்தின் மூலமே
தீர்த்துக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். தாங்கள்
வணங்கிய கடவுள்களின் அனுமதியையும், ஆசீர்வாதத்தை
யும் கூட, அம்பெய்து குறிபார்த்து முடிவு கட்டக் கூடியவர்
களாக இருந்தார்கள். சூதாட்டங்களின் மூலம் ஒருவரை
யொருவர் பஞ்சை பராரியாக்கிக் கொண்டார்கள். தோற்ற
வர்கள் ஜெயித்தவர்கள்மீது வன்மம் பாராட்டிக் கொண்டார்
கள்.

விபச்சாரம் அவர்களின் சாதாரண இன்ப விளையாட்டு.
மிருகங்களைப்போல யார் யாரிடம் வேண்டுமானாலும் காமப்
பசியைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றநிலை இருந்தது. அன்
னியப் பெண்களைத்தூக்கிச்சென்று கற்பழிப்பது அவர்களின்
வீரச் செயல்களில் ஒன்றாக மதிக்கப்பட்டது. பலமுள்ளவர்
களுக்கு பலவீனர்கள் அடிமையாக வேண்டியிருந்தது. விலை
கொடுத்துப் பெண்களை வாங்கி, நிரந்தரமான விபச்சாரத்
துக்குப் பயன்படுத்திக் கொண்டுவந்தனர். அடிமைப்பெண்
களை விபச்சாரத்துக்கு அன்பளிப்புகளாகப் பரிமாறிக் கொண்
டனர்.



கொள்ளையும், திருட்டும் அவர்களின் சுலபமான வருமான வழிகளாகும். கூட்டு சேர்ந்துகொண்டு வர்த்தக (காரவான்) கூட்டங்களைக் கொள்ளையிடுவது, பேரீச்சம், திராட்சை களின் அறுவடைக் காலத்தில், தோட்டங்களில் புகுந்து திருடுவது, மற்றவர்களின் ஆடு - மாடுகள், குதிரை, ஒட்டகங்கள் ஆகியவற்றை இரவோடிரவாக ஓட்டிச் செல்வது; யாரிடமாவது விலையுயர்ந்த பொருட்கள் இருக்கின்றன என்று அறிந்தால், அவற்றைக் குறிவைத்து அபகரிப்பது, ஆகியவை தினசரி சம்பவங்களாகும்.

கொலை செய்தல் என்பது சர்வ சாதாரணமாக அன்றாடம் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளாகும். கொள்ளையின்போதும், திருட்டின்போதும் எதிர்ப்பவர்கள், ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டனர். குடியின்போது கோபமூட்டப்பட்டதும் சூதாட்டங்களின்போதும் தகராறுகள் எழுந்தபோதும், விபச்சார போட்டா போட்டிகள் ஏற்பட்டபோதும், கொலைகள் சர்வசாதாரணமாக நிகழ்ந்தன. கொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாய் பேசினவர்களும் கொலைக்கு ஆளானார்கள். தன் எதிரிகளைக் கொலை செய்து, அவர்களின் மண்டை ஓட்டில் மதுவருந்துவதை வீரப்பிரதாபமாக பேசி வந்தார்கள். ஒரு கொலைக்கு வஞ்சந்தீர்க்கத் தொடர்ந்து மாறி மாறிப் பல கொலைகள் செய்துகொண்டார்கள். எதிரிகளின் நெஞ்சைப் பிளந்து ஈரலை வெளியே எடுத்துக் கடித்துத் துப்புவது, வயிற்றைக் கிழித்து குடலை எடுத்து மாலையாக அணிந்துகொண்டு ஊர்வலம் வருவது, இரத்தத்தை உறிஞ்சிக் கொப்பளித்துக் காட்டுவது அவர்களின் வீரச் செய்கைகளாகக் கருதப்பட்டன. கொலை வெறி ஏற்படின் அதற்குச் சிறுவர்கள், பெண்கள் என்றெல்லாம் விதிவிலக்கில்லை. எதிரிகளின் சந்ததியை அழிப்பது என்றுவைராக்கியம் கொண்டு பச்சிளம் பாலகர்களையும் கூடப் பழிதீர்ப்பர்.

வட்டி உண்ணுதல் அவர்களின் வாடிக்கை. ஏழை எளியவர்களையும் பாதிக்கப்பட்டோரையும் வட்டிக்கு அடிமையாக்கி, அவர்களின் கடுமையான உழைப்பை ஈவிரக்கமின்றி

உறிஞ்சிடுவர். வட்டிக்கு வட்டிபோட்டு அவர்களின் அற்ப சொற்ப சொத்துக்களைச் சூறையாடுவர். வட்டிக்குப் பகர மாக மனைவி மக்களைக்கூட அடிமையாக்குவர்.

அனாதைகள், அபலைகள் ஆகியோரின் உடைமை களைக் கவர்வதிலும், அமானிதச் சொத்துக்களை அப்படியே விழுங்குவதிலும், புகழ்பெற்றவர்களாக இருந்தார்கள்.

வியாபாரங்களில், அளத்தல், நிறுத்தல்களில் மக்களை ஏய்ப்பவர்களாக இருந்தார்கள். இதுபோன்று எண்ணற்ற பல தீமைகளை அவர்கள் வாழ்க்கையின் வெள்ளோட்டமாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்தன.

இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக அவர்களின் தெய்வ நம்பிக்கை அமைந்திருந்தது. 360 விக்ரகங்களை கஃபாவைச் சுற்றி வைத்து அவர்கள் வணங்கினார்கள். அந்த விக்ரகங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கூட்டத்தார் தங்கள் குலதெய் வங்களாகக் கொண்டாடினர். தங்களுடைய செயல்கள் அனைத்துக்கும் அந்த விக்ரகங்கள் அங்கீகாரமளிப்பதாக நம் பினர்; மதுவை அவற்றுக்கு அபிஷேகம் செய்தனர். தங்கள் சூதாட்ட வெற்றி தோல்விக்கு அவைகளிடம் அதிர்ஷ்டம் பார்த்தனர். தங்கள் கொள்ளையிலும், திருட்டிலும், வட்டி வருமானத்திலும், அபகரிப்பிலும், மோசடியிலும் அவற்றுக் குப் பங்கு கொடுத்தனர். அவைகளை திருப்திபடுத்த விழாக் கள் நடத்தினர். அவைகள் முன்பு ஆடிப்பாடி கும்மாள மடித்தனர். தெய்வங்களிலும் உயர்வு தாழ்வு கற்பித்து, அவைகளின் பெருமையை நிலை நாட்டுவதாகச் சொல்லி, ஒரு கூட்டத்தோடு ஒரு கூட்டம் மோதி ரத்தம் சிந்திக்கொண் டனர். அத்தெய்வங்களின் விஷேச அருளைப்பெற குழந்தை களையும், கன்னிப்பெண்களையும் பலி கொடுத்தனர்.

அக்கால அரபுகளின் சமுதாய வாழ்க்கை, அவர்களின் தெய்வ நம்பிக்கையைப் போலவே வரையறையற்றிருந்தது.



ஒருவன் எத்தனை மனைவிகளையேனும் வைத்துக்கொள்ள லாம். எவரையும் மனைவியாகக் கொள்ளலாம். தந்தையின் மனைவி, தந்தைக்குப் பிறகு மகனுக்கும் மீண்டும் மனைவி யானாள். ஒரு குடும்பத்திலுள்ள மூன்று நான்கு சகோதரி களையும் ஒருவனே மனைவியாகக் கொண்டான். பெண் களுக்கு சமுதாயத்தில் எவ்வித உரிமையுமில்லை; அவர்கள் காமக் கருவிகளாகவே கருதப்பட்டனர். பெற்றோரின் சொத் துக்களில் அவர்களுக்கு எவ்வித பங்குமில்லை. பெண் குழந்தைகளைக் பொதுவாக வெறுத்தனர். அவர்களை உயிருடன் புதைத்து விடுவது, சாதாரண நிகழ்ச்சியாக இருந் தது. காமக் களியாட்டங்கள் பெருமையுடன் பேசப்படன.

இம்ரவுல் கைஸ் என்பான் அக்காலத்தில் பிரபல கவிஞனா கவும், இளவரசனாகவும் இருந்தான். அவன் புனைந்த கவி யொன்று, புனிதக் கஃபாவின் தலைவாயலில் தொங்கவிடப் பட்டிருந்தது. அதன் கருத்து, அவன் எவ்விதம் தன் உறவுப் பெண்ணொருத்தியைக் கற்பழித்தான் என்பதாகும். இந்தக் கவிதையை மிகவும் மதித்து அரபுகள் கொண்டாடினர் என் றால் அவர்களின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள லாம்.

ஆணை ஆண் புணர்வதும் பெருமையாகக் கருதப் பட்டது.

உண்பதிலும் அவர்களுக்கிடையில், எதை உண்பது எதை உண்ணாமல் ஒதுக்குவது என்ற கட்டுத்திட்டங்கள் இல்லை. எதையும் உண்ணக் கூடியவர்களாக இருந்தனர்.

சுருங்கச் சொல்லப்போனால், அக்கால அரேபியா, பாபக் கிருத்தியங்களின் பிறப்பிடமாய், தீமைகளின் உறைவிடமாய் தலை நிமர்ந்து நின்றது.

—★—

# 3. அருள்வழி பிறந்தது!

தீமைகளின் தாயகமாய்த் திகழ்ந்த அந்த அரபு நாட்டில் மிக உயர்ந்த குலமெனக் கருதப்பட்ட குறைஷி குலத்தில் அப்துல்லா-ஆமினாவின் கருவில் 'முஹம்மது' என்னும் ஒரு பேரொளியைப் படைத்தான். தாயின் கருவிலிருக்கும்போதே தந்தையையும், ஆறாவது வயதில் தாயையும் இழந்து, பாட்டனார் ஆதரவில் சுதந்திரமாக வளர்ந்த முஹம்மது, இளமையிலிருந்தே தன்னைச் சூழ்ந்திருந்தவர்களின், நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், குணாதிசயங்கள் ஆகியவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டவராக விளங்கினார். குடியை, சூதாட்டத்தை, விபச்சாரத்தை, விக்ரக வணக்கத்தை திருட்டை, கொள்ளையை, கொலையை, மோசடிகளை, வட்டியை வெறுத்தார்.

சின்னஞ்சிறு வயதிலிருந்து அவர் ஒரு முறைகூட குடிக்கவோ, சூதாடவோ, விபச்சாரம் செய்யவோ, விக்ரகங்களின் முன்னால் தலை வணங்கவோ, திருட்டு கொள்ளைகளில் சம்பந்தப்படவோ, கொலை, மோசடிகளில் ஈடுபடவோ வாய்ப்பில்லாமல், இறைவன், முஹம்மதைப் பரிசுத்தமாகப் பாதுகாத்தான். அரபியரின் இயற்கையான மூர்க்க குணங்களுக்கு நேர் எதிராக அன்பும், அமைதியும், சாந்தமும், சகிப்புத் தன்மையும் மிக்கவராகவும் அவர் விளங்கினார். ஏழை எளியோருக்கு உதவுதல், அபலைகள், அனாதைகள் ஆகியோருக்கு ஆதரவாக இருத்தல், பாதிக்கப்பட்டோருக்குப் பரிகாரங்கள் செல்தல், பணிகள் புரிந்த நேரம்போக, மக்களிடமிருந்து ஒதுங்கி இருத்தல், தனித்து இருத்தல் அவருடைய இயற்கைச் சுபாவமாக இருந்தது.

குடும்ப நடைமுறைக் கொவ்வ அவர் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு, அதிலும் நேர்மைமிக்கவராகத் திகழ்ந்ததைக் கண்ட கதீஜா என்ற செல்வச் சீமாட்டி, முஹம்மதின் குணாதிசயங்களால் கவரப்பட்டு அவரைத் திருமணம் செய்துகொள்ள



விரும்பினார். தன்னைவிட பதினைந்து வயது மூப்பாக அப்பெண்மணி இருந்தும், அவர் ஏற்கனவே இருமுறை திருமணம் செய்து விதவையானவர் என்பதை அறிந்திருந்தும், முஹம்மத் அத்திருமணத்துக்கு உடன்பட்டதன் மூலம், அராபிய சமுதாய வாழ்வில், என்றுமில்லாத ஒரு புதுமையை விளைவித்தார்.

திருமணத்துக்குப் பின்னும் அவர் பணிகள் ஓயவில்லை; சிந்தனைகள் சுருங்கவில்லை. பல தினங்கள், வாரங்கள், 'ஹிரா' குகையில் தனித்திருந்தார். கடும் தவத்தை மேற்கொண்டார். தீமைகள் அகல இறைவனிடம் மன்றாடினார். பசித்திருந்து, தனித்திருந்து தன்னை இறைவன் பால் ஒடுக்கினார். எல்லாம்வல்ல இறைவன், இந்த வையகத்தின்மீது கருணை கூர்ந்தான். தன் பேரொளியை, ஜிப்ரயீல் என்ற வானவர் மூலம், முஹம்மதின்மீது, அவருடைய 40 வது வயதில் பாய்ச்சினான். அருள்வழி பிறந்தது! அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் திருத்தூதராய் அவனி காக்கும் பொறுப்பினராய் ஆனார்கள்.

''அரபு மண்ணைமட்டுமல்ல, உலகையெல்லாம் பற்றிப் பிடித்திருக்கும் மாபெரும் தீமைகளுக்கெல்லாம் மூலகாரணம், மக்களின் மௌட்டீகமான தெய்வ நம்பிக்கையே ஆகும்; இறைவன் ஒருவன் அவன் சர்வ சக்தியுள்ளவன்; யாருடைய தேவையுமற்றவன்; யாராலும் அவன் பெறப்படவில்லை; யாரையும் அவன் பெறவில்லை. அவனே எதையும் ஆக்கவும் வல்லவன்; அழிக்கவும் வல்லவன் என்ற உண்மை புரிந்துகொள்ளப்பட்டு விட்டால், உலகின் எல்லா தீமைகளும் அழிந்துவிடும்'' என்று அவர்கள் உணர்த்தப்பட்டார்கள்.

இறைவனின் ஆணைப்படி, இந்த சத்தியத்தை அரபு மண்ணிலிருந்து உலகத்துக்கு, நந்நபி நாதர் முஹம்மது (ஸல்) அவர்கள் பிரகடனப் படுத்தினார்கள். இதையொட்டி ஷைத்தானின் பிடிப்புகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தி,

அவற்றிலிருந்து மாந்தரினம் மீள,வழிவகைகளைத் தொடந்து உபதேசிக்க ஆரம்பித்தார்கள்.

அண்ட சராசரங்களுக்கும் அருள் வழியாய், ஒளிப்பிழம்பாய், அனுப்பப்பட்டுள்ள அண்ணலெம் பெருமான் அஹ்மது நபி (ஸல்) அவர்களின் அருள் நெறியின் மகிமையறியாத வன்னெஞ்சரான அரபிகள் தங்களின் சொந்த விரோதியாகக் கருதி அவர்களைச் சொல்லால் தாக்க ஆரம்பித்து, அது பயனற்றுப் போகவே கல்லால் தாக்கவும் துணிந்தனர். பெருமானாரவர்களின் பொன்மேனியைப் புண்மேனியாக்கினர். உடலின் பல பாகங்களிலிருந்து செங்குருதி கொட்டச் செய்து சிரித்து மகிழ்ந்தனர். பற்களை ஷஹீதாக்கி பரிகசித்தனர். தொழுகையில் சஜ்தாவில் இருக்கின்ற போது ஒட்டகத்தின் சாணக் குடல்களை அவர்களின் முத்தான முதுகில் சுமை ஏற்றிக் குதூகலித்தனர். அவர்களின் நடை பாதைகளிலெல்லாம் முட்களையும் கூரான கற்களையும் பரப்பி வைத்து வேடிக்கைப் பார்த்தனர், பள்ளங்களை வெட்டி வைத்துப் பழிவாங்க முனைந்தனர். பைத்தியக்காரன், சூனியக்காரன் என தூஷணைகள் செய்தனர்.

அருமறையின் திருநபி(ஸல்) அவர்கள், தொல்லைகளைக் கண்டுத் துவண்டுவிடவில்லை, அல்லல்களைக் கண்டு அஞ்சிவிடவில்லை. அனைத்தையும் சகிப்புத் தன்மையோடு ஏற்று சிறிதளவும் மனந்தளராமல், சத்தியத்தை எடுத்துரைத்துக் கொண்டே இருந்தார்கள். மனிதனைப் புனிதனாக்கும் உண்மைகளை உபதேசித்துக் கொண்டே இருந்தார்கள். எப்படியும் மனிதன் வாழலாம் என்ற ஷைத்தானின் மார்க்கத்துக்கு எதிராக, இப்படித்தான் மனிதன் வாழவேண்டும் என்ற இறைவனின் மார்க்கத்தை உறுதியோடு வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். வாய் உபதேசத்தோடு மாத்திரமல்ல, செயலாலும் அவற்றை நிரூபித்துக்காட்டிக் கொண்டிருந்தார்கள். இவற்றைச் சகிக்கமுடியாத அந்த மூடமக்கள் அவர்கள் தலையைத் துண்டிக்கவும், ஆழக் குழிதோண்டி, அதிலே



உயிருடன் புதைக்கவும் சதிகள் பல செய்தனர். வேதனைகளையும், சோதனைகளையும் உச்ச கட்டம் வரை தாங்கி வந்த தாஹா நபி (ஸல்) அவர்களுக்கு, மக்கமா நகரை விட்டே வெளியேற இறைவன் உத்திரவிட்டான். அதன்படி தன்னையே நாடு கடத்திக் கொண்டார்கள். மதீனமா நகரைச் சென்றடைந்த அவர்கள் தொடர்ந்து சத்தியப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள். தங்களிடமிருந்து தப்பித்துவிட்டதைக் கண்ட அவ்வன்னெஞ்சர்கள், தங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ள, தங்கள் நாட்டிலேயே வாழ்ந்த, அண்ணலாரின் அருமைத் தோழர்களை—சஹாபா பெருமக்களை—சரித்திரம் காணாதவிதத்தில், பயங்கரமான சித்திரவதைகள் செய்து மனமாற்றம் ஏற்படுத்த முயற்சித்தனர். அதிலும் அவர்களால் வெற்றி காணமுடியவில்லை.

ஆத்திரமும் ஏமாற்றமும் அடைந்த அந்தக் காட்டு அரபிகள், படை எடுத்துச் சென்றேனும் அண்ணலார் அவர்களை அழித்துவிட வேண்டும் என்று பன்முறை முயற்சித்தார்கள். ஒவ்வொரு முயற்சியிலும் தொடர்ந்து தோல்வியே கண்டார்கள். இறுதியில் மாபெரும் தோல்விக்கு அவர்கள் ஆளாக வேண்டிவந்தது.

''நபியே! சத்தியம் தோன்றிவிட்டது. அசத்தியம் அழிந்தேவிட்டது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும். என்று கூறுவீர்களாக!'' (17; 84)

என்ற இறைவனின் திருவசனம் அவர்களில் அறிவுடைய மக்களைச் சிந்திக்கச் செய்தது. சத்தியப் பேரொளியைச் சதியினால் இனி சாய்த்துவிட முடியாது என்பதைப் புரியத் தொடங்கினர்.

அருட்பிழம்பாம் அண்ணலெம்பெருமான் அஹ்மது ரசூல் (ஸல்) அவர்களின் அருள் வழியை உற்று நோக்கினர். மனிதன் மனிதனாக வாழ்வதற்குள்ள வழிவகையே அது என உணரத் தலைப்பட்டனர். இழிந்த வாழ்க்கையில் கழிந்த நாட்களை எண்ணி வெட்கித்தனர். பெருமானார் (ஸல்) அவர்

களின் பகுத்தறிவு போதனைகளின் உண்மைகளை உவப்புடன்
ஏற்க முற்பட்டனர். அல்லாஹ்வின் முன் சிரம் தாழ்த்தினர்.

பாபமென்னும் போர்வையால் மூடப்பட்டிருந்த அவர்
களின் பகுத்தறிவு, அண்ணலாரின் அற்புத அறிவுரையால்
திரையைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டது. ஆரம்பத்தில்
கசப்பாக இருந்த உண்மைகள். இப்பொழுது பேரின்பமாக
மாறின. அஞ்ஞான இருளில் ஆண்டாண்டு காலமாக அடை
பட்டிருந்த அராபிய மக்கள், இணையற்ற இறைவனின்
இஸ்லாம் என்னும் பேரொளியால் கரை சேர்க்கப்பட்டார்கள்.
உலகின் மிகப்பெரும் அக்ரமக்காரர்களாய், அறிவற்ற முரடர்
களாய் விளங்கிய அராபியர்கள், அறிவின் ஜோதியாய்,
அமைதியின் பிம்பமாய், அகில உலகும் கூர்ந்து நோக்கும்
அற்புத ஜீவனாய் போற்றப்படும் வண்ணம் உயர்வு
பெற்றார்கள்.

ஷைத்தானுடைய இருட்பாதை அடைபட்டது!
இறைவனின் அருட்பாதை திறந்தது!

## 4. மதுவெனும் மாயப் பிசாசு!

ஷைத்தானுடைய இருட்பாதை அடைப்பட்டது என்றால்
அது திடீரென ஒரு நாள் மந்திரத்தால் நடைபெற்றுவிட்ட
தல்ல. அண்ணல் நபி (ஸல்) அவர்கள், நபிப்பட்டம் பெற்று
23 ஆண்டுகள் தொடர்ந்து போராடி, ஷைத்தானின் அரண்
மனைக் கதவுகளை ஒவ்வொன்றாக அடைத்தார்கள். மிகவும்
சகிப்புத்தன்மையோடும், திடசித்தத்தோடும், அறிவு நுட்பத்
தோடும் அந்தச் சாதனைகளைப் புரிந்தார்கள்.

தீமைகளிலெல்லாம் மிகப் பெருந்தீமையாக, அதே சம
யத்தில் மிகவும் சர்வ சாதாரணமான நடைமுறையாக, குடிப்
பழக்கம் அரபு மக்களை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது.
மதுவருந்தாவிட்டால் மனிதன் உயிர்வாழ முடியாது என்ற
எண்ணத்தில் அவர்கள் மூழ்கியிருந்தார்கள்.



ரசூலே கரீம் முஹம்மது (ஸல்) அவர்கள், விக்ரஹ
வணக்கத்தை எதிர்த்து, ஏக தெய்வக் கொள்கையை
வலியுறுத்தியபோது, ஆரம்ப காலத்தில் மிகவும் ஆத்திரங்
கொண்டு அநியாயங்கள் பலச் செய்த அரபிகள், சில
ஆண்டுகளுக்குள் உள்ளபடி உண்மையை உணர்ந்து,
ஒரு இறைவனை ஏற்றுக் கொண்டு விட்டனர். ஆனாலும்,
அவர்களை அடிமைப்படுத்தியிருந்த மதுவருந்தும் பழக்கத்தை
அவர்களால் சுலபமாக விட்டுவிட முடியவில்லை. மதுவெனும்
மாயப்பிசாசு அவர்களை ஒரேயடியாக மயக்கிவைத்திருந்தது.
சூதாட்டமும் அவர்களுக்குக் கவர்ச்சியாகவே இருந்தது.

மதுவுக்கு உள்ள மிகப்பெரும் கவர்ச்சி யாதெனில், அதன்
புறத்தோற்றம் மிகவும் அழகாகத் தென்படுவதேயாகும், மது
தயாரிக்க உபயோகமாகும் பொருட்கள், மனிதனுக்கு மிகவும்
பிரியமான பொருட்களாக இருப்பதுமாகும். உயர்ந்த
பேரீச்சம்பழங்கள், முற்றிய திராட்சைக் கனிகள், மற்றும்
சுவையான பழங்கள், பேரீச்சம் பாளையின் சுத்தமான பால்
ஆகியவைகளே மது தயாரிக்க உபயோகமாகின்றன. இவை
களைத் தீமையானவை என்று எப்படிச் சொல்ல முடியும்?
மேலும் மதுவருந்தினால் உடம்புக்கு மிகவும் வலிவும், தெம்பும்
ஊட்டுவதைப் பிரட்தியட்சமாகக் காணும்போது அதைக்
கெட்டது என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இதைப்பற்றிப்
பெரிதும் விவாதித்தனர். இறைவன் தன் திருவசனத்தின்
மூலம் இதற்கு அழகாக பதில் கூறினான்.

''நபியே! சாராயத்தைப் [பற்றியும், சூதாட்டத்தைப்
பற்றியும் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர்கூறும்:
இவ்விரண்டிலும் பெரும்பாவங்களுமிருக்கின்றன. மனிதர்
களுக்கு சில பிரயோஜனங்களுமிருக்கின்றன. ஆனால், அவை
களிலுள்ள பாபம் பிரயோஜனங்களைவிட மிகப் பெரியவை''
(2: 219)

என்ற இறைவசனம், அவர்களின் வீண் விவாதங்களுக்கு முடிவை உண்டாக்கியது, அல்லாஹ்வின் அருள் வசனம் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. நல்ல உருவத்துக்குள் புகுந்துகொண்டிருக்கும் மதுவெனும் மாயப் பிசாசின் திருவிளையாடல்களைச் சிந்திக்கத் தொடங்கினர்.

படைப்புகளிலெல்லாம் சிறந்தவன், உயர்ந்தவன் மனிதன். பகுத்தறிவு என்ற சிந்திக்கும் திறனைப் பெற்றவன் மனிதன் ஒருவனே, அவனுக்குள்ள இவ்வறிவால், எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றிருக்கிறான். எந்தவொரு பிரச்னையையும்பற்றி சிந்தித்துச் சீர்தூக்கி பார்க்கும் ஆற்றல் பெற்றிருக்கிறான். இதைச் செய்யலாம் இதைச் செய்யக்கூடாது என்று பிரிந்து உணரும் சக்தி இப்பகுத்தறிவால் அவனுக்கு ஏற்பட்டுள்ளது.

இவன் தனக்குச் சொந்தமான பெண், மனைவி, தாய், சகோதரி, மகள் ஆகிய ஒவ்வொருவரிடமும் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும் என்ற உணர்வைப் பகுத்தறிவு அளிக்கிறது. இவர்கள் அன்னியப் பெண்கள்; நண்பனின் மனைவி, அண்டை வீட்டுக்காரர்கள், கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களிடம் எவ்வளவு மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும் என்று பகுத்தறிவு ஒழுங்குணர்வை அளிக்கிறது. இவன் நண்பன், இவன் விரோதி என்று புரியவைத்து யார் யாரிடம் எவ்வளவு பழகிக்கொள்ள வேண்டும் என்று பகுத்தறிவு அவனை வழி நடத்துகிறது.

தாய் தந்தையர்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? கட்டிய மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? பெற்ற பிள்ளைகளுக்கு தான் பட்டுள்ள கடன்கள் என்ன? உற்றார் உறவினர்களுக்குத் தான் செய்ய வேண்டிய உதவிகள் என்ன? சமுதாயத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகள் என்ன என்பதை யெல்லாம் அவ்வப் போது உணர்த்தக்கூடிய ஆற்றல் மிக்கது பகுத்தறிவு.

மனிதனையே இயக்கும் சூட்சும இயந்திரம் இந்தப்பகுத்தறிவு.



இத்தகு பெருமைக்குரிய வல்லமையுடைய பகுத்தறிவை ஒரு கோப்பை மதுவினால் சுக்கு நூறாக உடைத்துவிட முடியுமென்றால், மதுவெனும் மாயப் பிசாசு எத்தகைய பயங்கரமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்!

மதுவருந்தி மதி மயங்கிய] மனிதன், அவன் மதுவருந்துவதற்கு முன் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும், போதையின் போது வடிகட்டிய முட்டாளாகி விடுகிறான்: மூர்க்கனாகி விடுகிறான். மது மயக்கத்தின் போது காமம் தோன்றின், அவனுக்கு மனைவிக்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. தாய், தங்கை, அண்ணி, அக்காள் என்ற வேறுபாடுகளெல்லாம் புரிவதில்லை. சகோதரிக்குச் சமமான நண்பனின் மனைவி, அன்பாகப் பழகும் அண்டை வீட்டார் யாரும் அவனுக்கு அடையாளம் தெரிவதில்லை. சமுதாயச் சுற்றுச் சூழ் நிலைகளின் மரியாதை எதுவும் அவனுக்குப்புலப்படுவதில்லை. மானம், சீலம், ஒழுங்கு எதுவும் அவன் நினைவுக்கு வருவதில்லை. அபாயகரமான மிருகமாகிவிடுகிறான். அவன் செய்யும் தவறுகளினால் பயங்கரமான அனர்த்தங்கள் பல நேர்ந்துவிடுகின்றன. பகைமை, அடிதடி, கொலை, கோர்ட் என்றெல்லாம் ஏற்பட்டுவிடுகின்றன. மிகப் பெரும் பொருள் நஷ்டமும் மான நஷ்டமும் உண்டாகி விடுகின்றன.

மதுவுக்கு அவன் தொடர்ந்து அடிமையாகி விடுகின்ற போது, நியாயம், தர்மம் எதுவும் அவனுக்குப் புரிவதில்லை. மனைவி மக்களின் பட்டினிப் பசி அவனுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. முறையாகப் பொருளீட்டும் நெறிமுறைகளில் அவனுக்கு ஆர்வம் குறைந்து விடுகின்றது. குறுக்கு வழிகளில் செல்வத்தைக் குவிக்க, எந்தக் குற்றத்தையும் செய்ய அவன் தயாராகிறான். முன்னோர்களின் சொத்துக்கள் இருந்தால் அவற்றைக் குடித்தே அழிக்கிறான். தன் சம்பாத்தியத்தையும் அவன் நாசப்படுத்துகின்றான்.

நல்ல பொருள்களில் தயாரிக்கப்படுவது தான் மதுவினங்கள், ஆனால் அவை நல்லதைச் செய்வதைவிட அதிகமான

தீமைகளையே புரிகின்றன. மதுவினால் அழிந்தவர்களே அதிகம்.

ஆதலால் தான், ''அனைத்துப் பாவங்களுக்கும் தாய் மது'' என உலகினை உய்விக்க உதித்த உத்தம நபி(ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள். மது அரக்கனை தனது மதி வலிமையால் வென்றார்கள். அதிகார பலத்தால் அல்ல. ஆயுதங்களின் உதவிகளைக் கொண்டல்ல, சிறைச்சாலைகளின் கடுமையினால் அல்ல, சட்டங்களின் பயமுறுத்தலால் அல்ல, அன்பால், அறிவால், இறைவனின் எச்சரிக்கையால், மதுவெனும் மாயப் பிசாசை தனது 'உம்மத்தார்' களிடமிருந்து விரட்டியடித்தார்கள். ஒரு நாள் அவர்கள், மது 'ஹராம்' ஆக்கப்பட்டு விட்டது என்று பிரகடனப்படுத்தியபோது, ஒவ்வொரு வீட்டிலிருந்தும் குடம் குடமாய் வெளியே கொண்டு வந்து தாங்களே தெருக்களில் போட்டு உடைத்தார்கள். அரபு நாட்டின் தெருக்களில் மது ஆறாய் ஓடியது.

## 5. மதுவோடு நடத்திய மறைவழிப் போர்!

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில், மது பொதுவாகத் தடைசெய்யப்படவில்லை. மதுவின் தீமைகள் மென்மையாக மக்களுக்குத் தொடர்ந்து உணர்த்தப்பட்டன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதுவைத் தம் கைகளாலும் தீண்டுவதில்லை என்ற உண்மை அவர்களுக்கு அண்ணலாரின் பேரில் ஒரு மரியாதையையும், அச்சப்பாட்டையும் உண்டாக்கியது. சிறிது சிறிதாக அறிவொளி பெற்றவர்களின் உள்ளத்தில், மதுவினால் ஏற்படும் தீமைகள் குறுகுறுத்துக் கொண்டிருந்தன. சமுதாயத்தில் மதுவினால் ஏற்படும் கொடுமைகளை அவர்கள் சிந்தித்தபோது, வேதனைப்படத் தொடங்கினர். மதுவருந்துவது சரியல்ல என்ற உணர்வுக்கு உள்ளாகினர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைப்பற்றிக்



கடுமையாக எதிர்ப்பு எதையும் தெரிவிக்கவில்லையே என யோசித்தனர்.

உண்மையில், இஸ்லாத்தின் ஆரம்பப் பிரச்சாரம் ஏக இறைவனைப் பற்றியில்லாமல், மதுவின் தீமையைப் பற்றித் தொடங்கியிருந்தால், நிச்சயமாக, அம்மக்கள் ஏக இறைவனையே சிறிதுகூட ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். தாங்கள் மது அருந்துவதற்கு, ஏகத்துவம் குறுக்கே நிற்கும் என்று தெரிந்திருந்தால், குடிகாரர்கள் அனைவரும் ஒன்று கூடி, தங்களின் இன்ப வாழ்வுக்கு எதிராகவுள்ள ஒரு இறைவன் வேண்டாம் என்று முடிவுகட்டியிருப்பார்கள். அந்த அளவுக்கு மதுவின் பிடிப்பு அவர்களிடம் உறுதியாக இருந்தது. ஆதலால் நாயகம் (ஸல்) அவர்கள் மதுவருந்துதலை, ஆரம்பகாலத்தில் தீவிரமாக எதிர்க்கவில்லை. அதன் தீமைகளை மாத்திரம் இலேசாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பொறுத்து முற்றிலும் வெறுப்பவர்களாகவும், ஒதுங்கியிருப்பவர்களாகவும் இருந்தார்கள்.

ஒரு சமயம், ஹஜ்ரத் உமர் (ரலி) ஹஜ்ரத் முஆத் (ரலி) ஆகியோர் தலைமையில் அன்சாரிகள் சிலரும் சேர்ந்து வந்து, அண்ணல் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தனர்.

''அல்லாஹ்வின் திருத்தூதரவர்களே! எங்களின் அறிவை அழித்து, செல்வத்தைச் சீர்குலையச் செய்து, எங்களுக்கிடையில் திடீர் திடீரென்று, கோபத்தையும் குரோதத்தையும் தூண்டி விட்டுக் கொண்டிருக்கும், மதுவருந்துதலைப்பற்றி நீங்கள் ஒரு நல்ல தீர்ப்பு வழங்குவீர்களாக!'' என்று அவர்கள் கேட்டனர்.

அருமை நாயகம் (ஸல்) அவர்கள், இந்தத் தோழர்களின் வேண்டுகோளுக்கு உடனடியாக பதில் சொல்ல மிகவும் தயங்கினார்கள். அவர்களுடைய வாயிலிருந்து வரும் தீர்ப்பு, இஸ்லாத்துக்கு எதிர்ப்பாகக்கூட திசை திருப்பி விடப்படக் கூடுமாதலால், அவர்கள் மிகவும் பொறுமையோடு வல்ல இறைவனிடம் துஆ இறைஞ்சினார்கள். இப்போதுதான்

மதுவைப்பற்றிய முதலாவது திருவசனமாக அல்லாஹ், ''நபியே! சாராயத்தைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறும்: அவ்விரண்டிலும் பெரும் பாபமிருக்கின்றது; மனிதர்களுக்கு (ச்சில) பயன்களுமிருக்கின்றன. ஆனால் அவ்விரண்டிலுள்ள பாவம், அவ்விரண்டிலுள்ள பயனைவிட மிகப்பெரிது'' (2: 219) என்று கூறியதை, பெருமானாரவர்கள் பிரகடனப் படுத்தினார்கள். ஆயினும் மதுஅருந்துதல் கூடாது என்று அவர்கள் தடை செய்யவில்லை.

இந்தத் திருவசனத்தின் மென்மையையும் அதே சமயம் ஆழ்ந்த கருத்தையும் சிந்திப்போருக்கு, ஒரு மாபெரும் தீமையை எதிர்த்து எவ்வளவு நளினமாக இறைவன் போதிக் கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மதுவருந்துவதிலும், சூதாட்டத்திலும் மாபெரும் தீமை களே மிகைத்திருக்கின்றன; அவை பெரிய பாபங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன; அவைகள் இறைவ னுக்கும், இறைத் தூதருக்கும் பிடிக்காதவை எனப் புரிந்து கொண்டவர்கள் அவைகளை விலகிக் ஒதுங்கிக்கொள்ளத் தொடங்கினர். அவற்றில் சில நன்மைகள் இருக்கின்றன; ஆதலால்தான் இறைவன் அவற்றை விட்டுக்கண்டிப்பாக வில கச்சொல்லவில்லை என்று தங்களைத் தாங்களே சமாதானம் செய்து கொண்டவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை.

அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களும், இறை வச னத்தின் எல்லையைச் சிறிதளவும் கடந்து, அந்தத் தீமை யைப்பற்றி அதிகமாக எதுவும் கூறிவிடவில்லை.

ஒரு சமயம் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரலி) அவர் கள், முஸ்லிம்களுக்கு, குறிப்பாக நாயகத் தோழர்கள் சில ருக்கு ஒரு விருந்து கொடுத்தார்கள். அதில் உயர் தரமான உணவு வகைகள் பரிமாறப்பட்டன. அத்துடன் உயர்ந்த மதுவகைகளும் அளிக்கப்பட்டன. அக்காலத்தில் மதுஇல்லா மல் எந்த விருந்தும் நடைபெறுவதில்லையாதலால் அதுபற்றி



எந்தப் பிரச்னையும் எழவில்லை. எல்லோரும் உணவுக்குப் பின் மது அருந்தினார்கள். மனம் மகிழ்ந்தார்கள்.

மஃரிப் நேரத்துக்குச் சிறிது முன்பாக அவர்களின் விருந்து முடிவடைந்தது. தொழுகைக்காக அறிவிப்புச் செய் யப்பட்டவுடன், எல்லோரும் 'உளுச்' செய்து ஜமா அத்தாகத் தொழுகைக்கு தயாராயினர். அவர்களில் ஒரு பெரியவர் இமாமாக முன்னின்று தொழுகையை நடத்தினார். மற்றவர் கள் அவர் பின் வரிசையாக நின்றனர்.

இமாம் தொழுகையை ஆரம்பஞ்செய்து, 'சூரத்துல் பாத்திஹா'வை ஓதி முடித்துவிட்டு, அடுத்த சூராவாக, 'குல் யா அய்யுஹல் காபிருன்' என்ற சூராவை ஓத ஆரம் பித்து அதிலுள்ள 'லா' என்ற சொல்லை விட்டு விட்டு ஓதி முடித்தார்.

அதாவது: ''குல் யா அய்யுஹல் காபிருன லா அஃபுது மாதஃபுதூன் வலா அன்த்தும் ஆபிதூன மாஅஃபுது'' (ஓ! காபிர்களே! நீங்கள் வணங்குவதை நான் வணங்க மாட்டேன்; நான் வணங்குவதை நீங்கள் வணங்கமாட்டீர்கள்) என்று ஓது வதற்கு பதிலாக, ''குல்யா அய்யுஹல் காபிருன அஃபுது-மாதஃபுதூன்; வ அன்த்தும் ஆபிதூன மாஅஃபுது'' (ஓ! காபிர்களே! நீங்கள் வணங்குவதை நான் வணங்குவேன்; மேலும் நான் வணங்குவதை நீங்கள் வணங்குவீர்கள்) என்று ஓதி முடித்து விட்டார். தொழுகை முடிந்து விட்டது. ஆனால் தவறான கருத்துடன் திருக்குர்ஆனின் வசனங்கள் ஓதப்பட்டு விட்டதால் யாருக்கும் தொழுகை கூடாமல் போய்விட்டது.

இது போன்ற சில சம்பவங்கள் ஆங்காங்கே நடக்க ஆரம் பித்தன. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காதுகளுக்கும் விஷயங்கள் எட்டிக்கொண்டிருந்தன. இந்த சமயத்தில் தான் அடுத்தக்கட்டமான அல்லாஹ்வின் திருவசனம் வெளிப் பட்டது.

''விசுவாசிகளே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்துகொள்ள முடியாதவாறு நீங்கள் போதையாயிருக்கும்போது தொழுகைக்காகச் செல்லாதீர்கள்.'' (4: 43)

இந்த இறைவசனம், ஒரு இறைவனை விசுவாசித்த மக்களில் குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கிடையில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கிவிட்டது. ''மதுவருந்துவதில் பிரயோஜனத்தைவிட பாபம் அதிகமாக இருக்கிறது'' என்ற வசனத்தின் தாத்பர்யத்தை உணர்ந்து குடிப்பதை உடனே நிறுத்திவிட்ட ஒரு சாரார், எவ்வித குறைபாட்டுக்கும் இடமில்லாமல் இறைவணக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். மதுவையும் அருந்திக்கொண்டு இறைவணக்கத்திலும் ஈடுபட்டவர்கள், மேற்கூறிய வசனத்தின் மூலம் இறைவணக்கம் செய்வது தடுக்கப்பட்டார்கள். இதன் மூலம், இறைவன் முக்கியமா? மது முக்கியமா? என்ற பிரச்சனை எழுந்தது. ஏற்கனவே இறை நம்பிக்கையில் உறுதிப்பட்டுவிட்ட அந்த மக்களால், இறைவனைப் புறக்கணிக்க முடியவில்லை.

ஆதலால் மதுவைக் குறைத்துக்கொள்ள முற்பட்டனர். சிலர் பகல் முழுவதும் மதுவருந்தாமல் இருந்துவிட்டு, இரவு 'இஷா' தொழுகைக்குப்பின் குடித்துவிட்டுத் தூங்கச் செல்வோராக இருந்தனர். சிலர் 'பஜ்ர்' தொழுகையை முடித்துவிட்டு மதுவருந்தி 'லுஹர்' தொழுகைக்குள் போதைத் தெளிந்து தொழக்கூடியவராக இருந்தார்கள். எனினும், லுஹருக்கும் அசருக்கும் இடையிலும், அஸருக்கும் மஃரிபுக்கும் இடையிலும், மஃரிபுக்கும் இஷாவுக்கும் இடையிலும் மதுவருந்தும் பழக்கத்தை அநேகமாக எல்லா முஸ்லிம்களும் கைவிட்டு விட்டனர். ஒரு நாளைக்கு ஐந்து நேரம் ஆறு நேரம் குடித்துக்கொண்டிருந்த மக்களுக்கிடையில், நமக்கு நாமே இந்தக் கட்டுப்பாடுகளைச் செய்து கொண்டது மிகப் பெரிய புரட்சிகளில் ஒன்றாகும்.

ஒரு சமயம், உத்பான், இப்னு மாலிக் (ரலி) அவர்கள் ஒரு பெரிய விருந்தொன்று கொடுத்தார்கள். அதற்கு நபி



பெருமான் (ஸல்) அவர்களின் உற்ற தோழர்கள் பலரையும் அழைத்திருந்தார்கள். அவர்களில் ஸஃதிப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். பொதுவாகவே, பகல் நேரங்களில் மதுவருந்தும் பழக்கத்தை முஸ்லிம்கள் நிறுத்தி விட்டதாலும், இரவு இஷாவுக்குப் பிறகு மதுவருந்துவது குற்றமல்ல என்று சிலர் நினைத்துக்கொண்டிருந்ததாலும், விருந்துகளெல்லாம் இரவு இஷாவுக்குப் பிறகே நடக்கத் தொடங்கின. அவற்றில் மது வகைகளும் தாராளமாக வினியோகிக்கப்பட்டன. அத்தகைய ஒரு விருந்தாகவே இவ் விருந்தும் அமைந்திருந்தது.

வந்திருந்தவர்களெல்லாம் மதுவருந்திக்கொண்டே விருந்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உண்டனர். மெதுமெதுவாக போதை ஏறிக்கொண்டிருந்தது. அது உச்சக் கட்டத்துக்கு வந்தவுடன், மதிமயக்கத்தில் தங்களின் திறமைகளையும், குலப்பெருமைகளையும் பேசத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து குறைஷி குலத்தாரை உயர்த்தியும், அன்சாரிகளை (மதீனாவாசிகளை) இகழ்ந்தும் கவிதைகள்பாடி கேலி செய்தனர்,

இதனால் ஆத்திரங்கொண்ட அன்சாரிகள், தங்களை இழிவுபடுத்திக் கவிதை பாடியவரைத் தாக்கினார்கள். அவர்களும் பதிலுக்குத் தாக்கவே விருந்து அடிதடியில் முடிந்தது. ஒரு அன்சாரி, ஒட்டகையின் எலும்பை எடுத்து, தன் பலங்கொண்ட மட்டும், ஸஃதிப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்களைத் தாக்கிவிட்டார். அவர்களுக்கு மண்டை உடைந்து உதிரம் கொட்ட ஆரம்பித்துவிட்டது.

ரத்தம் வழிந்த நிலையிலேயே அவர்கள் மாநபி (ஸல்) அவர்களின் சந்நிதானத்துக்கு வந்து சேர்ந்து தனக்கு நீதி வழங்குமாறு முறையிட்டார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து அன்ஸாரிகளும் வந்து நடந்த விபரத்தைக் கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்தில், பெருமானார் (ஸல்) அவர்களோடு ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும் உடனிருந்தார்கள்.

இரு தரப்பாரின் வாக்கு மூலங்களை கவனித்துக்கொண்டிருந்த ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம்களிடையே இப்படியொரு துக்ககரமான நிகழ்ச்சி நடந்துவிட்டதைக்கண்டு வேதனைமிக்கவர்களாய், ''இறைவா! மதியைக் கெடுக்கும் இம்மதுவின் விஷயத்தில் எங்களுக்கு உனது தெளிவான, அழகிய முடிவை எடுத்துக்காட்டுவாயாக!'' என உள்ள முருகிப் பிரார்த்தனை செய்தார்கள்.

அவர்களுடைய பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்தவனாக பெருமானார் (ஸல்) அவர்களின் திருவாயிலிருந்து தனது வேதவசனத்தை வெளிப்படுத்தினான்,

''விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும், சூதாட்டமும் விக்ரஹ ஆராதனையும், அம்பெறிந்து குறி கேட்பதும், ஷைத்தானுடைய அருவருக்கத் தக்க வேலைகளிலுள்ளவையாகும். ஆகவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (அதனால்) நீங்கள் சித்திபெறுவீர்கள்.''

''மதுபானத்தைக்கொண்டும் சூதாட்டத்தைக்கொண்டும், உங்களுக்கிடையில் விரோதத்தையும், குரோதத்தையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வின் ஞாபகத்திலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவுமே, நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். ஆகவே அவைகளிலிருந்து நீங்கள் விலகிக்கொள்வீர்களா?

இந்தத் திருவசனங்களைக் கேட்ட ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், சப்தமிட்டுக் கதறி, ''யா அல்லாஹ்! நாங்கள் அவைகளை விட்டும் விலகிக் கொண்டோம்'' என்று குரல் கொடுத்தார்கள்.

இத்திருவசனங்களின் வெளிப்பாட்டுக்குப் பிறகுதான், மதுபானம் மற்றும் மதிமயக்கும் போதைப்பொருள்கள் எதையும் முஸ்லிம்கள் சாப்பிடுவது 'ஹராம்' எனத் தடைசெய்யப்பட்டது. அண்ணல் நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் திருவாயினால், மது வருந்துவது 'ஹராம்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டபோது, அதை எதிர்த்தோ மறுத்தோ சொல்வார் யாருமில்லை. அதற்கு மாறாக முஸ்லிம்கள் அனைவரும் பெரு மகிழ்ச்சியோடு அந்த ஆணையை வரவேற்றனர். அதற்கு அறிகுறியாகத் தத்தம் வீடுகளில் சேமித்து வைத்திருந்த, மதுக்குடங்களை தெருக்களில் கொண்டுவந்து போட்டுடைத்தனர். குடித்துக்கொண்டிருந்தவர்களின் காதுகளில் அச்செய்தி எட்டியவுடன், பாதி குடித்ததோடு, கோப்பைகளைத் தூக்கி வீசினர். விருந்துகளிலெல்லாம் மது அறவே ரத்து செய்யப்பட்டது. மக்கள் மனம் திருந்தினார்கள்.



ஷைத்தானின் மூல ஆயுதமான மதுவோடு, மறைமோதிய போராட்டம் மகத்தான வெற்றிகண்டது.

# 6. மதுவுக்கு எதிராக நபிபெருமான் (ஸல்)

மதுவுக்கு முன்னால் மக்கள் உள்ளத்தில் இறை நம்பிக்கையும், அச்சமும் புகுந்துவிட்டதால், அல்லாஹ்வும் அவன் திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் விடுத்த ஆணைகளை, நன்னம்பிக்கையுடைய முஸ்லிம்கள் சிரமேற்றாங்கி, மதுவை விட்டு ஒதுங்கி விட்டார்கள். ஆயினும், ஈமான் வலுப்படாதவர்கள், உள்ளரங்கத்தில் காபிர்களாக இருந்தவர்கள், மதுவுக்கு முற்றிலும் பலியாகி, குடிக்காவிட்டால் செத்துப்போய் விடுவோம் என்ற தவறான எண்ணத்தில் மூழ்கிக் கிடந்தவர்கள் ஆகியோரால் ஒரேயடியாக மதுவை விட்டு விலகிக் கொள்ள முடியவில்லை. அவர்கள் ரகசியமாகக் குடிக்க ஆரம்பித்தார்கள். சிலர் குடித்து விட்டு பகிரங்கமாகவும் நடமாட ஆரம்பித்தனர்.

இதுவும் ஒரு விதத்தில் நல்லதாகவே போய்விட்டது. ஏனெனில், மதுவின் தீமைகளை விளக்கி, அருமை நாயகம் (ஸல்) அவர்களின் திருவாயினால் பல அறிவிப்புக்கள் வெளிவரவும், உத்தம சஹாபா பெருமக்கள் அதை விளக்கி மக்களி

டம் தொடர்ந்து பிரச்சாரங்கள் செய்யவும் பல வாய்ப்புகள் ஏற்பட்டன.

அண்ணலெம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்:

★ "போதையூட்டும் எந்தப் பொருளும்; அது கொஞ்சமானாலும் அதிகமானாலும் முற்றிலும் 'ஹராம்' அவை விலக்கப்பட்டிருக்கிறது."

★ "ஒரு முஃமின் (உண்மை முஸ்லிம்) முஃமினாக இருக்கும் நிலையில் (நிச்சயமாக) மது (மற்றும் மயக்கப் பொருட்கள் எவையும்) உட்கொள்ளமாட்டார்."

★ "ஒரு முஸ்லிம் மது அருந்தினால் தான் அணிந்திருக்கும் சட்டையைத் தலைவழியாகக் கழட்டுவதைப் போல, இறைவன் அவரது ஈமானைக் கழட்டி விடுகின்றான்" என நாயகம் (ஸல்) நவின்றார்கள். (ராவி: அபூஹுரைரா)

★ "ஒரு முஸ்லிம் மதுவருந்தும்போது அவனுடைய ஈமான் அவனைவிட்டு வெளியேறி அவன் தலைக்கு மேல் சென்று குடையைப் போன்று நிற்கிறது. அவன் அந்த (துர்ச்) செயலைவிட்டும் (தவ்பாச் செய்து) விலகிவிட்டால் மீண்டும் அந்த ஈமான் அவனை வந்தடைந்து விடுகிறது.

★ "சுவர்க்கத்தின் நறுமணம் 500 வருட தொலை தூரத்திற்கு வீசுகின்றது- மதுபானம் சாப்பிடுவோர் அதன் வாடையைக் கூட நுகர முடியாதவர்களாக இருக்கின்றனர்."

★ "மது அனைத்து பாவத்திற்கும் திறவுகோல். பூட்டப்பட்ட அறைக்குள் நிறைந்து கிடக்கும் பொருட்களை எடுப்பதற்கு திறவு கோல், சுலபமான ஒரு பொருளாக இருப்பதைப்போல"

★ தீய செயல்கள் அனைத்துக்கும் மது தாய்.

# 7. மதுவும் மறுமை வாழ்வும்

பெருமானார் (ஸல்) அவர்களின் கருத்துக்களைத் தழுவி, அறிஞர் பெருமக்களெல்லாம் உபதேச விளக்கங்களை மேற்கொண்டனர்.

★ "ஒரு முஸ்லிம் நான்கு தடவைகள் மதுவருந்துவானாகில் அவன் இறைவனின் கோபத்திற்குள்ளாகி அவனின் பெயரை நரகவாசிகளின் பட்டியலில் எழுதப்படுகிறது. தவறை உணர்ந்து 'தவ்பாச்' செய்யாத அவனின் தொழுகை, நோன்பு, தர்மம் மற்றும் நற்செயல்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்படுவதில்லை. அவனுக்கு நரகத்தில் ஒரு தனி இடம் தயார் செய்யப்படுகிறது என எம்பெருமான் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ஆகையால், குடிகாரன் இறந்து விட்டால், குழிதோண்டி அவனைப் புதைத்து விட்டபின், மீண்டும் தோண்டிப்பாருங்கள். அவனின் முகம் திசை (கிப்லாவை) விட்டும் திரும்பி இருக்கவில்லையாயின் என்னைக் கொன்று விடுங்கள்" என ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் (ஆவேசத்துடன்) கூறினார்கள்.

ஃ "மனிதனின் வயிற்றினுள் மது சென்று விடுமேயானால் அவனது ஏழு நாட்களின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வயிற்றுக்குள் சென்ற மது மதியை மயக்கி விடுமானால் மற்றும் 40 நாட்களில் அவன் மரணமடையும் நிலை ஏற்பட்டு விடுமானால் அவன் காபிராக மரணமடைகின்றான். அவன் (அதற்குள் தான் செய்த தவறை உணர்ந்து இறைவனிடம் கண்கலங்க மன்றாடி) தவ்பாச் செய்துவிட்டால், அவனுடைய தவ்பாவை இறைவன் ஏற்று பாவத்தை மன்னித்து விடுகின்றான். தவ்பாச் செய்த பின் மீண்டும் மதுவருந்தினால் அவனுக்கு இறைவன் மறுமை நாளில் 'தீனத்துல் கபாலா' என்னும் பானத்தைக் குடிப்பாட்டச் செய்வான்" என ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் (தங்களுக்கு எதிரில் அமர்ந்திருந்த) தோழர்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். அதைக்கேட்ட தோழர்கள், "அல்லாஹ்

வின் திருத்தூதரவர்களே! தீனத்துல் கபாலா என்றால் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''நரக நெருப்பில் கரிக்கப்படுகிறபோது அவர்களின் உடலிலிருந்து வழிந்து உருகியோடும், ஊன், இரத்தம், சீழ் சலம்'' என்று பதில் கூறினார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃ ''மது அருந்துபவன் மறுமையில் செத்து நாறிய பிணத்தைவிட கடுமையான துர்நாற்றமுடையவனாக எழுப்பப்படுவான். அதன்பின் அவனது கழுத்தில் ஒரு கூஜாவும் கரத்தில் ஒரு கோப்பையையும் தொங்கவிடப்படும். அவன் உடம்பெல்லாம் பாம்புகளும் தேள்களும் நிரம்பி இருக்கும். நெருப்பால் தயாரிக்கப்பட்ட காலணிகள் அவனின் கால்களில் அணிவிக்கப்படும். அதன் உஷ்ணத்தால் அவன் (மூளை) கலங்கி கொதிக்க ஆரம்பித்துவிடும். அவனுடைய புதைகுழி நரக நெருப்பால் நிறைக்கப்பட்ட உறைவிடமாக மாற்றியமைக்கப்படும். அதில் பிர்அவ்னும், ஹாமானும் அவனுக்கு சமீபத்தில் இருப்பார்கள்'' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள் என ஒரு அறிவிப்பு உள்ளது.

ஃ இவ்வுலகில் மது சாப்பிட்டவனை, மறுமையில் அவனின் இரு கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் அமரர்கள், நரகத்தை நோக்கி இழுத்துக்கொண்டு வருவார்கள். நரகத்தின் தலைவாயல் திறக்கப்படும். அங்கே ஒரு மலக்கு நிற்பார். அவர் தன் கையில் இருக்கும் இரும்புத் தடியால் மதுவுண்ட மாபாவியின் முகத்தில் வேகமாக அடிப்பார்- அந்த அடியின் வேகத்தால் நரகத்தின் அடிமட்டத்தை நோக்கி- 400 வருட கால பிரயாண தூரம் உள்ளே செல்வான். ஆனால் அடி மட்டம் போய்ச் சேரமாட்டான். நரகத்தின் (கொந்தளிக்கும்) ஆவி அவனை மீண்டும் மேல் பாகத்தில் கொண்டு வந்து சேர்க்கும். மீண்டும் அம்மலக்கு ஓங்கி அடிப்பார். இம்முறை அவன் நரகத்தின் அடிப்பாகத்துக்குச் செல்வான். அவன் உடம்பெல்லாம் நெருப்பால் கரிக்கப்பட்டு மீண்டும் மேலே வருவான். அவன் செய்த பாபங்களைச் சுகிப்பதற்காக அல்லாஹ் மீண்டும் மீண்டும் அவனைத் தண்டனையை அனுபவிக்கச் செய்கிறான்.



அவன் தாகத்தால் துடித்து, தண்ணீர், தண்ணீர் என்று கதறுவான். நரகத்தின் காவலர், நரக நெருப்பில் கொதித்துக்கொண்டிருக்கும் தண்ணீரைக்கொண்டு வந்து கொடுப்பார் அவன் பேரார்வத்தோடு அதை வாங்கிப் பார்ப்பான். அதன் உஷ்ணத்தின் ஆவி அவன் முகத்தில் பட்டவுடன் முகத்திலும், கண்களுக்கு மத்தியிலும் சதைகள் வெந்து கீழே விழுந்து விடும். தாகத்தைத் தீர்க்க வேறுவழியில்லாத அவன் அந்தத் தண்ணீரைக் குடிப்பான். பற்களும், முகவாய்க்கட்டையும் வெந்து விழுந்துவிடும். தண்ணீர் வயிற்றுக்குள் சென்றவுடன் குடல் வெந்து, துண்டு துண்டாக மலவாய் வழியாகக் கொட்டும். (அவன் தண்டனைக் காலம் முடியும் வரை) இநத வாழ்க்கையே தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃ ஷைகு அப்துல் அஜீஸ் கர்னி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் ஒரு நாள் பள்ளியை நோக்கி சென்று கொண்டிருந்தேன். வழியில் ஏராளமான பெண்கள் நின்று அழுது கொண்டிருந்தனர். அவர்களிடம் ஏன் அழுகின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் ''ஒரு மனிதர் மரணத்தறுவாயில் இருக்கிறார். நாங்கள் அவருக்குப் பல தடவை 'கலிமா தல்கீன்' சொல்லிக்கொடுத்தும் அவர் வாய் திறக்கவில்லை என்று கூறி, தாங்களாவது வந்து அவருக்குக் கலிமா சொல்லிக்கொடுங்கள் அல்லாஹ் தங்களுக்கு தாராள நன்மையை நல்குவான்'' என்று என்னிடம் வேண்டிக் கொண்டார்கள். நான் அம் மனிதரிடம் சென்று பன்முறை கலிமா சொல்லியபின், அவர் திடீரென்று, கண்ணைத்திறந்து, ''நான் நீங்கள் சொல்லும் கலிமாவைக் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் என்னால் அதைத் திரும்பச் சொல்ல முடியவில்லை. ஏனெனில் நான் இஸ்லாத்தைவிட்டு

அகற்றப்பட்டு விட்டேன்'' என்று சப்தமிட்டுக் கூறிக் கொண்டே இறந்துவிட்டார்.

நான் இதை அவரின் உறவினர்களிடம் சொல்லி விட்டு, ''இவர் காபிராக இறந்துவிட்டார்; இவருக்கு ஜனாஸா தொழுகை தொழ வைக்காதீர்கள்; முஸ்லிம் கபருஸ்தானில் இவரை அடக்கம் செய்யாதீர்கள்'' என்று கூறிவிட்டு; அவருடைய வாழ்க்கையையும் செயல்களையும் பற்றி அவர்களிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள் ''இம்மனிதர் மிகவும் நல்லவர்தான் ஆனால் தொடர்ந்து மதுவருந்துபவராக இருந்தார்'' என்று கூறினார்கள். ''அதுதான் அவருடைய ஈமானை அகற்றிவிட்டது. நாவைத் திருப்பி விட்டது''என்று நான் அவர்களிடம் கூறினேன்.

ஃ யார் மது உண்போருக்கு, ஒருபிடி உணவைக் கொடுத்து உதவி செய்கிறாரோ அவருக்கு மறுமையில், அவருடைய உடம்பின்மேல் பாம்புகளையும் தேள்களையும் இறைவன் சாற்றுகிறான். அவைகள் அவனைத் தண்டனை முடியும்வரை பிடுங்கிக்கொண்டே இருக்கும்.

ஃ யார் ஒரு குடிகாரனுடைய தேவையைப் பூர்த்திசெய்கிறாரோ அவர் இஸ்லாத்தை வீழ்ச்சியுறச் செய்வதற்கு உதவியாக இருக்கிறார்.

ஃ யார் ஒரு குடிகாரனுக்கு கடன் கொடுத்து உதவுகிறாரோ அவர் ஒரு முஃமினைக் கொலை செய்த குற்றத்துக்கு ஆளாகிறார்.

ஃ யார் மதுவருந்துவோனைத் தன் பக்கம் அமரச் செய்கிறரோ அவரை மறுமையில் இறைவன் குருடனாக எழுப்புவான். மேலும் அவருடைய ஈமானின் பிடிப்பும் அறுபட்டு விடும்.

ஃ யார் மது குடிக்கிறார்களோ அவரோடு திருமணத் தொடர்பு வைத்துக்கொள்ளாதீர்கள். (சம்பந்தம், கொடுக்கல் வாங்கல் கூடாது)



ஃ மதுவருந்துகிறவன் வியாதியாகிவிட்டால் அவனைப் போய் யாரும் விசாரிக்காதீர்கள்; ஆறுதல் கூறாதீர்கள்.

ஃ என்னை உண்மையான நபியாக அனுப்பிய இறைவன்மீது ஆணையாக, தவ்ராத், இன்ஜீல், ஜபூர், புர்கான் ஆகிய நான்கு வேதங்களிலும் மது அருந்துகிறவர்கள் சபிக்கப்படுகிறார்கள்.

ஃ எவரேனும், மதுவருந்துவது குற்றமல்ல, அது ஆகுமாக்கப்பட்டதுதான் என்று எண்ணினால் அவர் என்னை விட்டும் நீங்கிவிட்டார்; நான் அவரை விட்டும் நீங்கிவிட்டேன்.

என அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். மேலும் மறுமை வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கூறியிருப்பதாவது:

ஃ இறைவன் ஆணையிட்டுக் கூறுகிறான்: மதுவருந்துபவன் மறுமையில் தாகத்தால் துன்புறுவான். அவனுடைய இருதயம் கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பில் சுட்டுக் கரிக்கப்படும். அவனுடைய நாக்கு நெஞ்சுவரையில் நீண்டு தொங்கிக்கொண்டிருக்கும்.

ஃ யார் உலகில், எனக்காக மது உட்கொள்ளாமல் விலகிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களை மறுமையில் அர்ஷுக்குக்கீழ் 'ஹழீரத்துல் குத்தூஸ்' என்னும் புனிதமிக்க இடத்தில் வைத்து அவருக்கு சுவர்க்கத்தின் மதுஅருந்தக் கொடுப்பேன் என இறைவன் கூறியதாக நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

ஃ பெரியார் புளைல் இப்னு இயாள் (ரஹ்) அவர்களின் மாணவர்களில் ஒருவர் மரணப் படுக்கையில் இருந்தார். அவருக்குப் பெரியார் அவர்கள், திருக்கலிமாவைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொடுத்தும் அவர் அதைக் கூற முடியாத நிலையில் இறந்துவிட்டார். பின்னர் அப்பெரியார் அவரை நரக நெருப்பில் அவதிப்படுவதாகக் கனவில் கண்டு, அதற்கு காரணம் என்னவென வினவினார்.

அதற்கவர், ''எனக்கு ஒரு வியாதி இருந்தது. அது குணமடைய யாருக்கும் தெரியாமல் வருடத்துக்கு ஒருமுறை நான் மது சாப்பிட்டு வந்தேன். அதன் காரணமாகவே மரணத் தறுவாயில் என்னால் கலிமா சொல்ல முடியாமல் போய்விட்டது. இதனால்தான் நரக வேதனைகளில் அவதிப் படுகிறேன்'' எனக் கதறி அழுதார்.

பதறி திடுக்கிட்டெழுந்த அப்பெரியார். ''இறைவா! ஆண்டுக்கொருமுறை மது அருந்திய குற்றத்திற்காக ஒரு நல்லவருக்கு இந்நிலை எனில், உன்னைப் பற்றிச் சிறிதும் அச்சமின்றி காலமெல்லாம் குடித்து வாழ்ந்தோருக்கு என்ன நிலையோ?'' என்று கேட்டுத் தேம்பித்தேம்பி அவர்களுக்காக அழ ஆரம்பித்தார்.

## 9. மதுவை வென்ற மகான்கள்

ஃ பெரியார் அபூ யஜீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் இரவு நீண்ட நேரத் தொழுகைக்குப்பின் பள்ளிவாசலிலிருந்து தன் வீட்டை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு மனிதன் மதுவருந்திய மயங்கிய நிலையில் தன் கையில் ஒரு இசைக் கருவியை வைத்துக்கொண்டு, கேவலமான பாட்டுக்களைப் பாடிக்கொண்டிருந்தான். இதைக்கண்ட பெரியார் அவனருகில் சென்று அவனுக்கு நல்லுபதேசம் செய்தார்கள்.

இதைக்கேட்ட அந்தக் குடிகாரன் ஆத்திரங்கொண்டு பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் தலையில் தன் இசைக்கருவியைக்கொண்டு ஓங்கி அடித்து விட்டான். அவனுடைய இசைக்கருவியும் உடைந்தது, பெரியாரவர்களின் மண்டையும் பிளந்தது. ரத்தம் பீறிட்டோட காயத்தைக் கையினால் அழுத்திப் பிடித்தவாறு தன் வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

மறுநாள் தன் நண்பரிடம் ஒரு சிறு தொகையும், கொஞ்சம் இனிப்புப் பண்டங்களுப் கொடுத்து இதை இன்னாரிடம்



கொடுத்துவிட்டு இப்படிச் சொல்லி வாருங்கள் என அனுப்பினார்கள்.

அதாவது ''நேற்றிரவு உன்னுடைய இசைக்கருவி ஒடிய என் தலைதான் காரணம். இச்சிறு தொகையும், நீ கசப்பான (இழிவான) வார்த்தைகளைப் பேசியதால் உன் வாய் கசந்திருக்கும்; அதை மாற்ற இந்த இனிப்புப் பண்டங்களையும் அனுப்பியுள்ளேன்'' என்ற இந்த வசனத்தை அந்த நண்பர், குடிகாரனிடம் சொல்லி, பணத்தையும் பலகாரத்தையும் கொடுத்து இன்னார் அனுப்பியதாகக் கூறினார்.

அப்போது போதையில்லாமலிருந்த அந்தக் குடிகாரன் திடுக்கிட்டு, தான் செய்த தவறை உணர்ந்து வருந்தி, உடனே எழுந்து ஹஜ்ரத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை நோக்கி ஓடி வந்து ''பெருமையின் சிகரமாய் அறிவின் திருவுருவாய் திகழும் ஹஜ்ரத் அவர்களே! நான் இதுவரை அறியாமையிலும், மௌட்டீகத்திலும் மூழ்கியிருந்தேன். இந்த உலகத்தின் அற்ப இன்பங்களுக்கு என்னை அடிமையாக்கிக் கொண்டிருந்தேன். தங்களின் பொறுமையும் இனிய போதனையும் என் கண்களைத் திறந்து விட்டன. இனி நான் மதுவருந்த மாட்டேன். இது சத்தியம்!'' என்று கூறி தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டான்.

ஒரு நாள் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்த போது, ஒருவன் மதுவருந்தி மயங்கித் தெரு ஓரத்தில் அசுத்தத்தில் கிடப்பதைக் கண்டார்கள். அவர்கள் அவனை அசுத்தத்திலிருந்து அப்பாற்படுத்தினார்கள். மயக்கந் தெளிந்து எழுந்த அவன் தன் முன்னால் மகானவர்கள் நிற்பதைப் பார்த்து, வெட்கித் தலை குனிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, மகானவர்களின் நல்லுபதேசத்தைக் கேட்டுத், தான் இனிமேல் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

மாலிக் இப்னு தீனார் அவர்கள் ஆரம்ப காலத்தில் சிப்பாயாகப் பணி புரிந்து வந்தார். அப்போது அவரிடம் குடிப் பழக்கம் இருந்தது. அடிக்கடி குடித்து விட்டு அவர்கள் போதையிலேயே இருப்பார்.

ஒரு சமயம், ''ஈமான் கொண்டவர்களில் (யார் பாவச் செயல்களில் மூழ்கியுள்ளார்களோ) அவர்கள் இதயங்கள் அல்லாஹ்வின் தியானத்திற்கும் மேலும் அவன் இறக்கி வைத்த திருவசனங்களுக்கும் அஞ்சி, பயப்படக் கூடிய நேரம் இன்னும் வர வில்லையா?'' என்ற திரு வசனம் அவர்களின் காதுகளில் விழுந்தது.

அதைக் கேட்டவுடன் அவர் திடுக்கிட்டார். தன் நிலையை உணர்ந்தார். அறிவும் ஆற்றலும் மிக்க நாம் இந்தக் குடிக்கு அடிமைப் பட்டு, எத்தகைய கேவல வாழ்க்கையை நடத்துகிறோம் என சிந்தித்தார். தனது தவறை உணர்ந்தவராக இறைவனிடம் சரணடைந்தார். அழுது புலம்பி தவ்பாச் செய்து மன்னிப்புக் கேட்டார். அதோடு குடிப் பழக்கத்தைக் குழி தோண்டிப் புதைத்தார்.

சிந்தித்தார் சீர் தூக்கிப் பார்த்தார், சீர் பெற்றார் என்று திருமறை புகழ்ந்தவர்களிலே முதல்வரானார். வையத்தில் சிறப்புற்று விளங்கும் வலிமார்களிலே ஒருவராக இன்றும் கொண்டாடப் படுகிறார்.

## 10. மது - பாவங்களின் தாய்

''பாபச் செயல்களுக்கெல்லாம் தாயாக மது இருந்து வருகிறது. மக்களே! மதுவைப் பற்றி அஞ்சுங்கள்! அதை விட்டு விலகி எச்சரிக்கையாக இருங்கள்!'' என இஸ்லாத்தின் மூன்றாவது கலீபா (ஜனாதிபதி) ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது ஜும்ஆ குத்பாவில் (சொற்பொழிவில்) எச்சரிக்கை செய்து, உதாரணத்துக்கு ஒரு நிகழச்சியையும் கூறுவார்கள்.



''முற்காலத்தில் ஒரு பெரியார் மனிதர்களின் தொடர்பு இல்லாமல் தனிமையாக இருந்து இறை வணக்கத்தில் கடுமையாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஒரு பெண் அவர் மீது ஆசை கொண்டு, எப்படியும் அவரை வணக்கத்திலிருந்து தடுத்து, தன் மீது இச்சைக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள். அப்பெண் தன் பணியாள் ஒருத்தியை அழைத்து, அப்பெரியாரின் இருப்பிடத்தைக் கூறி, ''நீ போய், நாங்கள் சிலர் இஸ்லாம் மார்க்கத்தில் சேர ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம் என்று கூறி எப்படியாவது அவரை இங்கே அழைத்து வா!'' என்று உத்திரவிட்டாள்.

அதன்படி அப்பணிப்பெண், பெரியாரின் தவச்சாலைக்கு வருகிறாள். பொதுவாகப் பெண்கள் அனுமதிக்கப்படாத அவ்விடத்துக்கு ஒரு பணிப்பெண் வந்துள்ளதைக் கண்ட அப் பெரியார் வெகுண்டு ''யார் நீ? எதற்காக இங்கு வந்தாய்? இங்கு பெண்கள் வர அனுமதியில்லை!'' என்று கூறினார்.

அதற்கு அந்தப் பெண் ''ஞானவானே! தாங்கள் கூறுவதைப் புரிந்து கொண்டேன். நான் வீணாக இங்கு வர வில்லை. என் எஜமாட்டியும், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இஸ்லாம் மார்க்கத்தில் சேர விரும்புகிறார்கள்; தங்களைப் போன்ற பரிசுத்தவானின் திருவாயால் கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டு இஸ்லாத்தில் சேர்வதைப் பெருமையாக நினைக்கிறார்கள். ஆதலால் தாங்கள் எங்கள் இல்லத்துக்கு வருகை தரவேண்டும்!'' என நயந்து வேண்டிக் கொண்டாள்.

இந்த வேண்டுகோளைக் கேட்ட அந்த ஞானி சிறிது நேரம் யோசித்தார், தனிமையிலிருந்து தான் மட்டும் வணங்கி பெறும் இறையருளைவிட, மற்றவர்களை இஸ்லாத்தில் சேர்த்து அவர்களையும் வணங்கச் செய்து, நல்லடியார்களாக மாற்றினால் இறையருக்கு இன்னும் பல மடங்கு பாத்திரமாகலாம் என்றெண்ணி, அந்தப் பெண்ணின் வேண்டுகோளை ஏற்று பின் தொடர்ந்தார்.

இளம் வயதினரான அந்த ஞானி அந்த வட்டாரத்தில் மிகவும் பிரபலமாகக் கொண்டாடப்படுவதையும், அவருடைய போதனையின் காரணமாகத் தீமைகளைவிட்டுப் பலர் நீங்குவதையும் அதனால் தனது வருமானம் பாதிக்கப் படுவதையும் கண்டு ஆத்திரங் கொண்ட ஒரு தாசி, தன்னைக் கெடுக்கவே இஸ்லாத்தின் பெயரைச சொல்லித் தந்திரமாக அழைத்துள்ளாள் என்பதைப் புரியாத அந்த மகான், அவள் விரித்த வலையில் போய் சிக்கினார்.

தன்னை அழைத்து வந்த பணிப் பெண்ணைப் பின் தொடர்ந்து வந்த அவன், ஒருபெரிய மாளிகையினுள் அழைத்துச் செல்லப் பட்டார்; அங்கு யாரையும் காணாமல் திகைத்து நின்ற அவரிடம் அப்பணிப்பெண் ஒரு அறையைக் காட்டி, அதனுள்ளே செல்லும்படி கேட்டுக் கொண்டாள்.

அந்த அறைக்குள் நுழைந்தவுடன் அவர் அங்கு கண்ட காட்சிகள் அவரை திடுக்கிடச் செய்தன. அங்கு அழகாக அலங்கரிக்கப் பட்ட ஒரு மேஜையின் மீது பற்பலவிதமான மது வகைகள் வைக்கப் பட்டிருந்தன. அதே மேஜையின் ஒரு பக்கத்தில் ஒரு குத்தீட்டி வைக்கப் பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு சிறு பையன் கை, கால்கள் கட்டப்பட்டுக் கிடந்தான். எதிரே அரையாடையுடன் ஒருஅழகிய நங்கை நின்று கொண்டிருந்தாள். இவற்றையெல்லாம் கண்ட அந்த ஞானி ஒன்றும் புரியாமல் விழித்தார்.

அவரை வெகு நேரம் குழப்பத்திற்குள்ளாமல் அந்த நங்கைக் கூறினாள்: மகானே! நான்யார் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள் என நினைக்கிறேன். இந்த நகரத்திலேயே மிகப் பிரபலமான தாசி நான். என் வீட்டுக்கு நல்லவர்கள் யாரும் வருவதில்லை. ஆனால் நீங்கள் வந்திருக்கிறீர்கள். முன் யோசனையுடன் தான் யாருக்கும் தெரியாமல் உங்களை அழைத்து வரச் செய்திருக்கிறேன். அவ்விதமே நீங்கள் யாருக்கும் தெரியாமல் இந்த வீட்டை விட்டு வெளியே போனீர்களானால் தான், உங்களுக்கு ஊரில் கிடைத்து வரும் மரியாதை



தொடர்ந்து கிடைக்கும். இல்லாவிடில் நீங்கள் எந்த மக்களால் இது வரை கவுரவிக்கப் பட்டு வருகிறீர்களோ அதே மக்களால் அவமானத்துக்குள்ளாக்கப் பட்டு கல்லாலடித்துக் கொல்லப்படுவீர்கள்'' என்றாள்.

அவள் பேசுவதைப் புரியாத அந்த ஞானி, ''நான் சிலரை இஸ்லாத்தில் சேர்ப்பதற்காக அழைத்து வரப் பட்டேன்; நீ சொல்வது ஒன்றும் புரிய வில்லை'' என்றார்.

''நான் தான் உங்களை இங்கு அழைத்து வரச் செய்தேன். அதற்குக் காரணம் இங்கு யாரும் இஸ்லாத்தில் சேர்வதற்காக அல்ல. நீங்கள் நான் சொன்ன படி சில நிமிடங்கள் கேட்டு நடக்கச் செய்வதற்காகவே!'' என்றாள் அவள்.

ஒன்றும் புரியாத அந்த ஞானி; ''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

''இதோ மூன்று காரியங்கள் உங்கள் முன்னால் இருக்கின்றன. இந்த மூன்றில் ஒன்றை நீங்கள் செய்ய ஒப்புக் கொண்டு விட்டால் அதைச் செய்து விட்டு நீங்கள் வந்தச் சுவடு தெரியாமல் போய் விடலாம். முதலாவது, மேஜையின் மேல் உள்ள குத்தீட்டியை எடுத்து அந்த சிறுவனைக் குத்திக் கொலை செய்ய வேண்டும். அப்படிக் அவனைக் கொல்வதற்கு நியாயம் இருக்கிறது. ஏனெனில் அவன் என்னைக் கற்பழிக்க முயன்றான். அதற்கு விருப்பம் இல்லா விட்டால் என்னை நீங்கள் புணர்ச்சி செய்ய வேண்டும்; அதன் மூலம் என் நெடு நாள் விருப்பமும் தீரும், அதோடு இதில் எனக்கு லாபமும் இருக்கிறது. இதற்கும் நீங்கள் ஒப்புக் கொள்ளாவிடில் இந்த மேஜையின் மீதுள்ள மதுவகைகளில் ஒன்றை நீங்கள் பருகி விட்டு என்னோடு சிறிது சல்லாபமாக இருக்க வேண்டும்'' என்றாள்.

''இதற்கு ஒப்புக் கொள்ளா விட்டால்?'' என்று கேட்டார். ஞானி.

''கூச்சலிட்டு இங்கு ஊரையே திரட்டி விடுவேன்; என்னைக் கெடுக்க முனைந்தீர்களென பகிரங்கமாகச் சத்தியம் செய்து சொல்வேன்'' என்றாள்.

அந்த ஞானி சிறிதுநேரம் யோசித்தார். அந்த தாசி உண்மையிலேயே அவள் சொல்லுகிறபடி செய்து விடுவாள் என்று அவருக்கு உறுதியாகப் பட்டது. ஆதலால் அவளிடமிருந்து தப்பிக்க, ஆகக் குறைந்த தீமையைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு கட்டினார்.

கொலை! மாபெரும் பாதகம்! அதைச் செய்ய ஒருபோதும் உடன்படமாட்டேன்! விபச்சாரம்! அதற்கும் இடமளிக்கக் கூடாது! மது! இது நம்மோடு முடியும் தீமை! குடித்துவிட்டு 'தவ்பாச்' செய்து விடலாம். நிர்பந்தமானச் சூழ்நிலையில் மதுவருந்துவதால் ஆண்டவனிடம் மன்னிப்புப் பெற்று விடலாம்!

இதுதான் அவர் கொண்ட முடிவு! இறுதியில் மதுவருந்த ஒரு நிபந்தனையுடன் ஒப்புக் கொண்டார். அதாவது ''மது மட்டுமே அருந்துவேன்; உன்னோடு சல்லாபமாக இருக்க மாட்டேன்'' என்று அறிவித்தார். தாசியும் சிரித்துக் கொண்டே அதற்கு ஒப்புக் கொண்டாள்.

முதல் கோப்பை மது உள்ளே சென்றவுடன், அவர் தலை சுற்றியது. இரண்டாவது கோப்பை குடிக்க வேண்டும் போல் தோன்றியது. அதைத் தொடர்ந்து மற்றொரு கோப்பை உள்ளே சென்றது. மதுவின் போதை தன் வேலையைச் செய்யத் தொடங்கி விட்டது. தலை கிறுகிறுத்த நிலையிலேயே அந்த தாசியைப் பார்த்தார். அவளோ சிரித்துக் கொண்டே தன் ஆடையிலே இன்னும் கொஞ்ச பாகத்தை அகற்றினாள். ஞானியின் அறிவிலே சபலம் தோன்றியது: ''அவள் தாசிதானே! மேலும் தன்னை அவளே மனமார் விரும்பும் போது நீ ஏன் இந்த வாய்ப்பைத் தவறவிட வேண்டும்'' என்று அவருக்குள் யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.



அவருக்கும் அது நியாயமாகப்பட்டது. வெறியோடு அவளைக் கட்டிப் பிடித்தார். அவள் அதை எதிர்பார்த்திருந்தவள்போல; அவர் செய்கைகளுக்கெல்லாம் உடன்பட்டாள்.

அவர் தன் இச்சையைத் தீர்த்துக் கொண்டவுடன், தாசி சொன்னாள். ''என்ன காரியம் செய்து விட்டீர்கள்! அவசரப்பட்டு விட்டீர்களே! நான் வாக்களித்த படி நமது ரகசியத்தை மறைத்து விடுவேன்! ஆனால், இந்தப் பையன் பார்த்துக் கொண்டிருந்து விட்டானே! இவனை எப்படி உயிருடன் விட முடியும்?'' என்றாள்,

ஞானிக்கு அப்போதுதான் பையனின் ஞாபகம் வந்தது. தாசி சொன்னதும் அவருடைய மயக்க நிலையில் முற்றிலும் சரியாகப் பட்டது. பாய்ந்து சென்று குத்தீட்டியை எடுத்தார். அடுத்த கணம் பையனின் மார்பில் பல தடவை அதைப் பாய்ச்சினார்.

ஞானி அஞ்ஞானியாகி விட்டார், மது மயக்கத்தில் தனது அறிவையெல்லாம் இழந்தார்: தமது நீண்ட கால தவத்தின் வலிமையை இழந்தார். தமது பெயர், புகழ் அனைத்தையும் இழந்தார், அழிந்தார்.

''பாவ காரியங்கள் அனைத்துக்கும் மதுவே தாய்'' என்றார்கள் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், அந்த உண்மை, இந்த ஞானியின் உதாரணத்தினால் மட்டுமல்ல, உலகில் ஆயிரமாயிரம் உண்மைகள் அனுதினமும் நடந்து இந்த உண்மையை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன.

மதுவின் தீமைகளை உலகம் உணர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அதிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ள முடியாமல், தன்னையே அடிமைப் படுத்திக் கொண்டிருக்கிறது. தீமைக்குச் சமாதானங்கள் சொல்லி சமாளித்துக் கொள்ள முற்படுகிறது.

இஸ்லாம் மார்க்கத்தைப் பொறுத்தவரை, அண்ணல் நபி கள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் வழி முறையில் மது வருந்துவதற்கு எந்த விதமான சமாதானமுமில்லை. மது மனித சமுதாயத்தின் நண்பனல்ல; அது ஜென்ம விரோதி. ஆதலால் தான், ஹளரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ''மது வைக் கண்டு அஞ்சுங்கள்; அதை விட்டும் தூர விலகிக் கொள் ளுங்கள்'' என்றும் கூறியுள்ளார்கள்.

முஸ்லிம்களிலே மிக அற்பமான சில பேர் மதுவுக்கு அடிமையாகியுள்ளார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அவர் களிடம் கேட்டால், உலகின் மற்ற குடிகாரர்கள் சொல்வ தைப் போல, ஏதாவது பொருத்தமான சமாதானத்தையும் மற்ற முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள அனுமதியில்லை. 'ஹராம்' என்று விலக்கப் பட்டது முற்றிலும் ஹராமானதே! பழக்கத்துக்கு அடிமையானவர்கள் அதை விட்டுத் 'தவ்பா' செய்து மீளுவதொன்றே ஒரே பரிகாரமாகும்.

## 11. மதுபற்றிய எச்சரிக்கைகள்

மதுவைப் பற்றி பேரறிஞர் அபுல்லைஸ் சமர்க்கந்தி (ரஹ்) அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கைகளாவன:

1. மது அறிவையும் செல்வத்தையும் ஒரே சமயத்தில் நாசப் படுத்தும் மனித சமுதாயத்தின் விரோதி,

2. சகோதரர்கள்(மற்றும் உறவினர்கள்) நண்பர்கள் மத் தியில் பகையை உண்டாக்கும் வஞ்சகத் தன்மையின் பிறப் பிடம் மது.

3. இறை ஞானத்தையும், இறை வணக்கத்தையும் தடை செய்து ஆத்மாவை அழிவுள்ளாக்கும் அபாயகரமான பொருள் மது.



4. விபச்சாரத்தின் பால் மனிதனை ஈர்க்கும் இழித் தன்மை மதுவுக்கே உண்டு.

5. தன்னுணர்வை அழித்து, தன் மனைவியைக் கூட 'தலாக்' சொல்லி விடத் தூண்டும் மதியீனத்தின் பிறப்பிடம் மதுவேயாகும்.

6. மது எல்லா பாபங்களுக்கும் திறவு கோலாகும்.

7. குடிகாரன் பைத்தியக்காரனை விடக் கீழானவனா கிறான். சின்னஞ் சிறுவர்களும் எள்ளி நகையாடக்கூடிய ஏள னத்துக்கு ஆளாகிறான்.

8. மதுவருந்துபவனைச் சார்ந்திருக்கும் அமரர்கள் (மலக்குகள்) அருவருப்படைகின்றனர். அவனை சபித்துக் கொண்டிருக்கின்றனர்.

9. மதுவருந்துபவன் குற்றவாளி. அதற்கான தண்டனை 80 கசையடிகளாகும். இவ்வுலகில் அது அவனுக்களிப்படா விட்டாலும், மறுமையில், அவனுடைய பெற்றோர், உற்றார் முன்னிலையில், நரக நெருப்பினாலுள்ள சவுக்கால் அது நிறைவேற்றப்படாமல் போகாது.

10. ஒரு நேரம் மது வருந்துபவனின் பிரார்த்தனைகள். 40 நாட்களுக்கு இறைவனால் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது அவன் 40 நாட்களில் செய்த நற்கிரிகைகள் ரத்து செய்யப் படும்.

11. குடிகாரனின் ஈமான் அவன்மரணிக்கும் வேளையில் பிடுங்கப்படும். அவன் காபிருடைய அந்தஸ்தில் கணிக்கப் படுவான்.

★மாநபி (ஸல்-அம்) அவர்கள், பின்வரும் நபர்களைச் சபித்துள்ளார்கள்:

1. மது தயாரிப்பவன்; (அத்தொழிலில் ஈடுபவன்)

2. மது தயாரிக்கச் சொல்பவன்; (வியாபாரத்திற்காக)

3. மது அருந்துபவன்; (குடிகாரன்)

4. மதுவைச் சுமந்து செல்பவன்; (முதுகிலோ, வாகனத்திலோ கொண்டு செல்பவன்)

5. யாருக்காகச் சுமந்து செல்கிறானோ அவன்; (வரவழைப்பவன்)

6. ஊற்றிக் கொடுப்பவன்; (கூலிக்கோ அல்லது தன் விஷ்டத்திற்கோ)

7. மது விற்ற பணத்தில் சாப்பிடுபவன்; (அவனும் அவன் குடும்பத்தினரும்)

8 அதை வாங்குகிறவன்; (விலைக்கோ அல்லது உதவியாகவோ)

9. யாருக்காக வாங்கப்படுகிறதோ அவன்.

பெருமானார் (ஸல்-அம்) இந்த ஒன்பது பேரையும் குறிப்பிட்டு, இவர்கள் 'நாசமாகக் கடவது' எனச் சபித்துள்ளார்கள். மது சம்பந்தப்பட்ட எந்தவொரு சிறு விஷயத்திலும் தொடர்பு வைத்துக் கொள்ளும் எவரும் இந்தச் சாபத்துக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

★கலீபா ஹஜ்ரத் உமர் கத்தாப் (ரலி) அவர்கள், மதுவின் தீமைபற்றித் தொடர்ந்து எச்சரித்துக் கொண்டே இருந்தார்கள். முஸ்லிம்கள் அனைவரும் மதுவின் பிடிப்பிலிருந்து விலகிவிட்டாலும், யூதர்களையும், கிறிஸ்துவர்களையும் அவர்கள் வற்புறுத்தித் தடுக்கவில்லை; உபதேசம் செய்து கொண்டே இருந்தார்கள். ஒரு யூதன், கலீபாவின் முயற்சியைத் தோல்வியடையச் செய்யவும், அவர்களுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கவும் சதி செய்தான்.



கலீபா உமர் (ரலி) அவர்களின் புதல்வர் அபூஷஹ்மாவுடன் அந்த யூதன் சிநேகமாக இருந்தான். ஒரு நாள் அபூஷஹ்மாவை அவன் தன் வீட்டுக்கு அழைத்து, எப்படியோ மதியை மயக்கி மதுவருந்தச் செய்து விட்டான். அவர் மயங்கி விட்ட நிலையில், பல முஸ்லிம்களை அழைத்துப் பார்க்கச் செய்து, உமர் (ரலி) அவர்களின் ஆட்சியைப் பரிகசிக்க ஆரம்பித்தான்.

கலீபா அவர்களின் சன்னிதானத்தில், அபூஷஹ்மா மது வருந்திவிட்ட உண்மை நிருபிக்கப்பட்டது. இஸ்லாமிய சட்டப்படி, 80 கசையடிகள் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தண்டனையை தம் கையினாலேயே நிறைவேற்ற ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அபூ ஷஹ்மாவுக்கு உரிய தண்டனையை அவர் தந்தையாகிய கலீபாவே எல்லோருடைய முன்னிலையிலும் பகிரங்கமாக நிறைவேற்றினார்கள். எண்பது அடிகளில் சில அடிகள் மிஞ்சி இருக்கும் போதே, அதைத் தாங்க முடியாத அபூஷஹ்மாவின் ஆவிபிரிந்தது. கூடியிருந்த மக்களெல்லாம் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களோ, தன்னுடைய இருதயத்திலிருந்து இரத்தம் கசிந்தாலும் அதைச் சகித்துக் கொண்டு, தனது திருப்தியை இரண்டுவழிகளில் வெளிப்படுத்தினார்கள்.

ஒன்று, தான் செய்த குற்றத்துக்குத் தன் மகன் உலகத்திலேயே தண்டனையைப் பெற்று விட்டான் என்ற திருப்தி. மற்றொன்று; தனது கையினாலே தன் மகனுக்குத் தண்டனையை நிறைவேற்றிய திருப்தி.

இதன் மூலம், கொஞ்ச நஞ்ச குடி சபலம் இருந்தவர்களும் இஸ்லாமிய ஆட்சியில் பரிசுத்தமடைந்து விட்டார்கள்.

—★—

# 12. மதுவும் நமது காலமும்

1400 ஆண்டுகளுக்கு முன்பு, அரபு பூமியில், அண்ணலெம்பெருமான் முஹம்மது (ஸல்-அம்) அவர்களைத் தோற்றுவித்து, அதற்கு முன் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அந்த பூமியின் நிரந்தரச் சொத்தாக நிலைத்திருந்த மதுவை அவர்கள் கண்ணெதிரிலேயே புறக்கணிக்கச் செய்தான் எல்லாம் வல்ல இறைவன்.

அந்தக் காலத்துக்கும் மாத்திரமல்லாமல் அந்த பூமியில் மனித சமுதாயம் வாழும் காலமெல்லாம், மதுவை இழிவாகக் கருதவும், அதன் வாடையே அங்கு வீசாமலிருக்கச் செய்யவும் வல்ல நாயன் கருணை செய்தான்.

அந்த பூமியில் மாத்திரமில்லாமல், அங்கிருந்து அவன் வெளிப்படுத்திய தனது பேரொளியாகிய அண்ணல் ரசூல் (ஸல்-அம்) அவர்கள் மூலமாக, உலகமெங்கினும் தனது நல்லடியார்களை வெளிப்படுத்தி, அவர்களெல்லாம் உலகில் மதுவை வெறுக்கவும், புறக்கணிக்கவும், எதிர்த்துப் போராடவும், வல்லமையுடையவர்களாகத் திகழக் கிருபை செய்தான்.

அதன் விளைவாகவே இன்று உலகில் மதுவுக்கு எதிர்ப்பான எண்ணங்கள் பரவலாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றால் மிகையாது. மதுவுக்கு இஸ்லாத்துடைய எதிர்ப்பு மட்டிலும் இல்லை என்றால், இன்று, மதுவைப் பற்றியும், அதன் தீமைகளைப் பற்றியும் இந்த உலகம் பெருமளவில் சிந்திக்க முற்பட்டிருக்காது என்று துணிந்து கூறலாம்.

இன்றுங்கூட இவ்வுலகில் பெரும்பான்மையான நாடுகள், மக்கள், மதுவுக்கு அடிமைப்பட்டேதான் கிடக்கிறார்கள். அவர்கள் மது தீமையானது என்ற இஸ்லாமிய கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள். ஆனால் அத் தீமையை எதிர்த்துப் போராடும் ஆற்றலை இழந்தவர்களாக



இருக்கிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் ஆண்மையற்றவர்களாகி விட்டார்கள் என்றும் துணிந்துக் கூறலாம்.

நமது பாரதம் போன்ற நாடுகளில், மதுவின் ஆதிக்கத்தையொழிக்க பலர் என்னென்னவோ முயற்சிகளை செய்கிறார்கள். நாடு முழுவதும் ஒரே மத்திய ஆட்சி நடந்தும் அனைவரும் ஒருமித்து ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடுகிறார்கள். சில ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் கடுமையான சட்டங்களின் மூலம் மதுவை ஒழிக்க முயற்சிகளை மேற்கொள்கிறார்கள், சட்டங்கள் கடுமையாக ஆவதைப் போலவே அதை மீறுகிறவர்களும் தந்திரசாலிகளாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். மது ஒழிப்பு என்பது கொள்கையளவில் பேசப்படுகின்ற பேச்சாக இருக்கிறதே தவிர, நடைமுறையில் அது வெற்றி பெற்றதாக இல்லை. மது அங்கீகரிக்கப்பட்ட நிலையில் இருந்த போது அதை அரசாங்கம் வியாபாரம் செய்து, வருமானம் பெற்றது. அதுதடை செய்யப்பட்ட நிலைக்கு வந்தபோது கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், திருட்டு மது இறக்குவோர் ஆகியோர் அந்த வியாபாரத்தைச் செய்து வருகின்றனர். வியாபாரம் கைமாறிக்கொண்டுள்ளதே தவிர, மதுவின் ஆதிக்கம் மறைந்து விடவில்லை.

இதன் மூலம் சட்டத்தினால் மட்டும் எந்த மாறுதல்களையும் செய்துவிட முடியாது என்பதையும், தனி நபரின் இதயத்திலே ஏற்படச் செய்யும் மாறுதலின் மூலமே, உண்மையான பலனைக் காண முடியும் என்பதையும், புரிந்து கொள்கிறோம்.

அந்த மாறுதல் வரவேண்டுமானால், எல்லாம் வல்ல அல்லாஹ்வையும், அவனுடைய தூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்-அம்) அவர்களுடைய வழி முறைறையும் மனிதனைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அதன் மூலமே அவன் இந்தத் தீமையிலிருந்து தப்பிக்க முடியும். அந்த வழியில் தான் குடித்துப் பழகியவர்கள் 'தவ்பா'ச் செய்து மீண்டு, தங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய குடிகாரர்கள் உண்

டாகாமலிருக்கவும், மதுவை வியாபாரம் செய்யாமலிருக்கவும் எந்த கோணத்திலிருந்தும் மதுவுக்குத் துணை போகாமலிருக் கவும். மதுவருந்துவதை நினைத்து வெட்கப்படவும், எல்லா வற்றுக்கு மேலாக அல்லாஹ்வின் தண்டனைக்கு அச்சப்பட வும் முறையான ஒழுங்குகள் உள்ளன.

அந்தப் பரிசுத்தமான வழியை, ஊருக்கும், நாட்டுக்கும் உலகத்துக்கும் பரப்பிக் கொண்டிருக்க வேண்டும். இதை அரசாங்கங்களும் செய்ய வேண்டும்; மக்களும் செய்ய வேண் டும். மதுவை ஒழிக்கும் வெற்றியின் ரகசியம் இதில் தான் இருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம்.

—★—

## இரண்டாம் பாகம்

## விபச்சாரம்

# 1. விபச்சாரம் கடுங்குற்றம்

விபச்சாரம் பஞ்சமா பாதகங்களில் ஒன்று. அனைத்துலக மனித சமுதாயத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டு அலைக் கழித்துவரும் பெருநோயாக அது நின்றிலங்குகிறது. இந்தப் பேய்க்குப் பலியாகாத நாடுகளோ, கலாச்சாரமோ உலகில் இல்லை என்று துணிந்து கூறலாம்.

மது, அதைக் குடிப்பவனைக் கெடுக்கும். அவன் கெடு வதன் விளைவாக அவனை நம்பியிருப்போர் நலிவுறுகிறார் கள். குடிகாரன் தன்னைக் கெடுத்துக் கொள்வதன்றியில் தன்னைச் சார்ந்தவர்களையும் கவலைகளும், வேதனைகளுக் கும் வறுமைக்கும் ஆளாக்குகிறான். மதுவின் மயக்கத்தி னால் அவன் செய்யும் தவறுகள் பெரும்பாலும் அவனையும் அவன் குடும்பத்தையுமே பாதிக்கச் செய்கிறது,

விபச்சாரம் என்பது இரண்டு தவறானவர்கள் கூடிச் செய்யும் பாபக்கிருத்தியாகும். அது அந்த இருவரோடு



மாத்திரமல்லாமல், மனித சமுதாயத்தின் பண்பாடுகளையே அழிக்கக் கூடியது. நெறிகெட்ட சந்ததிகளையும் பரப்பக் கூடியது. அவன் அல்லது அவளுடைய சந்ததிகளுக்கும், நாட்டுக்கும், உலகத்துக்கும் ஒட்டு மொத்தமாகத் தீமைபயக் கும் தன்மையுடையது; மிகவும் ஆபத்தானது. பயங்கரமா னது; தடுக்கப்படக் கூடியது; ஒழிக்கப்படக் கூடியது.

விபச்சாரம் என்பது மனிதத் தன்மையைச் சார்ந்ததல்ல, மிருகத் தன்மையானது. மிருகங்களுக்கு வரையறையில்லை மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்திக் காட்டுவது உருவ அமைப்பினால் மட்டுமல்ல; உணர்ச்சி ஒழுங்கும் பிரதான மாகும்.

இறைவனின் படைப்பினங்களில் யாவற்றையும் விட உயர்ந்தது மனித இனம்தான் என்பது எல்லா மதங்களும், வேத சாத்திரங்களும் ஒப்புக்கொண்ட விஷயமாகும். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என மானிடப் பிறப்பை உயர்வாகக் கூறப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன?

இறைவன் உயிரினங்களைச் சிருஷ்டித்து அவைகளில் ஒரு பகுதிக்கு ஈரறிவையும், இன்னொரு பிரிவுக்கு மூவறிவை யும், மற்றொரு பிரிவுக்கு நான்கறிவையும், பிறிதொரு பகு திக்கு ஐந்தறிவையும் படைத்து, மனித ஜீவனுக்கு மட்டும் ஆறறிவை ஈந்து அதை மற்ற எல்லா படைப்புகளையும்விட உயர்வாக்கினான். இந்த ஆறறிவு என்பது சிந்தித்துச் செய லாற்றும் தன்மையை உடையதாகும். எதுவொன்றையும் பற்றி முன்பின் ஆலோசித்து, அதன் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து செயல்படுவதே இவ்வறிவின் சிறப்பாகும். இதன் அடிப்படையில்தான் மனிதனின் வாழ்க்கை முறை அமைக்கப்பட்டுள்ளது. தாய்-தந்தை, சகோதர-சகோதரி, உற்றார்-உறவினர், அண்டை வீட்டார்-எதிர் வீட்டார், நண் பன்-எதிரி, நல்லது-கெட்டது, ஒழுக்கம்-ஒழுக்கமின்மை, நீதி- அநீதி, ஆகுமாக்கப்பட்டது-தடுக்கப்பட்டது முதலான எல்லா தன்மைகளையும் இவ்வாறறிவின் மூலமே பிரித்தறிய முடி

யும். அவ்விதம் பகுத்துணர்ந்து நடக்க மனித இனம் கடமைப்பட்டுள்ளது.

அவ்வறிவை அவன் எல்லா நேரங்களிலும் பயன்படுத்திக் கொள்ளவும், அதிலிருந்து அவன் கீழிறங்கி விடாமல் இருக்கவும், சில சமயங்களில் தவறி விடாமலிருக்கவுமே, மதங்கள், வேதங்கள் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. அவ்விதம் பொதுவாக எல்லா வேதங்களும் மனிதனுக்குக் கூடாதெனக் கூறுகின்ற ஒரு செயல் விபச்சாரமாகும்.

எனினும் பல வேதங்களில் மனிதன் தன் கைச்சரக்கைச் சேர்க்க முடிந்து விட்டதனால், தனக்கு மகிழ்வளிக்கக்கூடிய தன்மையுடையதான இந்த விபச்சாரத்தைப் பற்றியக் கடுமையைக் குறைத்து, மறைமுகமாக அதற்குப் பல்வேறு வகைகளில் இடமும் கொடுத்துக் கொண்டுள்ளான். கந்தர்வம், களவொழுக்கம், பாபமன்னிப்பு போன்ற பல சமாதானங்களை ஏற்படுத்தி குற்றத்தின் தன்மையை மென்மையாக்க முயன்றுள்ளான். இதன் விளைவாக உலகில் விபச்சாரத்தின் பெருக்கத்தைக் காண முடிகிறதே தவிர, குறைவைப் பார்க்க முடியவில்லை.

ஆண்-பெண் என்பது இறைவன் படைப்பின் இயற்கை நியதியாகும். இவ்விரு பிரிவுகளுக்கு மத்தியில் இறைவன் காந்த சக்தியான ஒரு உணர்வைப் படைத்திருக்கிறான். இந்த உணர்வை நெறியோடும் முறையோடும் மனித இனம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென, ஆறாவது அறிவான பகுத்தறிவையும் தந்து, வழியையும் காட்டியுள்ளான். இவ்வழியை ஏற்று நடப்போருக்கு நல்வாழ்வையும் மீறி நடப்போருக்குத் தண்டனைகளையும் பிரகடனப் படுத்தியுள்ளான்.

மதங்களில் முதலாவதானதும் கடைசியானதுமான இஸ்லாம் மா.க்கத்தில் அதன் இறுதி வேதமான திருக்குர்ஆன்



ஷரீப் மூலம், மனித இனத்தின் இந்த இயற்கையான உணர்வைப் பரிசுத்தமான வழியில் கொண்டு செலுத்த, சீரிய முறையில், கட்டு திட்டங்களையும், சட்ட ஒழுங்குகளையும் வகுத்துக்கூறி, இவ்வொழுங்கை மீறும் செயலை 'விபச்சாரம்' எனக் கண்டித்துள்ளான்.

இஸ்லாம் மார்க்கச் சட்டப்படி, 'விபச்சாரம்' என்பது 'ஹராம்' ஆனச் செயலாகும். ஹராமான இக்காரியத்தைச் செய்வோருக்கு, கடுந்தண்டனைக்குப் பிறகே, மன்னிப்புண்டு.

## 2. திருந்திய திருக்கூட்டம்!

அண்ணலெம்பெருமான் முஹம்மது (ஸல்-அம்) அவர்கள் அரபு நாட்டில் பிறந்த காலையில், அந்த பூமியில் வாழ்ந்தவர்கள் பிற அறிவுத்துறைகளில் சிறந்து விளங்கினாலும், ஆண்-பெண் உறவுகளில் மிருகத்திலும் இழிந்தவர்களாகவே இருந்தனர். இதில் ஒரு சிறு விதிவிலக்காகப் பெற்ற தாய் மட்டும் இருந்தாள். தகப்பனின் மனைவி (சிற்றன்னை)மகனுக்கும் மனைவியாக இருப்பது சர்வசாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. அழகான சகோதரிகள், யுத்தத்தில் தோல்வியடைந்தோருடைய மனைவி, மக்கள், தாய்மார்கள், ஆடு மாடுகளைப் போல நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அடிமைப் பெண்கள் ஆகியோரெல்லாம், ஆண்களின் அன்றாடக் காமப் பசியின் விருந்துகளாகப் பயன்படுத்தப் பட்டனர்.

விபச்சாரம் என்பது அக்கால அரபு மக்களிடையே ஒரு குற்றச் செயலாக யாராலும் பேசப்பட்டதில்லை. அதற்கு மாறாக அது ஒரு பெருமைச் செயல்களில் ஒன்றாக சொல்லிக் கொள்ளப்பட்டது. கற்பழித்தல் என்பது வீரமாகக் குறிப்பிடப்பட்டு வந்தது. காமக் களியாட்டங்கள் என்பவை இலக்கியமாக விமர்சிக்கப்பட்டு வந்தன. ஆண்களுக்கிடையில் மட்டுமல்ல, பெண்கள் உலகிலும் அது பெருமைக்குரிய பேச்சுக்களில் ஒன்றாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் கவிஞர்கள் தங்கள் கவிதைகளை கஃபா வில் தான் அரங்கேற்றுவார்கள். அதாவது கவிதைகளைத் தோல்களில் எழுதி கஃபாவைச் சுற்றி தொங்க விடுவர். மக்கள் அவைகளைப் படித்து எந்தக் கவிதை மிகச்சிறந்தது என்று தேர்ந்தெடுத்து, அந்தக் கவிஞரைப் பாராட்டி கவுரவிப்பார் கள். இவ்விதம் பாராட்டுதலைப்பெறக் கூடிய கவிதைகள் பெரும்பாலும் விபச்சாரத் தன்மையைச் சித்தரிக்கும் கவிதை களாகவே இருக்கும். அதைஎழுதிய கவிஞர்களே பாராட்டைப் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள்.

அப்படிப் புகழப்பட்டு, பாராட்டுதலுக்குரிய கவிதையாக அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பிரபல கவிதைகளின் ஒன்று, ‘தன் சகோதரி மகளை ஏமாற்றி எப்படி அந்தக் கவி ஞன் கெடுத்தான்’ என்பது. மற்றொன்று. ‘தன் சிறிய தந் தையின் மனைவியைக் கவிஞன் எப்படி வசப்படுத்தினான்’ என்பது. இந்த ரகத்தில் வரைமுறையில்லாமல் அவர்களி டையே விபச்சாரம் பெருமை பெற்றிருந்தது.

பெருமானாரவர்கள் நபிப்பட்டம் பெறுவதற்கு முன்பே, அவர்கள் குடும்பத்துக்கு அரபு மக்களால் ஒரு ஏளனப்பெயர் ஏற்பட்டிருந்தது. அதுதான், ‘‘முஹம்மதின் பதினோரு தலைமுறையினர் விபச்சார இன்பம் தெரியாதவர்கள்’’ என்பதாகும். பெருமானாரவர்களின் தந்தை வழியிலும் தாய்வழி யிலும் உள்ள பதினோரு தலைமுறையினரில் யாரும், விபச் சாரத் தொடர்பே இல்லாதவர்களாக இறைவன் ஆக்கி வைத் துள்ளான் என்ற உண்மை இதன் மூலம் தெரியவருகிறது.

பெருமானாரவர்கள் தமது இளம் வயதிலிருந்தே, அரபு களின் இந்த விபச்சாரக் கலாச்சாரத்துக்கு முற்றிலும் முரண் பட்டவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். அல்லாஹ் வின் தூதுவராகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்பிருந்தே அவர்கள் எவ்விதம் மதுவை வெறுக்கக் கூடியவர்களாக இருந் தார்களோ, விக்ரகங்களின் முன் தலை சாய்க்க எவ்விதம் மறுக்கக் கூடியவர்களாக இருந்தார்களோ அவ்விதமே விபச் சாரத்திலும் முற்றிலும் ஒதுங்கியவர்களாக இருந்தனர்.



அண்ணல் முஹம்மது (ஸல்-அம்) அவர்கள் நபித்துவம் பெற்ற பிறகு, மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றியும், ஏக இறைவனைப் பற்றியும் போதிக்கத் தொடங்கினார்கள். ஈமா னின் பிடிப்பு படிப்படியாக மக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டு வந்தது. அந்த சமயம் பலர், விபச்சாரம் செய்வது பற்றி, நபி பிரான் (ஸல்-அம்) அவர்களிடம் கேட்டார்கள்.

அந்த சமயத்தில், விபச்சாரம் பற்றியோ அதற்குரிய தண் டனைகள் பற்றியோ அல்லாஹ்விடமிருந்து வேத வசனங் கள் வெளிப்படவில்லையாதலால், பெருமானார் (ஸல்-அம்) அவர்கள், விபச்சாரத்தைப் பற்றிப் பொதுவான கருத்துக் களைக் கூறினார்கள்.

★ ‘‘ஒரு மனிதன் விபச்சாரம் செய்கின்ற நேரத்தில் ஈமான் அவனை விட்டும் நீங்கி விடுகின்றது’’ என்று கூறி ஈமானைப் பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரித்தார்கள்,

★ ‘‘ஒரு அடியான் விபச்சாரம் செய்வானாயின், ஈமான் அவனை விட்டும் விலகிச் சென்று, அவன் தலைக்குமேல் (குடையைப் போல்) தனித்து விடுகிறது. விபச்சாரத்திலி ருந்து நீங்கிய பின் அது மீண்டும் அவனை வந்தடை கிறது’’ என்று கூறி, விபச்சாரத்திலிருக்கும் போது அவன் காபிராகி விடுகிறான்; திரும்ப அவன் தவறை உணரும் போது முஸ்லிம் ஆகிறான் என்ற பொருளில் உணர்த் தினார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்-அம்) அவர்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர்களுக்கு பெருமானாரின் கருத்துக்கள், விபச்சாரத்தை விட்டு விலகிவிடப் போதுமானவையாக இருந் தன. அவர்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்த ஈமானை விட்டு சில விநாடிகளேனும் ஒதுங்கி நிற்க தயாராக இல்லை.

அற்ப இச்சைக்காக சிறிது நேரம் காபிராக இருக்க அவர்கள் மனம் துளியளவும் இடம் கொடுக்கவில்லை.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையை நேரில் பார்த்த அவர்கள், விபச்சாரமில்லாமல் மனிதன் திருப்தியாக வாழமுடியும் என்ற உண்மையைப் புரிந்தவர்களாக இருந்தனர். ஆதலால் அவர்கள் தங்களை முற்றிலும் விபச்சாரத்திலிருந்து ஒதுக்கிக் கொண்டு வாழக் கூடியவர்களாக இருந்தனர்.

ஆனால் சாதாரண மக்கள், நபிகள் பிரான் அவர்கள் விபச்சாரத்தைப் பற்றிக் கடுமையாகச் சொல்ல வில்லையே என்பதால், அதை ஒரு பெரிய குற்றமெனக் கருதாதவர்களாய் நடந்து கொண்டு வந்தனர்.

இந்த சந்தர்ப்பத்திலேதான் ஒரு நாள் அல்லாஹ்வுடைய திருவசனம் வெளிப்பட்டது

★ ''விசுவாசிகளே! நீங்கள் விபச்சாரத்துக்கு நெருங்கவும் வேண்டாம். ஏனெனில் நிச்சயமாக அது மானக் கேடானதாகவும் தீய வழியாகவும் இருக்கிறது''

(அல்குர்ஆன் :17;32)

இந்தத் திருவசனம் வெளிவந்தவுடன், விபச்சாரத்தைப் பற்றிய அச்சப்பாடு எல்லா முஸ்லிம்களுக்கும் ஏற்படத் தொடங்கியது. ''விபச்சாரத்துக்கு நெருங்கவும் வேண்டாம்'' என்று அல்லாஹுத்தஆலா கூறியிருப்பதிலிருந்து, ''விபச்சாரம் புரியும் எண்ணங்கொள்வதே கூட பாபமான காரியம்'' என அவர்கள் உணர்ந்தார்கள். விபச்சாரம் புரிவது என்ற நிலைக்கு முன்னால் உள்ள நிலையையே இறைவன் தடுத்திருப்பதால், 'நெருங்கவும் வேண்டாம்' என்ற சொல்லுக்குச் சரியானப் பொருளாக 'தூரவிலகி நிற்பது' என்ற உண்மையைப் புரிந்து, விபச்சார சூழ்நிலைகளை விட்டு வெருண்டோட ஆரம்பித்தனர்.



மற்ற பெண்களோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புகள் ஏற்படுவது விபச்சார எண்ணங்களுக்குத் தூண்டுகோலாகி விடக்கூடும் என்ற அச்சத்துக்கு உள்ளாகி, தங்கள் மனைவியல்லாத மற்றப் பெண்களை ஏறிட்டுப் பார்ப்பதிலிருந்தும் விலகத் தலைப்பட்டனர். தங்கள் மனைவியல்லாத வேறு கன்னி அல்லது விதவைப் பெண்கள் மீது ஏற்கனவே பாசம் வைத்துத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் அவர்களை 'ஹலாலான' மனைவிகளாக்கிக் கொண்டனர். அடிமைப் பெண்களைத் தங்கள் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தவர்கள், அவர்களின் விருப்பத்தைக் கேட்டு, சம்மதித்தவர்களை மண முடித்தும், விடுதலை கொடுத்து விடுங்கள் எனக் கேட்டவர்களுக்கு விடுதலை கொடுத்தும் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டிருந்தனர்.

விபச்சாரத்தைச் சர்வ சாதாரணமாகக் கடைபிடித்து வந்த அந்தக் காட்டரபிக் கூட்டம், விபச்சாரத்திற்கு நெருங்குவதே ஒரு மானக் கேடானச் செயலாகவும், அது மாபெரும் தீயவழி என்றும் புரிந்து கொண்டு, பரிசுத்தமான இஸ்லாமியத் திருக் கூட்டமாக மாறியது; அருமை நபி (ஸல்-அம்) அவர்களைப் பின் தொடர்ந்த அருள் கூட்டமாக அது திகழ்ந்தது. பெருமானார் (ஸல்-அம்) அவர்களின் பேரொளியின் முன் விபச்சாரம் என்ற இருள் வெருண்டோடியது.

## 3. விபச்சார வேர்கள் அறுப்பு

விபச்சார மரங்கள் அனைத்தும் வீழ்ந்து விட்டன. ஆனால்?சிற்சில இடங்களில் வேர்களின் பிடிப்புகள் இருந்தன. இஸ்லாம் மார்க்கத்தில் பூரணமாக ஈமான் கொள்ளாமலிருந்தவர்களும், முஸ்லிம்களுக்கு மத்தியில் காபிர்களைப் போலும் தங்களைக் காட்டிக் கொண்டிருந்த 'முனாபிக்' (நயவஞ்சகர்)களும், தங்கள் உல்லாச வாழ்வை அவ்வளவு சுலபமாக விட்டு விடத் தயாராக இல்லை. இந்த மென்மையான இறைவசனம்

அவர்கள் மனதை மாற்றுவதாக இல்லை. முஸ்லிம்களில் சில ரும் கூட பழக்கத்துக்கு அடிமையாகி விட்ட காரணத்தினால், சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹுத் தஆலாவின், மேற் கூறிய 17:42 வசனம் ஒரு போதனையாக இருந்ததே தவிர,மீறி தவறு செய்வோரை என்ன செய்வது என்று வழி காட்டக் கூடியதாக இல்லை. ஆதலால், இறைவன் கட்டளையை மீறி நடப்போர் விஷயத் தில் முஸ்லிம்கள் எவ்விதம் நடந்து கெகள்வது என்று நபி கள் பிரான் (ஸல்-அம்) அவர்களைக் கேட்ட வண்ணமாக இருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்திலேதான் அல்லாஹ்வின் திருவசனம், முதலாவது சட்ட விளக்கமாக வெளிப் பட்டது:

''உங்களின் பெண்களில் எவரேனும் விபச்சாரம் செய்து விடின் அவளுக்காக நான்கு சாட்சியங்களை அழையுங்கள். அவர்கள் (அதனை உண்மைப் படுத்தி) சாட்சியம் கூறினால் இறப்பு அவளுடைய காரியத்தை முடித்து விடும் வரையில் அல்லது அல்லாஹ் அவளுக்கு ஒரு வழியை உண்டு பண்ணும் வரையில் அவளை வீட்டினுள் தடுத்து வையுங்கள்.''

(அல் குர்ஆன், 4: 15)

இந்தத் திரு வசனத்தின் மூலம், விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களை சரியான விசாரணைக்குப் பின் ஆயுள்வரை சிறைத் தண்டனை வைக்கவும், வீட்டை விட்டுத் தடுத்து வைக்கவும் சட்டமாகியது. ஆனால் விபச்சாரத்தில் சம்பந்தப் படும் ஆண்களுக்கு என்ன தண்டனை என்று அறிவிக்கப்பட வில்லை. அடுத்த வசனமாகிய 4:16 வது வசனத்திலே, ''ஆண்களில் இருவர் செய்து கொள்ளும் விபச்சாரத்திற்கே'' தண்டனை அறிவிக்கப் பட்டது,

இந்தக் காலக் கட்டத்திலே தவறு செய்து கொண்டிருந்த பல ஆண்கள் 'தவ்பா'ச் செய்து தங்கள் குற்றங்களிலிருந்து



மீண்டனர். பெண்களுக்குத் தண்டனையை அறிவித்து விட்ட இறைவன் ஆண்களுக்கான தண்டனையையும் அறிவித்து விடுவான் என அஞ்சி திருந்தினர். ஆயினும் ஒரு சிலர் இதிலும் அசட்டையாக இருந்தார்கள். ஆண்களுக்குக் கடுமை யான சட்டம் வராது என நம்பினார்கள்.

ஆனால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் ஏமாற்றமடைந்தார் கள். அல்லாஹ்வின் இரண்டாவது சட்ட விளக்கமாக, கடுமை தண்டனைகள் வெளிப் பட்டன.

''விபச்சாரம் செய்த பெண் விபச்சாரம் செய்த ஆண் இவர் களில் ஒவ்வொருவரையும் நூறு கசையடியடியுங்கள். மெய்யா கவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவா சங் கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ் விதித்த இக்கட் டளையை நிறைவேற்றுவதில் அவ்விருவர்களின் விஷயத் தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக் கூடாது. அவ்விருவருக்கு (தண்டனையாக) வேதனை கொடுக்கும் சமயத்தில் விசுவாசி களில் ஒரு குழுவினர் அதற்குச் சாட்சியாக அங்கு இருக்கவும்.

(அல்குர்ஆன், 24: 2)

இந்தத் திரு வசனத்தின் அகப் பொருளை விளங்கிய நபி கள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள், இறைவனின் இந்தக் கட் டளை, திருமணமாகாத கன்னிப் பெண்ணுக்கும் வாலிபருக்கும் உரியது என்றும் தண்டனைக்குப் பிறகு அவர்கள் திருந்தி வாழ சந்தர்ப்பங்கள் அளிக்கப் பட்டுள்ளன வென்றும் கூறி னார்கள்.

''திருமணமானவர்கள் இந்தக் குற்றத்தைச் செய்தால் அவர்களைக் கல்லால் எறிந்து கொல்லப் பட வேண்டும்'' என்ற கட்டளையை, அல்லாஹ்வின் ஆணையாக நாயகம் (ஸல்-அம்) அவர்கள் பிறப்பித்தார்கள்.

இதைத் தொடர்ந்து, அடிமைப் பெண்கள், அடிமை ஆண்கள் ஆகியவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டால் எத்த கைய, தண்டனையளிப்பது என்றும், பத்தினிப் பெண்கள் மீது

விபச்சாரக் குற்றம் சாட்டி அது பொய்ப்பிக்கப் பட்டால், குற்றம் சாட்டியவர்கள், பொய்ச் சாட்சி சொன்னவர்கள் முதலானோருக்கு என்னென்ன தண்டனைகள் வழங்குவதென்றும் மற்றும் விபச்சாரம் சம்பந்தமான குற்றங்களுக்கு எவ்விதத் தண்டனைகளை வழங்குவது என்றும் அறிவித்தார்கள். இவைகள் யாவற்றிலும் உச்சக்கட்ட தண்டனை, திருமணமானவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள கல்லெறிந்து கொல்லும் தண்டனையேயாகும்.

இந்தத் தண்டனைகள் தாட்சண்யமின்றி நிறைவேற்றப் பட்டன. மறுமையின் தண்டனை இதைவிடக் கொடுமையாக இருக்கும் என்பதை உணர்ந்த பலர், இனி தப்பிக்க முடியாது என்பதைப் புரிந்தவர்களாய் தாங்களே வலிய வந்து உண்மையைக் கூறி தண்டனைப் பெற்று மடிந்தார்கள். உண்மையை மறைத்து, அல்லாஹ்வின் கட்டளைகளை மீறிய காபிர்களாய் மாள்வதை விட நாயகத்திருமேனி (ஸல்-அம்) அவர்கள் சன்னிதானத்தில் உண்மையைக் கூறி, அதன் மூலம் கிடைக்கும் மரணத்தின் வாயிலாக நல்ல முஸ்லிமாய், ஜனாஸா தொழுகை பெற்றவர்களாய், மன நிம்மதியோடு மரணிக்க வேண்டுமென்றே விரும்பினர். இவ்விதம் விரும்பித் தண்டனை பெற்றோர் பலர்.

## 4. சாவிலும் உயர்ந்த சீலர்கள்!

மாயிசு இப்னுமாலிக்கில் அஸ்லமீ (ரலி) அவர்கள் சிறந்தொரு முஸ்லிமாகத் திகழ்ந்து வந்தவர்கள். அவர்கள் குற்றம் புரிந்தார்கள் என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். அவருடைய நேர்மையும் ஒழுங்கும் பகிரங்கமாக இருந்தது.

ஆனால் அவர் ரகசியத்தில் விபச்சாரத்தில் ஈடுபட்டு விட்டார். அதை மறைத்து சில நாட்கள் வாழ்ந்தார். எனினும் அவருடைய மனசாட்சி அவரை உறுத்திக் கொண்டே இருந்தது.



நாயகம் (ஸல்-அம்) அவர்களின் சன்னிதானத்துக்கு அடிக்கடி வரும் வாய்ப்புப் பெற்றிருந்த அவர், பரிசுத்த நபி நாதரையும் அல்லாஹ்வையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமே என மன வேதனைப் பட்டுக் கொண்டே இருந்தார். ஒரு நாள் துணிந்து, நபிகள்பிரான் (ஸல்-அம்) அவர்கள் முன் ஆஜராகி, ''நாயகமே! நான் எனக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டு விட்டேன்; விபச்சாரம் செய்து விட்டேன். நான் தூய்மையாக மரணிக்க விரும்புகிறேன் என்னைத் தூய்மைப் படுத்தி விடுங்கள்' என்று கூறினார்.

'விபச்சாரம் செய்தவனுச்குரிய தண்டனை, அவனை பூமியில் கழுத்து வரை புதைத்து கல்லால் அடித்துக் கொல்வதே' என்பதை நன்கு தெரிந்த மாயிசு (ரலி), பகிரங்கமாகத் தன் குற்றத்தை வெளிப் படுத்தித் தண்டனையைக் கேட்கிறாரே என வியப்படைந்த நபிகள் பிரான் (ஸல்-அம்) யாதொன்றும் கூறாது சிறிது நேரம் மலைப்பாக இருந்து விட்டு அவரைத் திரும்ப அனுப்பி விட்டனர். பின்னர், அடுத்த நாள் அவர் அண்ணலாரிடம் வந்து ''நாயகமே! நிச்சயமாக நான் விபச்சாரம் புரிந்து விட்டேன். ஆதலால் நான் தூய்மையடைய விரும்புகிறேன்'' என்றார்.

நபி பிரான் (ஸல்-அம்) அவர்கள் இம்முறையும் அவரைத் திரும்ப அனுப்பி விட்டார்கள். அதோடு தம்முடைய தோழர்களில் சிலரை அழைத்து, நீங்கள் மாயிசு (ரலி) வாழ்கின்ற பகுதிக்குச் சென்று அவருடைய அறிவில் ஏதாவது கோளாறு காண்கிறார்களா? அவர் பைத்தியக் காரத் தனமாய் ஏதேனும் நடந்து கொள்கிறாரா? அவருடைய போக்கில் புது மாறுதல் ஏதாவது ஏற்பட்டுள்ளதா? என்று விசாரித்து வாருங்கள்!' எனக் கூறி அனுப்பினார்கள்.

அவ்விதம் அவர்கள் போய் விசாரித்த போது, அங்குள்ளவர்களும் மாயிசு (ரலி) அவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களும், எங்களுக்குத் தெரிந்த வரையில் மாயிசு அவர்கள் எங்களைச் சேர்ந்த அறிஞர்களில் முக்கியமானவராகவே

திகழ்கிறார். அவருடைய நடத்தையில் எந்த விதமான மாறு தலையும் கண்டிலோம்'' என்று கூறியதாக நபிகள் பிரான் (ஸல்-அம்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மாயிசு (ரலி) மூன்றாம் முறை நாயகமவர்களின் சன்னி தானத்துக்கு வந்து, முன்பு கூறியதையே திரும்பக் கூறி னார். பெருமானாரவர்கள் அவரை மூன்று தினங்கள் கழித்து வரும்படி கூறி விட்டு, மீண்டும் சிலரை அனுப்பி, அவருடைய குடும்பத்துக்குள் ஏதாவது கோளாறுகள் ஏதேனும் சம்பவங் கள் நடந்துள்ளனவா? என்று விசாரித்து வர அனுப்பினார் கள்.

விசாரணைக்குச் சென்றவர்கள் திரும்பி வந்து, ''நாய கமே! அவ்விதமெல்லாம் எந்தவொரு சம்பவமும் அவர் வாழ்க் கையில் ஏற்பட்டதில்லை. அவர் எப்போதும் போலவே இருந்து வருகிறார்'' என்று கூறினர்.

நபிகள் பிரான் (ஸல்-அம்) அவர்களின் உத்திரவுபடி மூன்று நாள் கழித்து மாயிசு (ரலி) அவர்கள் ஆஜரான போது, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று ஏற்க னவே அவர் சொன்னதை மறந்து விட்டவர்கள் போல நபி யவர்கள் கேட்டனர். அவர் ஆரம்பத்தில் சொன்னதையே மீண்டும் சொன்னார்.

அதை மிகவும் கவலையோடு கேட்ட நாயகம் (ஸல்-அம்) அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதித்தார்கள். அதன் படி மாயிசு (ரலி) கழுத்து வரை குழியில் புதைக்கப் பட்டு கல் லாலெறிந்து கொல்லப் பட்டார்கள்.

(அறிப்பவர்; புரைதா (ரலி) ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத்)

இந்தச் சித்திரவதையால் கொல்லப் படுகிற போது மாயிசு (ரலி) அவர்கள் கதறவோ, துடிக்கவோ இல்லை. அவர்கள் இன்முகத்துடன் வேதனைகளைத் தாங்கிக்



கொண்டே இறையடி சேர்ந்தார்கள். மரணத்திற்குப் பின் அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நிறைவேற்றப் பட்டது. அண்ணலார் (ஸல்-அம்) அவர்களே முன்னின்று தொழு கையை நடத்தினார்கள்.

இந்தச் சம்பவம் நடந்த சில தினங்களில், காமிதிய்யா கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களுடைய சன்னிதானத்துக்கு வந்து, ''நாயகமே! நான் நிச்சயமாக விபச்சாரம் செய்து விட்டேன். தாங்கள் அதற்கு தண்டனையைக் கொடுத்து என்னைத் தூய்மைப் படுத்துங் கள்'' என்றாள்.

அதைக் கேட்ட அண்ணலார் (ஸல்-அம்) அவர்கள் அவ ளைத் திரும்பவும் வருமாறு கூறினர். அந்தப் பெண் அடுத்த நாளே வந்தாள். நாயகமவர்கள் வேறு ஏதும் சொல்வதற் கிடையில், ''அல்லாஹ்வின் தூதுவரே! தாங்கள் மாயிசு (ரலி) அவர்களுக்குச் செய்தது போல என்னைத் திரும்பவும் அனுப்பி' என்னைப் பற்றி விசாரிக்கத் தேவை யில்லை. அல்லாஹ்வின் மேல் ஆணையாக நான் கருவுற்றுள் ளேன்.''

''திரும்பத் திரும்ப வர உம்மால் இயலா விடின் நீர்சென்று பிரசவித்துவிட்டு வாரும்'' என்று நபிகள் பிரான் கூறினர். சில மாதங்களுக்குப் பிறகு அவள் தம் கையில் ஒரு குழந் தையைத் துணியில் போர்த்தியவாறு வந்து, ''நாயகமே! இந்தக் குழந்தையை நான் பெற்றெடுத்து விட்டேன். இப் போது எனக்குத் தண்டனையை வழங்குங்கள்'' என்றாள்.

''இதனை நீர் எடுத்துச் சென்று பாலூட்டி, பால்குடியை நிறுத்திய பின்னர் வாரும்'' என்றனர் நபிகள் திலகமவர்கள். பல மாதங்களுக்குப் பிறகு அந்தப் பெண்மணி நபிகள் நாதர் (ஸல்-அம்) அவர்கள் முன் ஆஜரரகி, ''நாயகமே! தங்கள் கட்டளைப்படி இந்தக் குழந்தைக்குப் பாலூட்டி, பால்குடியை

மறக்கச் செய்துவிட்டேன்'' என்ற போது, ''இப்போது உம்முடைய குற்றத்தை மீண்டும் சொல்லும்'' என்றனர் நபிகள் பிரானவர்கள். அவள் ஆரம்பத்திலே கூறியதையே திரும்பச் சொன்னாள்.

அதைச் செவியுற்ற நாயகம் (ஸல்-அம்) அவர்கள் அவளுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கினார்கள். அதன் படி கல்லெறிந்து அவள் கொல்லப்பட்டாள். அவள் மரணத் திற்குப்பின்பு, ஜனாஸாத் தொழுகை நடத்த உத்தரவிட்டார் கள். நபிகள் பிரான் (ஸல்-அம்) அவர்களே அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சினார்கள்.

அறிவிப்பவர்: புரைதா (ரலி)

ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத்

இந்தச் சம்பவங்கள் உதாரணத்துக்காக எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. இவ்விதம், தங்கள் குற்றங்களைத் தாங்களே கூறி தண்டனைக் கோரி வந்து, தண்டனைப் பெற்று, நபி கள் பிரான் (ஸம்-அம்) அவர்களின் பிரார்த்தனையுடன், சாவிலும் சத்தியம் காத்த சன்மார்க்க சீலர்கள் பலர் இஸ்லா மிய வரலாற்றில் பரவிக் கிடக்கின்றனர்.

நபிகள் திலகம் ரசூலே கரீம் (ஸல்-அம்) அவர்கள் காலத் திலும் சரி, அவர்களுக்குப் பிந்தி கலீபாக்களின் ஆட்சியின் போதும் சரி, உண்மையான மூமின்கள் விபச்சாரத்தைக் கண்டு அஞ்சி ஓடியொளிந்தனர். ஒரு சமயம் ஒரு சிலர் துரதிருஷ்டவசமாகத் தவறிவிடும் போது, மனம் வருந்தித் தங்கள் குற்றத்தைத் தாங்களே வெளிப்படுத்தித் தண்டனைப் பெற்று மரணமடைவதைப் பெருமையாகக் கருதினார்கள். அதன் மூலம் தங்களின் உயிரைவிட மார்க்கம் மிக்க உயர் வானது என்பதை உலகில் நிரூபித்துக் காட்டினார்கள். தங்க ளின் எதிர்கால சந்ததிகளுக்கு அது படிப்பினையாக இருக்க வேண்டும் எனக்கருதித் தங்களை முன்மாதிரியாக்கி அழித்துக் காட்டினார்கள்.

# 5. அச்சமும் தடுப்பு வழிகளும்!

உண்மையான முஸ்லிம்களும் மூமின்களும் விபச்சாரத் தைக் கண்டு அஞ்சினர். அது சம்பந்தமாக இஸ்லாம் மார்க் கம் கடைபிடித்த கடுமையான சட்டங்களையும் தண்டனை களையும் கண்டு அவர்கள் பயப்படவில்லை. 'அல்லாஹ்வுக் கும் ரசூலுக்கும் மாறுபட்ட ஒரு செயல் அது' என்று ஈமானின் அடிப்படையிலேயே அவர்கள் அஞ்சக் கூடியவர்களாக இருந் தார்கள்.

★ ஒரு சமயம் 'பஸ்ரா' நகரில் ஒரு இஸ்லாமிய பெரி யார் புகழுடன் வாழ்ந்து வந்தார், அவருக்கு ஏற்பட்டிருந்த புகழ் அவருடைய அறிவுத் திறனின் காரணத்தினால் மட்டு மல்ல, அவரிடமிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்த ஒரு புதுமையும் காரணமாக இருந்தது, அதாவது அவர் உடம்பு முழுவதிலுமிருந்து ஒரு விதமான நறுமணம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது, அவர் உடம்பைத் தொட்டவர்கள் மீதும் சிறிது நேரம் அம் மணம் நிலவி நின்றது.

அந்த அதிசயமான மனிதரை வந்து பார்க்கவும் அவரைத் தொட்டுத் தங்கள் கண்களில் ஒத்திக்கொள்ளவும் தினமும் பன்னூற்றுக்கணக்கான மக்கள் பஸ்ரா நகர் வருவதும் போவதுமாக இருந்தார்கள். நகரத்து மக்களும் கூட்டங் கூட்டமாக வந்து போய்க்கொண்டிருந்தனர். வயது முதிர்ந்த அவர், அந்த முதிர்ச்சியிலும் மிகவும் அழகாக இருந்தார். அவர் முகத்தில் காணப்பட்ட வனப்பும், பொலிவும் பார்ப்பவர் களையெல்லாம் மரியாதை செய்யும்படிச் செய்தன.

இதன் ரகசியத்தை மக்கள் அந்த பெரியவரிடம் கேட்டார் கள். அவர் கூறியதாவது:

''நான் என் இளம் வயதில் கட்டான உடலுடன் இன் னும் அழகாக இருந்தேன். சுருக்கமாகச் சொல்லப்போனால் இந்த நகரிலேயே என்னைவிட அழகான வாலிபன் யாரு

மில்லை என்று துணிந்து கூறும் அளவுக்கு அல்லாஹ் என்னை மிகவும் அழகாகத் தோற்றமளிக்கச் செய்தான். என்னுடைய தந்தை எண்ணெய் வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு உதவியாக என்னைக் கடையில் வைத்தார். நான் கடையில் இருக்கும் சமயங்களில் மட்டும் வியாபாரம் ஏராளமாக நடந்தது. கடைத்தெருவுக்கு வருவோர் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி என்னை கவனித்துப் பார்க்காமல் யாரும் செல்லமாட்டார்கள். குறிப்பாகப் பெண்கள் என்னை மிகவும் உற்று நோக்குவார்கள்.

''என் மீது விருப்பப்பட்டு தூது அனுப்பிய பெண்கள் ஏராளம். என்னைத் தங்கள் தவறான இச்சைக்குப் பலியாக்க முனைந்தவர்கள் பலர். அழகாக அல்லாஹ் படைத்துள்ளதற்குப் பெருமைப்பட்டேன். அந்த அழகு அல்லாஹ்வுடையதும் ரசூல் (ஸல்) அவர்களுடையதும் வழிமுறைகளுக்கு மாறு பட்டுப் போய்விடக்கூடாது என்பதில் அஞ்சியவனாக மிகவும் எச்சரிக்கையாக இருந்தேன்.

''ஒரு நாள் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருத்தி எங்கள் கடைக்கு வந்து, தன் எஜமானர் வியாபார விஷயமாக என்னிடம் விபரமாகப் பேச வேண்டியிருப்பதாகவும், சிறிது நேரம் வந்து விட்டுப் போகும்படியும் கேட்டுக்கொண்டாள். அதற்குச் சம்மதித்து எனது தந்தை என்னை அனுப்பி வைத்தார். நான் அவளைப் பின்தொடர்ந்து சென்றேன்.

பல தெருக்கள், சந்துபொந்துகள் கடந்து சென்று ஒரு பெரிய மாளிகை வாசலையடைந்தோம். அந்த மாளிகையைப் பார்த்தவுடனேயே அது சாதாரண மக்கள் வாழக்கூடிய இடமல்லவென்பதையும் பெரிய கோடீஸ்வரர்கள் வாழும் மாடமாளிகை என்பதைப் புரிந்துகொண்டேன். அதன் கதவு சார்த்தப்பட்டிருந்தது. கிழவி நேரடியாகக் கதவைத் தட்டாமல் அந்த மாளிகையைச் சுற்றி அழைத்துச் சென்று பின்புறமாகப் போய், அங்கு மூடப்பட்டிருந்த ஒரு சிறு கதவில், ஒரு அடையாளம் காட்டித் தட்டினாள். கதவை ஒரு பணிப்பெண்



திறந்து விட்டு விட்டு என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே மீண்டும் தாளிட்டாள். அவள் சிரித்த பாணியே எனக்குச் சரியாகப்படவில்லை. மனதில் ஒருவித சந்தேகம் எழுந்தது. ஆயினும் என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அவளைப் பின் தொடர்ந்தேன்.

நான் அந்த மாளிகையின் அந்தப்புரத்தில் இருக்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரமாகவில்லை. அழகழகான அறைகளைக் கடந்து, கடைசியில் பெரியதொரு அறைக் கதவைத் திறந்து அங்கு நான் மட்டும் உள்ளே அனுப்பப்பட்டேன். அங்கு நான் கண்டகாட்சி என்னையே திடுக்கிட வைத்தது.

அறை முழுவதும் இனிமையான மணம் வீசியது. அங்கிருந்த அழகிய கட்டிலில் கண்ணைக்கவரும் ஒரு அழகி மெல்லிய மல்லின் ஆடையை அணிந்தவளாய் ஒய்யாரமாய்ச் சாய்ந்திருந்தாள். அவளுடைய அங்க அடையாளங்களெல்லாம் அந்த மெல்லிய துணியின் மூலம் அப்படியே அப்பட்டமாய்த் தெரிந்தது. அவளழகைக் கண்டு நான் பிரமித்ததைப் போல, அவளும் என் அழகைக் கண்டு வியப்புடன் உற்று நோக்கினாள். அவள் முகத்தில் புன்சிரிப்பு வெளிப்பட்டது. சில நிமிடங்களுக்குப்பிறகு அவள் ஒய்யாரமாய் எழுந்து என் பக்கத்தில் வந்து ''வாருங்கள்! உட்காருங்கள்!'' என்று கூறி ஒரு விலையுயர்ந்த சோபாவைச் சுட்டிக் காட்டினாள். அவள் குரல் கூட மிகவும் இனிமையாக இருந்தது.

''நான் இங்கு வியாபார விஷயமாகப் பேச அழைக்கப்பட்டு வந்துள்ளேன்'' என்றேன். ஆனால் நான் அதற்காக அழைத்து வரப்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்.

அந்த அழகிய மாது என்னை விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டே, மென்மையாகவும் கவர்ச்சியாகவும் சிரித்து, ''ஆமாம்! வியாபாரம் தான்! நல்ல வியாபாரம்! நான் உங்களைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறேன்; ஆனால்

பார்த்ததில்லை. உலகில் பெண்கள் தான் அழகுடையவர்கள் என்று சொல்வார்கள். உங்களைப் பார்த்தவுடன், ஆண்களுடைய அழகு பெண்களின் அழகை வெல்லக்கூடியது என்பதைப் புரிந்துகொண்டேன். உங்கள் அழகைப்பற்றி என் கணவரே புகழ்ந்து கூறியிருக்கிறார்: இன்னும் பலரும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொன்னதெல்லாம் மிகவும் குறைவுதான் என்பதை உங்களை நேரில் இப்போது பார்க்கும்போதுதான் புரிகிறது. மேலும் நகரிலேயே என்னைவிட அழகானவர்கள் இல்லை என்று சொல்வார்கள். நான் அதைக்கேட்டு மிகவும் கர்வம் கொண்டிருந்தேன். ஆனால் உங்களைப் பார்த்த பிறகு என் கர்வமெல்லாம் அழிந்துவிட்டது. என்னையறியாமலேயே நான் உங்களுக்கு அடிமையாகி விட்டேன்'' என்று தன்னை மறந்து கூறினாள்.

அவளுடைய பேச்சிலிருந்து அவன் கணவனையுடைய ஒரு பெண் என்பதையும், அவள் என்னைக்கண்டு மோகத்தால் மதிமயங்கி நிற்கிறாள் என்பதையும் புரிந்து கொண்டேன். அவளுடைய உள் நோக்கமும் எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. நான் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல், மீண்டும், ''வியாபார விஷயமாக இங்கு அழைத்துவரப்பட்டேன்'' என்றேன்.

''நிச்சயமாக நல்ல வியாபாரம் தான்! என்னிடம் ஏராளமாகத் தங்கக் காசுகள் இருக்கின்றன. முத்துக்கள் ரத்தினங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளை உங்களுக்கு வாரி வாரிக் கொடுக்க காத்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே மூன்று பைகள் தங்க நாணயத்தைக் கொண்டு வந்து என்முன் வைத்தாள்.

நான் ஒன்றும் புரியாதவனைப்போல, ''என்ன சரக்கு உங்களுக்கு வேண்டும்?'' என்று என் பார்வையைத் தாழ்த்திக் கொண்டே கேட்டேன்,



''எல்லாவற்றையும்விட உயர்ந்த நீங்கள்தான் எனக்கு வேண்டும். என் ஆவலைப் பூர்த்தி செய்யவேண்டும்! ஒவ்வொரு நாளும் நீங்கள் இங்கு ரகசியமாக வரவேண்டும்! தேவையான தங்கத்தை எடுத்துச் செல்லவேண்டும்!'' என்று ஒருவித ஆவலுடன் கூறினாள்.

அவளுடைய துடிப்பைப் பார்த்த எனக்கு அவளுக்கு என்ன சமாதானம் சொன்னாலும் கட்டுப்படமாட்டாள் என்பது தெளிவாகப்பட்டது. விபச்சார உள்ளத்துக்கு ஆளாகி விட்ட ஒரு பெண், அவள் நினைத்ததைச் சாதிக்கும் வரையில் ஓய மாட்டாள் என்பதும் எனக்குப்பட்டது. என் மனதுக்குள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் அவனுடைய தூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்-அம்) அவக்களின் போதனைகளுக்கும் அஞ்சிக்கொண்டேன். நான் வழி தவறிவிடாமல் என்னைக் காப்பாற்றும்படியும் பிரார்த்தனை செய்துகொண்டேன்.

என் மனதில் திடீரென ஒரு யோசனை உதித்தது. அவளை யாதொன்றும் எதிர்த்துப் பேசாமல், ''எனக்கு வயிறு சரியாக இல்லை, மலம் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது'' என்றேன்.

அவள், நான் அவளுக்கு உடன்பட்டுவிட்டேன் என்று திருப்தியடைந்தவளாய், ''என் பின்னால் வாருங்கள்'' எனக் கூறி அழைத்துச் சென்று, மலம் கழிக்கும் இடத்தைக் காட்டி விட்டு ஒதுங்கிக்கொண்டாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு நான் அங்கிருந்து வெளி வந்தேன். என்னைக் கண்ட அவளுடைய முகமெல்லாம் சுளித்துப் போய்விட்டது. கண்களெல்லாம் சுருங்கி விட்டன. சிறிது நேரத்துக்கு முன்பிருந்த காமஉணர்வு மிக்க முகமெல்லாம் மாறி வெறுப்புடன் என்னை நோக்கினாள். தன் முந்தானையால் மூக்கை மூடிக்கொண்டாள். ஆத்திரத்துடன் கூச்சலிட்டு, என்னை அழைத்து வந்தக் கிழவியைக் கூப்பிட்டு,

'ச்சீ! ச்சீ! இந்தப் பைத்தியக்காரனை வெளியே விரட்டு! சீக்கிரம் விரட்டு! நாற்றம் சகிக்க முடியவில்லை!'' என்று அலறினாள்.

நான் என் முகம் கைகால்கள் எல்லாம் பூசிக்கொண்டிருந்த மலத்தைக் கண்ட கிழவியும் என்கிட்டே நெருங்காமல், கையை நீட்டி நான் வெளியே செல்ல வேண்டிய வழியைக் காட்டினாள். நான் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அமைதியாக வெளியேறி விட்டேன். வீடு வந்து சேர்ந்து, குளித்துச் சுத்தம் செய்துகொண்டு, அல்லாஹு தஆலா ஒரு மாபெரிய விபச்சார வலையிலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டதற்காக அவனுக்கு நன்றி செலுத்தும் விதத்தில், அதற்காக, நபில் தொழுகையும் சேர்த்துத் தொழுது விட்டுப் படுத்துவிட்டேன்.

அன்றிரவு நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது, யாரோ என் உடம்பு முழுவதையும் தடவுவதுபோல் உணர்ச்சி ஏற்பட்டு திடுக்கிட்டு விழித்தேன். என் எதிரே யாரோ ஒரு பெரியவர் நிற்பதுபோல் தெரிந்தது. ஒளி பொருந்திய அவரைக் காணவே என் கண்கள் கூசின. அவர் ஸலாம் கூறி சொன்னார், ''நான் அல்லாஹ்வின் அடிமையாகிய ஜிப்ரயீல் ஆவேன். அல்லாஹ்வின் கட்டளைப்படி உம்மை நறுமணமிக்கவராக இருக்கச் செய்ய ஆஜரானேன். என் வேலை முடிந்துவிட்டது'' என்று ஸலாம் கூறி மறைந்து விட்டார்.

அன்றிலிருந்து என் உடம்பு மணத்துக் கொண்டே இருக்கிறது'' என்றார் அப்பெரியவர்.

இந்தச் சம்பவத்திலிருந்து, விபச்சாரத்துக்கு எதிராக அல்லாஹ்வின் நல்லடியார்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?



# 6. விபச்சாரத்தின் ஆதிக்கம்

விபச்சாரத்துக்கும் பரிசுத்த வாழ்வுக்கும் இடையேயுள்ள போட்டியில், இன்றைய உலகில் பொதுவாக விபச்சாரம் தான் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்றால் மிகையாகாது. உலகிலுள்ள பெரும்பாலான மதங்களில் விபச்சாரத்துக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் இல்லையாதலாலும் அரசியலை நடத்தும் பல தலைவர்கள் கூட இவ் விஷயத்தில் பலவீனர்களாக இருக்கின்ற காரணத்தினாலும் விபச்சாரம் பற்பல வழிகளில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியே ஏற்பட்டுள்ளது.

நாகரிகத்தில் உயர்ந்து நிற்பதாகக் கூறப்படும் மேலை நாடுகளில், விபச்சாரத் தூண்டுதலுக்கு முக்கியக் காரணமான பெண்மை, ''பெண்கள் சுதந்திரம்'' ''பெண்கள் முன்னேற்றம்'' ''ஆண்-பெண் சேர்ந்து படிக்கும் கூட்டுக்கல்வி'' ''சேர்ந்து வேலை செய்யும் சம உரிமை'' போன்றவைகளின் வாய்ப்பால் விபச்சார உணர்வு பல்வேறு வகைகளின் தூண்டப்பட்டு, வாழ்க்கையில் அது சர்வ சாதாரணப் பிரச்னைகளில் ஒன்று போல ஆகி நிற்கிறது.

விபச்சாரத்தின் மற்றொரு பங்காளியானப் பெண்மையை ஆண்களின் பார்வையிலிருந்து முடிந்தவரை தடுத்து வைப்பதற்கு நேர் எதிரிடையாக, அவர்கள் கவர்ச்சியாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டு நடமாடவும், ஹோட்டல்கள், கடைகள் போன்ற வியாபார ஸ்தலங்களில் கவர்ச்சிகரமானப் பெண்களை வைத்தால்தான் வியாபாரம் நன்றாக நடக்கும் என்ற எண்ணத்தில் அழகியப் பெண்களைக் கொண்டு ஆண்களின் உள்ளங்களைச் சபலப்படுத்தவும், பாட்டு, நடனம் என்ற பெயரில் அவர்களை ஏவி விட்டு ஆண்களின் விபச்சார உணர்வைத் தூண்டவுமான காரியங்கள் நாகரிக முத்திரையுடன் தங்கு தடையின்றி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆண்களின் காம உணர்வைத் தூண்டுவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட நடனத்துக்குக் 'கலை' என்ற முடியைச் சூட்டி, பெண்களின் அங்க அசைவுகளையும், காமச் சல்லாபங்களின் நெளிவு வளைவுகளையும் அதன் மூலம் வெளிப்படுத்தி ஆண்களின் உள்ளங்களைச் கிளர்ந்தெழச் செய்யவும், அதன் விளைவாக விபச்சாரங்கள் பெருகவும் வழிகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

இவற்றின் மூலமாக ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவ வயது ஏற்படுகின்றபோதே, விபச்சார உணர்வுகளுக்கு ஆளாக, தாராளமாகப் பாதைகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு ஆணும் பெண்ணும் திருமணமானவுடன் வளர்த்துக் கொள்ள வேண்டிய 'காதல்' என்ற அன்பின் வளர்ச்சியைக் கட்டவிழ்த்துவிட்டு, கள்ளத்தனமான நெருக்கத்துக்கு இடமளித்து அதற்கு 'தெய்வீக' சாயம் தடவப்பட்டுள்ளது.

இதன்விளைவாக, அமெரிக்கா போன்ற நாடுகளில் கல்லூரிகளில் படிக்கும் பெண்கள் 93 சதவிகிதத்தினர் காதல் விவகாரங்களுக்கு ஆளாகின்றனர் என்றும், இவர்களில் திருமணத்திற்கு முன்பாக 78 சதவிகிதத்தினர் கருத்தரித்து வருகிறார்கள் என்றும், 65 சதவிகிதத்தினர் 'கருக்கலைவு' செய்து கொள்கிறார்கள் என்றும், நிர்ப்பந்தமாகப் பிறக்கும் குழந்தைகள் அனாதை இல்லங்களில் சேர்க்கப்படுவதாகவும் கணக்குக் கூறுகிறார்கள். கல்லூரிகளில் ஏற்படும் காதல்களில் 5 சதவிகிதம்தான் திருமணத்தில் முடிவதாகவும் மற்றவை விபச்சாரத்தில் முடிவதாகவும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

மேற்கு ஜெர்மனியில்தான் உலகத்திலேயே அதிகமான பெண்கள் பொது வேலைகளுக்குச் செல்கிறார்கள். ஆண்களோடு சேர்ந்து வேலை செய்யும் திருமணம் முடிந்த அல்லது முடிக்காத பெண்களில் 100க்கு 82 சதவிகிதத்தினர் தங்கள் கற்பைப் பறிகொடுத்து விடுகிறார்கள் என்று புள்ளி விபரம் கூறுகிறது. ஆதலால் பெண்கள் சங்கங்கள் பலவற்றைத் தோற்றுவித்து, பெண்கள் வேலைக்குப் போகக் கூடாதென்



றும், ஒரு குடும்பத்தைக் கவனிப்பதே ஒரு பெண்ணுக்குப் போதிய வேலையாகவுள்ளது என்றும் பிரச்சாரம் செய்து, வரவர வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கைக் குறைந்து வருவதாகவும் அந்நாட்டுச் செய்திகள் கூறுகின்றன. இவ்விதமே பெரும்பாலான மேலை நாடுகளும், கீழை நாடுகளும் உள்ளன.

நாகரிகத்தின் பேரால் பெண்கள் 'கிளப்'களுக்குச் செல்வதும், ஆண்களேகூட அழைத்துச் செல்வதும், அங்கே குடித்துவிட்டு நடனத்தின் பெயரால் ஒருவன் மனைவியை மற்றொருவன் பிடித்துக் கொண்டு ஆடுவதும் இதன் விளைவாக மோகம் திசைமாறுவதும், விபச்சார விளைவுகள் உண்டாவதும், அடிதடிகள், விவாக ரத்துக்கள் ஏற்படுவதும் வழக்கமான நிகழ்ச்சிகளாக இருக்கின்றன.

இந்தியா போன்ற நாடுகளிலே, நடன மாதர்கள் (நாச்வாலி) லைசன்ஸ்கள் கொடுத்து விபச்சாரத்துக்கு பகிரங்கமாக வழி திறந்து விடப்பட்டுள்ளதன் விளைவாக, வடஇந்தியாவின் பெரிய நகரங்களிலெல்லாம்; 'சிவப்பு விளக்கு' பகுதிகள் வெளிச்சம் போட்டுக் கொண்டிருக்கின்றன. கீழ்த்திசை நாடுகள் பலவற்றில் விபச்சார லைசன்ஸ் நேரிடையாக வழங்கி, அரசாங்கங்கள் தங்கள் பலவீனத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

விபச்சாரத்தின் ஆதிக்கம் உலகை வென்று கொண்டிருப்பதற்கு ஆதாரமாக, 'கருச்சிதைவு'க்கு அந்தந்த நாடும் அனுமதியளிக்கத் தொடங்கியிருப்பதைக் குறிப்பிடலாம். 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற பெயரால் இந்த அனுமதிகள் வழங்கியிருந்தாலும், அது மறைமுகமாக விபச்சாரத்தின் முன் அமைந்துள்ள தோல்வியையே குறிக்கிறது. கருச்சிதைவு அனுமதி, விபச்சாரத்துக்கு நல்லதொரு உறுதுணையாகவும் அமைந்துள்ளதென்றால் அதை மறுக்க வியலாது.

கம்யூனிஸ நாடுகளில் பல விபச்சாரத்தின் முன்னால் அடைந்துள்ள தோல்வியை மறைப்பதற்காக, பிறக்கும் குழந்தைகளின் தகப்பன் யார் எனப் பதிவு செய்யவேண்டிய தில்லையென்றும், பிள்ளைகள் தங்கள் விலாசங்களாகத் தகப்பன் பெயரின் முதல் எழுத்துக்களுக்குப் பதிலாகத் தாயின் பெயரை வைத்துக்கொள்ளலாம் என்றும் சலுகைகள் அளித் துள்ளன.

ஒட்டு மொத்தமாகக் கூறுவதானால், விபச்சாரம் என்பதைப் பொதுவாகவே மக்கள் உள்ளத்தளவில் வெறுக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை எதிர்த்து வலிமையாக நின்றுப் போராட சக்தியில்லாத காரணத்தாலோ, சரியான வழிமுறைகள் தெரியாத காரணத்தாலோ, அதன் ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி பெற முடியாமல் தோல்வி கண்டுள்ளவர்களாகவே, எல்லா நாட்டினரும் மதத்தவரும் இருக்கிறார்கள்.

இஸ்லாம் மார்க்கம் ஒன்றுதான் விபச்சாரத்தை எதிர்த்து தெளிவான வழியையும், விபச்சாரத்தை ஒழிக்கக் கடுமையான தண்டனைகளையும், பிரகடனப்படுத்தி, நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்-அம்) அவர்களால் அமுல்படுத்திக் காட்டியுள்ளது.

## 7. கடுமையான தண்டனையல்லவா?

விபச்சாரம் செய்தவர்கள் திருமணம் முடித்துக்கொள்ளாதவர்களாய் இருந்தால், ஆணுக்கும் பெண்ணுக்கும் பகிரங்கமாக நூறு கசையடிகள் கொடுத்து திருந்தி வாழ வாய்ப்பளிக்க வேண்டும் என்பதும், திருமணம் புரிந்தவர்களாக இருந்தால் சாகும் வரை கல்லால் அடித்துக் கொல்லப்பட வேண்டும் என்றும் உள்ள தண்டனை மிகவும் கடுமையானதல்லவா? என விவாதிக்கப்படுகிறது.



மேம்போக்காகப் பார்த்தால் இது கொடுமையானத் தண்டனையாகவே தெரியும் என்பதில் ஐயமில்லை; ஆனால் விபச்சாரத்தினால் விளையும் கொடுமைகளை ஆராய்ந்தால் இந்த தண்டனை நியாயமானது என்றும், இவ்விதக் கடுமையைக் கடைப்பிடிக்கா விட்டால், விபச்சாரத்தை எவ்வகையிலும் ஒழிக்க முடியாது என்பதும் புலப்படும். இவ்விதம் கடுமையான தண்டனை இல்லாத காரணத்தினால் தான் இன்றைய உலகத்தை விபச்சாரம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

கன்னித்தன்மையுடைய விபச்சாரகர்கள் பகிரங்கமாகச் கசையடி கொடுக்கப்படுவதன் காரணமாக அவமானத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதன் பிறகு அவர்கள் இருவரும் கணவன்-மனைவியாகச் சேர்ந்து வாழ்வதைத்தவிர வேறு வாழ்க்கை அவர்களுக்கில்லை. சமூக அந்தஸ்தை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமானால் அது ஒன்று தான் வழியாக இருக்கிறது. அல்லது அவர்கள் சமூக அந்தஸ்தை இழந்து அப்பகுதியில் வாழ முடியாமல் வேறு பகுதிக்குத் தனித்தனியே சென்று வாழ முற்படுவதாயினும். அவர்கள் பெற்ற தண்டனையை அவர்களால் மறக்க முடியாது. மீண்டும் விபச்சாரத்தில் ஈடுபடத் துணிய மாட்டார்கள். அபராதம் விதிப்பதாலோ ஜெயில் தண்டனையளிப்பதாலோ அவர்கள் திரும்பி வந்து மீண்டும் விபச்சாரத்தைத் தொழிலாகச் செய்ய தைரியம் இருக்கும். ஆனால் மீண்டும் மீண்டும் எத்தனை நூறு கசையடிகளை அவர்களால் தாங்க தைரியமிருக்க முடியும்?

மேலும் இந்தத் தண்டனை பகிரங்கமாக நிறைவேற்றப் படுவதால் கன்னித் தன்மையுடைய மற்ற வாலிபர்களும் பெண்களும் அச்சப்பட்டு விபச்சாரத்தை நினைப்பதை விட்டும் ஒதுங்கி நிற்க வாய்ப்புகள் எற்படும். சவுக்கடிகளைக் கண்களால் பார்த்து விட்டவர்கள் காலமெல்லாம் விபச்சாரத்தை நினைக்கவே மாட்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலால் தண்டனை பெறுவர்களின் எண்ணிக்கை மிகவேகமாகக் குறையுமே தவிர வளராது. பொதுவாகத் தண்டனைகள்

என்பவையுடைய நோக்கமே, குற்றம் புரிபவர்களைத் தண்டிப்பது மட்டுமல்ல. மீண்டும் அவர்கள் குற்றம் புரியாமலும். மற்றவர்கள் அந்தக் குற்றத்தைப் புரியாமல் வாழ முற்படவும் வேண்டும் என்பதே உலக சட்டங்களின் அடிப்படையாகும். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவது இஸ்லாமிய சட்டங்களாகவே இருக்கின்றன.

திருமணமானவர்கள் விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லெறிந்து கொன்று விடும்படி இஸ்லாமிய சட்டம் கட்டளையிட்டிருப்பதன் முக்கிய காரணங்கள் பல.

1. அந்த விபச்சாரர்கள் சமுதாய வாழ்வின் ஒழுங்கைச் சீர்குலைக்கின்றனர்.

2. தன்னை நம்பியவர்களை ஒருவருக்கொருவர் மோசம் செய்கின்றனர்.

3. குடும்பங்களின் முந்திய பாரம்பரியத்தையும், பிந்திய பாரம்பரியத்தையும் அவநம்பிக்கைக்கும், அசுத்தத்துக்கும் ஆளாக்குகின்றனர்.

4. கொலைகள் விளையவும், நிரபராதிகள் குற்றவாளிகளாகவும் காரணமாக இருக்கின்றனர்.

5. கொடுமையான தொத்து வியாதிகளைப் பரப்பும் பெரிய விஷக் கிருமிகளாக இருக்கின்றனர்.

இத்தியாதி காரணங்களால் தான், அவர்கள் மனித சமுதாயத்தின் மத்தியிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று இஸ்லாம் மார்க்கம், சிறிதும் சலுகையின்றி சட்டங்களை வகுத்துள்ளது.

1, உலகிலுள்ள எல்லா மார்க்கங்களிலும் அவைகளின் தெய்வ நம்பிக்கை, வழிபாடு, சமுதாயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் முதலானவற்றிலெல்லாம் பற்பல வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாக



வாழ்வதற்குரிய ஒழுங்குமுறை பொதுவாக ஒன்றாகவே இருந்து வருகிறது.

கணவன் தன் உடல் இன்பத்தைத் துய்த்துக் கொள்ள மனைவியிடம் பூரண உரிமைப் பெற்றவனாக இருக்கிறான். அதன் விளைவாக ஏற்படுகின்ற சந்ததிகளுக்கு அவள் பொறுப்பேற்றுக் கொள்கிறாள். தன்னுடைய தேவைக்குரியவளாகவுள்ள மனைவியின் உடல்நலத்தைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கிறான். தன்னுடைய வருமானத்துக்குத் தகுந்தாற்போல குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் குடும்பத்தின் அந்தஸ்தை உயர்த்தவும் கடமைப்பட்டிருக்கிறாள். நிகழ்காலத்தின் தேவைகளோடு மட்டுமல்லாமல் வசதியிருந்தால், எதிர்காலத் தேவைகளுக்கும் வேண்டியதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளான். குடும்பம் என்ற ஒரு மரியாதையுடன் வட்டத்துக்குக் கட்டுப்பட்டு செயல்பட வேண்டியவனாகவுள்ளான்.

அவ்விதமே ஒரு பெண்ணும் தன்னுடைய கணவனுக்குக் கட்டுப்பட்டு அவனுடைய கருவைச் சுமந்து, பெற்றுப் பாதுகாத்து வளர்க்கவும், தன் கணவனின் உடல் நலம், கஷ்ட நஷ்டம் ஆகியவைகளில் பங்கேற்கவும் அவனுடைய வருமானம் மற்றும் சொத்து சுதந்திரம், எதிர்கால சேமிப்புகள் ஆகியவைகளை வீண் விரயத்துக்கு இடமின்றிப் பாதுகாக்கவும், அதே சமயம் தன் கற்பைப் பாதுகாத்துக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறாள்.

பொதுவான இந்த ஒழுங்கு, எல்லா ஆண் பெண்களும் சமுதாயத்தில் கடைபிடித்து வரக்கூடியதாகும். தனி மனிதர்களிலிருந்து குடும்பம் ஏற்பட்டு, குடும்பத்திலிருந்து சமுதாயம் உருவாகி இந்த அடிப்படையில் தான் இயங்கிக் கொண்டு வருகிறது. ஆனால், விபச்சாரம் செய்கிறவர்கள் இந்தச் சமுதாய ஒழுங்கை அற்ப லாபங்களுக்காகவோ, உணர்ச்சிகளுக்காகவோ சீர்குலைக்கின்றனர், இதன் மூலம் சமுதாய துரோகம் செய்கின்றனர்.

2. மனித வாழ்க்கையின் அடிப்படையே நம்பிக்கை யாகும். பக்தன் இறைவனை நம்பிக்கையின் காரணமாகவே வணங்கி வருகிறான். கணவன் - மனைவி நம்பிக்கை என்பது வாழ்க்கையின் அஸ்திவாரமாகும். விபச்சாரம் புரிபவனோ புரிபவளோ மற்றவரை நம்பிக்கைத் துரோகம் செய்கின்றனர்.

3. ஒரு பெண் இயற்கையிலேயே தன் கணவனுக்குக் கருவுற்றவளாக இருந்தும் விபச்சாரம் செய்து விட்டாளாயின், கணவன் அவன் பெறப்போகும் குழந்தையை மட்டுமல்ல. பெற்ற குழந்தைகளையும் சந்தேகிக்கத் தொடங்கிவிடுகிறான். அந்தப் பெண்ணின் குடும்பத்தினரும் அதனால் பாதிக்கப்படு கின்றனர். குடும்பமே கெட்ட பெயருக்குள்ளாகிறது. கணவ னுடைய மரியாதையும் சமூக அந்தஸ்தும் அழிகிறது.

தகப்பன் யாரென்று தெரியாமல் பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தின் அசுத்தங்களாகக் கருதப்படுகின்றன, தன் தாய் ஒரு விபச்சாரி என்று தெரிந்து கொள்ளும் குழந்தை, தான் எந்தத் தப்பும் செய்யலாம் என்ற துணிவுக்கு வந்து விடுகிறது; அல்லது தாழ்வு மனப்பான்மையினால் தலை குனிந்து வாழத் தொடங்குகிறது. இதனால் விபச்சாரகர்கள் தங்கள் தங்கள் சந்ததிகளுக்கும் தீங்கிழைக்கிறார்கள் என்ப தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

4. விபச்சாரம் கண்ணால் காணப்பட்டுவிட்டால் அது அநேகமாகக் கொலையில் முடியாமல் தப்பிப்பதில்லை. தன் மனைவி அன்னியன் ஒருவனோடு சேர்ந்துள்ள காட்சியைக் காணும் ஒரு கணவனால் அதைச் சகித்துக்கொள்ள பெரும் பாலும் முடிவதில்லை. அவர்களில் ஒருவரையோ, இருவரை யுமோ கொலை செய்து விடும் நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக எல்லா நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

விபச்சாரகர்கள் செய்த தவறினால் நிரபராதியான கண வன் கொலைகாரனாகிறான். அதையொட்டி அந்தக் குடும் பமே நாசமாகிறது.



விபச்சாரத்துக்குத் தன் கணவன் தடையாக இருக்கிறான் என்பதற்காகக் கணவனை விஷமிட்டுக் கொன்ற விபச்சாரி களின் கதைகள் எண்ணிலடங்காதவை. விபச்சாரத்தில் பிறந்த குழந்தைகளைக் கொன்ற விபச்சாரிகளின் கதைகளும் கணக்கிட முடியாதவை. விபச்சாரம் என்பது அற்பநேர சுகப் பிரச்னையாக இருந்தாலும், திடீரென அது வெடிக்கும்போது கொலைகளுக்கும் காரணமாகிறது.

5. விபச்சாரர்கள் தங்களையறியாமல் 'பால் நோய் களுக்கு ஆளாகின்றனர். அந்த நோயை பெண் ஆணுக்கும் ஆண் பெண்ணுக்கும் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். வெளி யிலே நோயை பிடித்துக் கொண்டு வரும் ஆண், பரிசுத்தமான மனைவியை வியாதிக்குள்ளாக்குகிறான். ஒரு பெண் பல ஆண்களை நாசப்படுத்துகிறாள். பால் நோய்க்கு ஆளான வர்கள் மூலம் உண்டாகும் சந்ததிகள் பெரும் பாலும் குறை யுடையவைகளாகவே உலகில் பிறக்கின்றன.

இவைபோன்ற பல காரணங்களினாலேயே, விபச்சாரம் புரிவோருக்கு இஸ்லாம் கருணைக்காட்ட முன்வரவில்லை. விபச்சாரகர்கள் சமுதாயத்திலிருந்து அடியோடு அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று அது முடிவு கட்டியுள்ளது.

விபச்சாரம் உண்மையிலேயே உலகை விட்டு சுத்தப்படுத் தப்பட வேண்டுமானால், இஸ்லாமிய வழி ஒன்றினால் மட்டுமே அது முடியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. விபச்சாரகர்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல் விபச்சார மின்றி ஆண்களும், பெண்களும் வாழ திருமணச் சட்டங்களை யும் அது வகுத்துக் கொடுத்துள்ளது.

நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்து கொள்ள அனுமதி கொடுத்திருப்பது, ஒவ்வொருவரும் நான்கு மனைவி களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. அது விபச்சாரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு பாதுகாப்பேயாகும்.

விபச்சாரம் புரிபவர்கள் அல்லாஹ்வுக்கும், ரசூல் (ஸல்-அம்) அவர்களுக்கும் மாறுபட்டவர்கள் என்பதோடு, உலகிலும் குற்றவாளிகளாகி இழிந்து போகிறார்கள் என்பதையும், உலகத் தண்டனைகளிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொண்டாலும் நாளை மறுமையில், அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அவர்கள் தப்பமுடியாது என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். எல்லாம் வல்ல இறைவன் விபச்சார சூழ்நிலைகளிலிருந்து நம்மையும், நம் குடும்பத்தையும், சந்ததிகளையும் காப்பாற்றுவானாக!

—✶—

## மூன்றாம் பாகம்

## சூதாட்டம்

# 1. மறையும், மாநபியும் எதிர்ப்பது!

இஸ்லாம் மார்க்கம் மனிதனின் உழைப்புக்குப் பெருமதிப்பளிக்கும் மதமாகும்.

''உழைப்பதனால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு உண்ணப்படும் உணவே உணவுகளிலெல்லாம் சிறந்த உணவு'' என்பது நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் போதனை. வியாபாரத்தில் ஈடுபடுவதேயாயினும், அளத்தல், நிறுத்தல்களில் மோசடியின்றியும், தட்டுப்பாடுகள் உள்ள காலத்தில் பதுக்கி வைத்து விலையுயர்வு செய்யாமலும் அல்லாஹ்வுக்கு பயந்தவர்களாய் நேர்மை தவறாமல் சம்பாத்யம் செய்யவேண்டும். சூதாக சம்பாதிக்க இஸ்லாம் மார்க்கத்தில் அறவே இடமில்லை.

முறையான உழைப்பிலும், வியாபாரத்திலும் கூட சூது சூழ்ச்சி, ஆகியவைகளைத் தடுத்துள்ள இஸ்லாம், சூதாடுதல் என்ற செயலை அங்கீகரிக்குமா? இஸ்லாம் மார்க்கத்தில் ஒரு



சிறு அளவுக்குக்கூட சூதாடுதலுக்கு இடமளிக்கப்படவில்லை. அதை 'ஹராம்' எனத்தடுத்துள்ளது. அதை மது அருந்துதலுக்குச் சமமாகக் கருதுகிறது. ஆதலால்தான் சூதாட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, மதுவருந்துதலையும் சேர்த்துச் சொல்கிறது.

★ (நபியே!) சாராயத்தை பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறும்; 'இவ்விரண்டிலும் பெரும் பாபமிருக்கிறது; மனிதர்களுக்குச் சில பயன்களுமிருக்கின்றன, ஆனால், அவ்விரண்டிலுள்ள பயனைவிட பாபம் மிகப் பெரியது.''

அல்குர்ஆன்: 22; 19

இவ்விதம் குர்ஆன் ஷரீப் எச்சரிக்கிறது.

பொதுவாகச் சூதாட்டம் என்பது மனிதனுக்கு ஆர்வத்தை ஊட்டக் கூடியது. அதன் மூலமாக 'சுலபமான' வருமானத்தை அடைய வாய்ப்பு இருப்பதால் மனிதனை அது அதிகம் கவர்கிறது. 'சுலப வருமான' உணர்வு அவனுக்கு ஏற்பட்டபின், உழைக்கும் தன்மையையும், ஆர்வத்தையும் அவன் இயற்கையாகவே இழந்து விடுகிறான். சூதாட்டத்தின் மூலம் எப்படியும் பெரும் பொருளைத் திரட்டிவிட முடியும் என்று நம்புகிறான். சில சமயங்களில் கிடைக்கும் அற்ப லாபங்களை அவன் சாஸ்வதமாக நம்பத்தொடங்குகிறான். அவன் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டக்கூடிய அந்த அற்ப லாபமே அவனை முற்றிலும் அதில் ஈடுபடச் செய்து அவனை அழித்துவிடக் கூடிய ஷைத்தானாகி விடுகிறது என்பதை அவனால் ஆரம்பத்தில் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது.

மதுவருந்துபவன் முதலில் ஏதோ காரணங்களுக்காகக் கொஞ்சம்தான் அருந்துகிறான். அது உள்ளே சென்றவுடன் மேலும் கொஞ்சம் குடிக்கத் தூண்டுகிறது. பிறகு மீண்டும் கொஞ்சம் குடிக்கத் தூண்டுகிறது. அவன் அதிலே சுவை கண்டு விடுகிறான், நாளாவட்டத்தில் அவன் அதற்கு

அடிமையாகிவிடுகிறான். அதுபோலவே தான் சூதாட்டமும். விளையாட்டாகவும், பொழுதுபோக்காகவும் தொடங்குகின்ற சூதாட்டம், அவன் வாழ்வின் அடிப்படையைப் பற்றிப் பிடித்துக்கொண்டு விடுகிறது. வாழ்வின் முழு நம்பிக்கையை யும் அதன்மீது வைத்து விடுகின்றான்; அதற்கு முழு அடிமை யாகின்றான். அவன் அழிந்துபோகும் வரை அதிலிருந்து மீள முடியாதவனாகி விடுகின்றான்,

சூதாட்ட ஆர்வமும் ஒருவிதமான மனோ வியாதியே யாகும். ''இறைவனால் சபிக்கப்பட்ட ஷைத்தானுக்குப் பிரிய மான செயல்களில் அது ஒன்றெனவும், சூதாடுபவன் ஷைத்தானைச் சந்தோஷப்படுத்தி, அவன் நண்பனாக ஆகி விடுகின்றான்'' எனவும் இஸ்லாம் கூறுகிறது. மேலும், ''சூதாடுதல் இறைவனுக்கு வெறுப்பான செயலாகவும் இறைத் தூதர் இனிய நபி (ஸல்-அம்) அவர்களின் வாழ்வுக் கும் வழிமுறைக்கும் புறம்பானதாகவும் இருக்கின்றது, இச் செயலைச் செய்கிறவர் இறைவனின் கோபத்தைத் தேடிக் கொள்கிறவர்களாகவும், அறநெறி காத்த அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களைப் புறக்கணித்தவர்களாகவும் ஆகின்ற னர்'' எனறும் மார்க்கம் எச்சரிக்கிறது.

இஸ்லாம் மார்க்கம் சூதாட்டத்தை எத்தனைதூரம் வெறுக் கிறது என்றால். சூதாட்டத்துக்குப் பயன்படும் பொருளைக் கூடத் தொடக்கூடாது என்று அது உத்திரவிட்டுள்ளது.

இந்தக் காலத்தில் தாயம், பகடைக்காய், சீட்டுக்கட்டு போன்றவை சூதாடுவதற்குக் கருவிகளால் இருப்பதைப்போல அக்காலத்தில், 'நர்து' என்ற பொருள் பயன்பட்டு வந்தது. இதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கூறும் போது, ''நர்து என்ற சூதாட்டக் கருவியைத் தனது கரத்தால் தீண்டுகிறவன், அதைப் பன்றியின் மாமிசத்திலும் இரத்தத் திலும் தோய்ந்தவனாகிறான். சூதாடிவிட்டுத் தொழுகிறவன் பன்றியின் ரத்தத்தினால் 'உளூச்செய்து விட்டுதொழுதவனைப் போலாகிறான்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்; முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா)

# 2. அறிவைச் சூன்யமாக்குவது!

சூதாட்டத்திலுள்ள மிகப் பெரும் தீமைகளில் ஒன்று அது மனிதனின் அறிவைச் சூன்யமாக்கிவிடும் சக்தி பெற்றிருப்பதே யாகும். சூதாட்ட புத்தி எவனுக்கு ஏற்பட்டு விடுகிறதோ அவனை அந்த உணர்வுதான் வெகுவாய் ஆட்கொண்டு விடு கிறது. அதுவே அவனுடைய சிந்தனையில் முதலிடம் பெற்று விடுகிறது. அவன் அந்த ஆட்டத்தில் மூழ்கியிருக்கும்போதும் சரி, விலகி இருக்கும் போதும் சரி, அந்த எண்ணத்திலேயே தன்னை முற்றிலும் மூழ்கடித்துக் கொண்டவனாக இருக் கிறான். வெற்றி பெறுபவன் மேலும் மேலும் வெற்றி பெறும் சிந்தனையில் மூழ்குகிறான். தோல்வியடைபவன், தான் இழந் ததை எப்படியேனும் மீட்டுவிட வேண்டும் என்ற சிந்தனை யில் தன்னை மூழ்கடித்துக் கொண்டவனாகவே இருக்கிறான்.

சிந்தனையில் சூது சூழ்ந்து கொள்வதால், அவனுக்கு முறையான உழைப்பு பற்றியோ, ஹலாலான சம்பாத்தியம் பற்றியோ, தன் குடும்பத்தின் அன்றாட பிரச்னைகள் பற் றியோ, தனது சொந்த உடல்நிலை பற்றியோ கூட கவலை கள் ஏற்படுவதில்லை. இத்தகையவனுக்கு இறைவனைப் பற்றிய எண்ணமோ, தான் செய்ய வேண்டிய கடமைகள் பற் றிய உணர்வுகளோ, அண்ணலார் வழிகளைப் பற்றிய நினைவோ எங்ஙனம் ஏற்படும்?

சிந்தனையின் சீரிய வளர்ச்சியால் உயர்கின்றவனே மனி தன். அவன் எந்தத் தொழிலைச் செய்த போதினும் இடை யிடையில் அந்தத் தொழிலின் ஏற்ற-இறக்கங்களைப் பற்றிச் சிந்திக்கிறான். அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவை களைப் பற்றி ஆராய்ந்து, அவற்றைக் களைய வழிமுறை களைத் தேடுகிறான். குற்றங்குறைகளைக் கண்டு பிடித்து அவற்றை நீக்கி தொழிலை மேம்பாடடையச் செய்ய முயல் கிறான். பல புதிய வழிகளைக் கண்டு பிடிக்கின்றான். இத

னால் மனிதன் வாழ்வில் உயர்கின்ற வாய்ப்புகளைப் பெறுகின்றான்.

சூதாடுகிறவனுடைய சிந்தனையை முற்றிலும் அந்தச் சூதாட்டமே சூழ்ந்து கொள்வதால் அது அவன் அறிவைச் சூன்யமாக்கி விடுகிறது. மற்ற சிந்தனைகள் எதுவும் அவனுக்குச் செயல்படுவதில்லை. எதிரி ஒரு விநாடி அயர்ந்து விட்டால் அவனை எப்படி ஏமாற்றுவது, என்னென்ன சூழ்ச்சிகள் செய்வது, எவ்விதம் எதிரியின் எல்லா பணத்தையும், சொத்துக்களையும் சாமர்த்தியமாகக் கவர்வது என்பன போன்ற, சூது வழியான குறுக்குப் புத்தியிலேயே சிந்தனை கொண்டிருக்குமே தவிர, நேர்மையான சிந்தனைகள் ஒரு போதும் எழுவதில்லை.

சூதாடுகின்றவன் ஒரு பெரிய விஞ்ஞானியாக இருந்திருந்தானால் அவன் விஞ்ஞான அறிவு அதோடு தடைப்பட்டுப் போய் விடுகிறது. அவனால் சிந்தித்து எந்த புதுமையையும் விளைவிக்க இயலாது. அவன் ஒரு பொறியியல் நிபுணனாக இருந்திருந்தானானால் அவன் சூதாட்டத்துக்குள் நுழைந்தவுடன் அவனுடைய ஆற்றல்களெல்லாம் அதோடு முடிவடைந்துவிடும். அவன் டாக்டராக இருந்திருந்தானானால், அவனை நம்பிய வியாதிஸ்தர்களின் கதி அதோ கதிதான்! அவன் சூதாட்டத்தில் மூழ்கி இருக்கின்ற நேரத்தில், உயிர் போகும் ஆபத்து ஏற்பட்டால் கூட எழுந்துபோய் உதவமாட்டான். சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற ஒரு கவிஞனுக்கு, கவி புனையும் ஆற்றல் வற்றிப்போய்விடும். ஒரு வியாபாரி வர்த்தகத்தை வளர்க்கும் ஆர்வம் குன்றி அதை நஷ்டத்திலே கொண்டு போய் விடுவான் இவ்விதம் யார் யார் எந்தெந்தத் துறையிலே அறிவாற்றல் மிக்கவர் களாக இருக்கிறார்களோ அவர்கள் அறிவைச் சூனியமாக்கிக் கொள்ளவே செய்வர். இதுவே சூதாட்டத்தின் மிகப்பெரிய சக்தியாகும். இது வெறும் அபிப்பிராயமல்ல, உலகில் நாள் தோறும் நிரூபணமாகிக் கொண்டிருக்கும் உண்மையாகும்.

## 3. வஞ்சகமான நண்பன் - சூது!

உலகின் மற்ற தீமைகளெல்லாம் மனிதனின் உணர்ச்சி வசப்பட்ட நிலைகளிலும், பலவிதமான நிர்ப்பந்த சூழ்நிலைகளாலுமே விளைகின்றன. ஆனால் சூதாட்டம் என்பதோ நல்லதொரு நண்பனைப் போல மிக மென்மையாக அவனைக் கவர்ந்து, பிறகு வஞ்சக நண்பனாக மாறி, காலமெல்லாம் அவனைக் கெடுத்து அவன் முற்றிலும் நாசமானதற்குப் பிறகு அவனைக் கைவிட்டுவிட்டு ஓடி விடுகிறது. அது ஒரு மனிதனிடமுள்ள நல்லசெயல்களையெல்லாம் படிப்படியாக அழித்து அவனைப் பேராசைக்காரனாகவும், நயவஞ்சகனாகவும் மாற்றி விடுகிறது. பல சமயங்களில் மிகக் கொடுமையானவனாகவும் அவனைத் திசைத் திருப்பிவிடுகிறது.

ஒரு மனிதனை திடீரென்று வாழவைக்கவும், அழிக்கவும் உள்ள சக்தி சூதாட்டத்தைத் தவிர வேறொன்றுக்குமில்லை. அற்பமான ஒருவனைத் திடீரெனச் செல்வந்தனாக்கவும், மிக உயர்வான ஒருவனை திடீரென மிகக் கீழானவனாக ஆக்கவும் இந்தச் சூதாட்டம் ஒன்றினால் தான் முடிகிறது.

மனித வாழ்க்கையின் ரகசியமே நம்பிக்கை ஒன்றுதான். நம்பிக்கை ஒன்றின் அடிப்படையிலேயே அவனால் எல்லா கஷ்ட நஷ்டங்களையும் தாங்கிக் கொள்ள முடிகிறது. வாழ்க்கையெனும் படகை அவன் நம்பிக்கையென்னும் துடுப்பினால்தான் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

பெற்றோர்கள் தங்கள் மக்களை நம்புகிறார்கள். மாணவர்கள் தங்கள் கல்வி தங்களைக் காப்பாற்றும் என்று நம்புகிறார்கள். உழைப்பவன் ஒரு காலத்தில் கஷ்டப்பட்டாலும் ஒரு காலத்தில் உயர்ந்து விடலாம் என நம்புகிறான். இவ்விதம் மனிதனின் முயற்சிகள் அனைத்துக்கும் நம்பிக்கை மூலகாரணமாக இருந்து வருகிறது. இந்த நம்பிக்கையின்

அடிப்படையில் அவன் தொடர்ந்து செய்யும் 'ஹலாலான' முயற்சிகளே அவனை வாழ்க்கையில் உயர்த்துகிறது.

மனிதனுக்கு நியாயமான வழிகளில் இருக்க வேண்டிய நம்பிக்கையை சூதாட்டம் என்ற தீமை மிகவும் சாமர்த்திய மாகத் தன் வசப்படுத்திக் கொள்கிறது' சூதாட்டத்தின் மூலம் குறுக்கு வழியில் பொருளைச் சுலபமாக ஈட்டி, வாழ்க்கை யில் உயர்ந்து விடலாம் என நம்புகிறான். ஆரம்பத்தில் அவன் நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சிறுசிறு வெற்றிகளை அவனுக்குக் காட்டி, அவனுக்கு அது மேலும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகிறது. அதைத் தொடர்ந்து சிறுசிறு தோல்விகள் ஏற்படுகின்ற போதும் அவன் விழித்து எச்சரிக்கையடையாமல், வெற்றியே சாஸ்வதம் என்ற நம்பிக்கைக்கு முற்றிலும் ஆட்பட்டு விடுகிறான். அவன் ஒரேடியாக அழிந்து நிர்மூலமாகும் வரையில் இந்த நம்பிக்கையிலிருந்து அவனால் மீள முடிவதேயில்லை.

மதுவருந்துபவன் ஒரு அளவுக்கு மேல் குடித்தவுடன் மயங்கி விழுந்து விடுகிறான். அன்றைய பொழுதில் அவன் திருப்தியடைந்து விட முடிகிறது. விபச்சாரம் புரிபவனும் அவ் விதமே! அவன் இச்சைத் தீர்ந்தவுடன் களைத்து விடுகிறான். ஆனால் சூதாடுபவன் ஒரு போதும் திருப்தியடைவதில்லை. உலகத்தையே அவன் வென்று விட்டாலும். கடைசி 'சான்ஸ்' ஆக 'ஆகிரத்'தையும் (மறுஉலகையும்) வெற்றி பெற்றுவிடத் தான் நினைப்பான். முடிவற்ற ஆசையுடைய அவன், தானே, முடிந்து போகிறவரையில் ஓயமாட்டான்.

இதனால்தான், சூதாட்டத்தில் நன்மைகள் ஓரளவு இருந்தாலும், அதிலுள்ள தீமைகள் நன்மைகளை விடப் பெரியவை எனத் திருக்குர்ஆன் எச்சரிக்கை செய்து சூதாட் டத்தை விட்டு விலகி ஓடும்படி மனித சமுதாயத்துக்கு அறிவுரை கூறுகின்றது.

இந்தச் சூதாட்டங்களில் பலவகையுண்டு. ஒரு பொருளை (பகடைக்காய், சீட்டுக்கட்டு போன்றவைகளை) வைத்துக் கொண்டு விளையாடுவது மட்டும்தான் சூதாட்டம் என்பதல். உழைக்காத வண்ணமும், வர்த்தகம் செய்யாத முறையிலும், அதிர்ஷ்டம் பார்த்து குருட்டுத்தனமான வழிகளில் பொருள் வந்து சேர்வது அனைத்தும் சூதாட்ட வழியேயாகும்.



உதாரணமாகக் குதிரைப் பந்தயங்கள், லாட்டரி சீட்டு கள் பொதுவாக எது ஒன்றின் மீதும் பந்தயங்கள் கட்டுதல் முதலானவைகளும் சூதாட்டமேயாகும். இந்தச் சூதாட்டங்கள் எல்லாம் இன்று உலகில் சர்வசாதாரணமாகப் பரவி, ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்தச் சூதாட்டங்களில் ஈடுபடுவது தவறில்லை போலப் பலரை நம்பச் செய்து கொண்டிருக் கின்றன. உண்மையில் இவையனைத்தும் முதல்தரமான சூதாட்டங்களேயாகும்.

ஒவ்வொரு குதிரைப் பந்தயச் சூதாட்டத்திலும் லாபம் பெறுவோர் எண்ணிக்கை அதிகமா? அழிந்து போவோர் எண்ணிக்கை அதிகமா? எனப் பார்த்தால், அழிவோரே அதிகமுள்ளனர் என்பது மிகச் சாதாரணமானவர்களுக்கும் நன்கு தெரியும். பலரை அழித்துச் சிலரை அது வாழவைக் கிறது. சில்லரைச் சில்லரையாகப் பலர் பெருந்தொகைகளை இழக்கின்றனர். அதில் சூது நடத்துபவர்கள் கணிசமானத் தொகைகளை எடுத்துக் கொண்டு, மீதியைக் குவியலாகச் சிலருக்குக் கொடுக்கிறார்கள்; பல லட்சம் பேர்களைக்கெடுத்து விரல் விட்டெண்ணக் கூடிய சிலரை வாழவைக்கிறார்கள். இதில் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில், தன் கையில் இருந்ததையெல்லாம் கொண்டுவந்து சூதாடிவிட்டுத் தோற்றுப் போனவுடன் பைத்தியம் பிடித்தவர்கள் பல ஆயிரம் பேர் தற்கொலை செய்துகொண்டவர்கள் எண்ணற்றோர். தொழிலை நாசமாக்கிக்கொண்டவர்கள் பல லட்சம் நிர்மூல மாகப் போனவர்கள் பலகோடி. இந்த அழிவு நாகரீகமான முறையில் உலகெங்கும் நடந்துகொண்டே இருக்கிறது.

இது போன்றே லாட்டரி சீட்டு சூதாட்டமும்! பல லட்சம் பேருக்குப் பெருந்தொகைகளை ஆசைக்காட்டி, அவர்களிட

லிருந்து பல லட்ச ரூபாய்களைப் பெற்று, அதில் பெரும் தொகையை சூது நடத்துவோர் பிடித்துக்கொண்டு, ஒரு பகுதித் தொகையை ஒரு சிலருக்கு அளிக்கப்படுகிறது. இதில் நஷ்டப்படுவோர்களின் எண்ணிக்கை தான் கோடானு கோடியைத் தவிர, லாபமடைவோர் வெகு அற்பமானவர் களே! அந்தச் சில லாபமடைவோர்களைப் பார்த்துப் பார்த்து அழிவோர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

மேலும் சூதாட்டத்தினால் கிடைக்கும் திடீர் வருமானம். முறையாக உழைத்து வராத வருமானமாக இல்லாததால் செல்வத்தின் பெருமை தெரியாதவர்கள் கைகளுக்கெல்லாம் போய்ச் சேர்ந்தவுடன், அது செலவிடப்படும் வழிகளும் பெரும்பாலும் தீய வழிகளாகவே ஆகின்றன. அல்லது முறை யற்ற விதத்தில் அவை முடங்கிப் போகவும் நேரிடுகின்றன. இதனால் வளர்ச்சியடையாத நாடுகளில். பொருளாதாரச் சீர் கேடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சூதாட்டம், தனி மனித வாழ்வை நாசப்படுத்துவது போலவே, நாட்டையும் நாசப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. ஆதலால் இஸ்லாம் எந்தவொரு விதத்திலும் சூதாட்டத்துக்கு இடம் கொடுக்கவில்லை. அதை ஹராமாக ஆக்கியுள்ளது மன்னியில், கடுமையான தண்டனைகளையும் வழங்க ஆணையிட்டுள்ளது.

ஆதலால், முஸ்லிம்களைப் பொறுத்த வரையில், எல்லா விதமான சூதாட்டங்களிலிருந்தும் ஒதுக்கியிருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் உண்ணக்கூடிய ஒவ்வொரு வாய் உணவும் ஹலாலான உணவாக இருக்கவும். ஹராமான உணவு ஒரு சிறிதளவு உள்ளே செல்லாமல் பார்த்துக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஹராமான உணவு உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் கெடுத்துவிடும்; அவர் களுடைய சந்ததிகளையும் வழிகேட்டில் செலுத்திவிடும் எள் பது இஸ்லாத்தின் வழி முறையாகும்.

—★—

நான்காம் பாகம்

# திருட்டு

## 1. களவுபற்றி இறை மறை!

° ''ஆணோ, பெண்ணோ, எவர் திருடினாலும் இ(த்தீய)ச் செயலுக்குத் தண்டனையாக அவர் களின் கைகளைத் துண்டித்து விடுங்கள். (இது) அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட தண்டனை யாகும். அல்லாஹ் (யாவரையும்விட) மிகைத் தோனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான்.''

(அல்குர்ஆன் 5: 38)

களவு செய்வதை, இஸ்லாம் மார்க்கம் எத்தகைய பெருங் குற்றமாகக் கருதி, எவ்வளவு கடுமையான தண்டனையை அதற்கு நிர்ணயித்திருக்கிறது என்பதை மேற்கூறிய இறைவனின் நேரடியான திருவசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். திருட்டுக் குற்றத்தைத்தவிர வேறெதற்கும் ஒரு மனிதனை அங்கஹீனனாக ஆக்கிவிடுவதற்கு இஸ்லாமிய சட்ட ஆணைகள் எதுவும் இல்லை. இதன் மூலம் திருட்டை இஸ்லாம் எவ்வளவு கடுமையாக வெறுக்கிறது என்பதைப் புரிந்துக்கொள்கிறோம்.

திருட்டினுடைய கொடுமை, பொதுவாகத் தத்துவம் பேசிக்கொண்டிருப்பவனைவிட திருட்டுக் கொடுத்தவனுக்குத் தான் நன்கு தெரியும். திருட்டின் மூலம் தன்னுடையபொருளை திடீரென இழந்தவர்கள் அடையும் அதிர்ச்சியினால் சிந்தை கலங்கி சித்தப்பிரமைக்கும் பலியாகியிருக்கிறார்கள். திருட் டுக்குப் பலியானதால் திடீரென வறுமை வாய்ப்பட்டு வாழ் விழந்தோர் பலர்; தொழில் உடைந்து தொல்லைகளுக்காளா னோர் எண்ணற்றோர்; கொலைகளுக்கு ஆளானோருடைய கணக்குக்கும் குறைவு இல்லை.

மக்களில் யாரும் திருட்டை விரும்புவதில்லை. திருடன் கூட தன்னிடமிருந்து திருட்டுப் போவதைக் கண்டு துடிக்காமலிருக்கமாட்டான். எனினும் இவ்வுலகில் திருட்டுத் தொழிலுக்குத் தத்துவங்கள் பல பேசப்பட்டு, அதைச் செய்பவன் தப்பித்துக்கொள்ளவும் சிக்கினால் கூட மிகச் சாதாரண தண்டனைகளின் மூலம் அவன் விடப்படவும், மீண்டும் அவன் தைரியங்கொண்டு திருடும் வாய்ப்புப் பெறவும் சூழ்நிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன,

இதன் விளைவாகத் திருட்டு என்பது ஒரு தொழிலாகப் பெயர் பெற்று உலகெங்கினும் சர்வ சாதாரணமாக, நாள்தோறும் நடைபெறும் சுவையான நிகழ்ச்சிகளாக, நடந்து கொண்டே இருக்கிறது. சின்னஞ்சிறு திருட்டுகளிலிருந்து பெரிய பெரிய 'பாங்குகள் கொள்ளைவரை அன்றாடச் செய்திகளின் வரிசைகளில் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

குற்றவாளிகள் பிடிக்கப்படுகிறார்கள். ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறார்கள். சில வாரங்கள், மாதங்கள் அல்லது ஆண்டுகள் தண்டனை பெறுகிறார்கள்; திரும்பிவந்து முன்னிலும் துணிவாகத் திருடுகின்றனர். பலர் தப்பிக்கின்றனர். சிலர் மீண்டும் பிடிபடுகின்றனர். மறுபடியும் சிறை செல்கின்றனர்; திரும்பி வருகின்றனர். இப்படியாகவே திருடுவோர் உலகில் நிரந்தரமாகவே இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

பொதுவாகவே, நீதி மன்றங்களில் ஒரு தடவை திருடிய முதல் குற்றவாளியைவிட பல தடவைத் திருடிய குற்றவாளிகளின் பட்டியல்களே அதிகம் வந்து கொண்டிருக்கின்றன. திருடர்களில் ஒருவருக்கொருவர் பெருமை பேசிக்கொள்ளும்போது, எத்தனை தடவை அவர்கள் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்பது அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதாக அமைந்திருக்கிறது.



திருட்டு என்பது மிகப்பெரிய தீமை என்பதை உலகம் ஒப்புக்கொண்டும் அதை ஒரேயடியாக ஒழித்துக் கட்டுவதில் இந்த உலகம் ஏன் இவ்வளவு கோழைத்தனமாக இருக்கிறது என்பது புரியாத விஷயமாகும். இவ்விஷயத்தில் கடுமையானத் தண்டனையை மேற்கொள்ளாததற்குக் காரணம் அவன் திருந்தி வாழ வாய்ப்பிருப்பதாகச் சமாதானம் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அவனுக்குத் தண்டனை கடுமையாக இல்லாதவரை, திருந்தி வாழ வாய்ப்பும் குறைவாகவே உள்ளது என்பதுதான் பிரத்தியட்ச நிலையாகும். இப்போதைய உலகின் தண்டனைகள் மூலம் நூற்றில் ஒரிருவர்கூட திருந்தி வாழ்ந்ததாக ஆதாரங்கள் இல்லை. திருடர்களின் திறமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் அவர்களைப் பிடிக்க அரசாங்கங்களில் தந்திரங்களையும், சாதனைகளையும் பெருக்கி வருவதையே கண்கூடாகக் காண்கிறோம்.

சுருங்கச் சொல்லப் போனால் திருட்டு என்னும் தீயச் செயலைத் தடுத்து நிறுத்துவதில் இன்றைய உலகின் முறைகள் தோல்விகண்டே வருகின்றன, திருட்டு என்பது ஒரு காலத்தில் ஒழிந்து விடும் என்ற நம்பிக்கைக்குக்கூட சிறிதளவும் இடமில்லை. இதற்கு உறுதியளிக்கவும்கூட யாரும் தயாராக இல்லை.

இதன் காரணம் இந்த மாபெரிய தீமையைப்பற்றி மனிதர்களே சட்டங்கள் செய்து வைத்துக் கொண்டிருப்பதேயாகும். மனிதர்களின் சட்டங்கள் ஒரு போதும் வெற்றியடையாது என்பதனாலேயே, எல்லாம் வல்ல அல்லாஹ், இந்தத் தீமைக்கு எதிராக நேரடியாகச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியிருக்கிறான். இந்தச் சட்டத்தில் ஆண் என்றோ, பெண்ணென்றோ விதிவிலக்கு அளிக்கவில்லை. கொஞ்சமும் தாட்சண்யமின்றி 'திருடிய கைகளை வெட்ட' உத்திரவிடுகிறான்.

இந்தத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு யாரையும் அவன் பொறுப்பேற்றுக் கொள்ளச் சொல்லவில்லை. ''அல்

லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட தண்டனையாகும்'' எனத் தெளிவாகக்கூறி, அதற்கான பொறுப்பையும் தானே ஏற்றுக் கொள்கிறான். இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவோர் யார் மீதும் மற்றவர்கள் குற்றம் சாட்டாமலிருக்க, தானே அதற் குரிய விமர்சனத்தை ஏற்றுக் கொள்கிறான்.

யார் இந்தத் தண்டனையைப்பற்றி எவ்விதம் விமர்சித்துக் கொண்டாலும், அவர்களைவிட, நான் அறிந்தவனாக இருக் கிறேன் என்று உணர்த்தும் விதத்தில், இந்தத் தண்டனை பற்றிய வசனத்தின் கீழே, ''அல்லாஹ் (யாவரையும் விட) மிகைத்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான்'' என்பதையும் நினைவூட்டி வைககிறான்.

## 2. மாநபி காட்டிய மறைவழி!

★ ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள், மூன்று வெள்ளிக் காசுகளே விலையுள்ள கேடயத்தைத் திருடியதற்காக, திருடிய வனின் கையை வெட்டச் செய்தனர்.''

(அறிவிப்பவர்; இப்னுஉமர் (ரலி)

ஆதாரம்; புகாரி,முஸலிம், முஅத்தா)

★ மக்ஜூமிய்யா குழுவைச் சேர்ந்த திருடிவிட்ட ஒரு பெண் பற்றி குரைஷிகளுக்குப் பெரும் கவலை ஏற்பட்டிருந் தது. (அவளுடைய கை வெட்டப்படும் என்பதனால்.)எனவே இப்பெண் பற்றி எவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரைப்பது என்பது பற்றி அவர்கள் (தங்களுக்குள்) பேசிக் கொண்டனர். அப்பொழுது சிலர், ''உஸாமா இப்னு ஜைது (ரலி) அவர்களைத் தவிர வேறு எவருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் யாதும் கூறத் துணிவிருக்கிறது? இவர் தாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பர் என்று கூறி னர். எனவே உஸாமா (ரலி) அவர்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் அப்பெண் பற்றிப் பரிந்துரைத்தனர். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், நீர் அல்லாஹ்வின் கட்டளை பற்றியதிலா (அப்பெண்ணுக்காக) பரிந்துரைக்கின்றீர்?' என்று



கூறி எழுந்து நின்று குத்பா பேருரை நிகழ்த்தத் துவங்கி விட்டனர். பின்னர் அவர்கள் (அப்பேருரையில்) நிச்சயமாக உங்களுக்கு முன்னுள்ளவர்கள் அழிந்ததெல்லாம், நிச்சயமாக அவர்களில் சிறப்புக்குரியவர் திருடி விட்டால் அவரை (தண் டனைக்குட்படுத்தாமல்) விட்டு வந்ததனாலும் அவர்களில் ஏழை திருடி விட்டால் அவருக்குத் தண்டனை அளித்து வந்ததனாலுமேயாம். அல்லாஹ்வின் மீது ஆணையாக, நிச்சயமாக ஃபாத்திமா பின்து முஹம்மது (ஸல்) அவர்கள் திருடி விட்டாலும் நிச்சயமாக நான் அவரின் கையை வெட்டி விடுவேன்' என்று கூறினர்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

ஆதாரம்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ

★ அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு திருடர் கொண்டு வரப்பட்டார். அவர் தாம் திருடியதை ஒப்புக் கொண்டு விட்டார். எனினும் அவர் திருடிய பொருள்கள் அவரிடம் காணப்பெறவில்லை. எனவே அவர்கள் அவரை நோக்கி, 'நீர் திருடியிருப்பீர் என்று நான் நம்பவில்லை' கூறினார்கள். அதற்கு அவர், 'ஆம்;(நான் திருடினேன்)என்று என்று கூறினார். எனினும் அவர்கள் இருதடவையோ அல் லது மூன்று தடவையோ அதனையே அவரிடம் கூறினர். ஒவ்வொரு தடவையும் அவர் தாம் திருடியதை வலியுறுத் திக் கூறியே வந்தார். எனவே அண்ணல் நபி (ஸல்) அவர் கள் அவருடைய கையை வெட்டுமாறு கட்டளையிட்டார்கள். எனவே (அவருடைய கை) வெட்டப்பட்டது. பின்னர் அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். அப்பொழுது அவர்கள் நீர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரும்; அன்றி அவன் பால் 'தவ்பா' செய்யும் என்று கூறி னர். அதற்கு அவர் தாம் அவன்பால் பாவமன்னிப்புக் கோரு வதாகவும் 'தவ்பா' செய்வதாகவும் கூறினார். எனவே அண் ணல் நபி (ஸல்) அவர்களும் 'இறைவனே! இவருடைய

தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக என்று மூன்று முறை இறைஞ்சினர்''.

அறிவிப்பவர்: உமையதுல் மக்ஜூமிய்யி (ரலி)
ஆதாரம்; அபூதாவூத், நஸயி

இவ்விதம் திருடியவர்கள் பலர் பெருமானார் (ஸல்) அவர்களாலேயே தண்டிக்கப்பட்டனர். உதாரணத்திற்காகவே ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் மேலே தரப்பட்டுள்ளன.

இந்தக் கடுமையான தண்டனையின் விளைவு யாதெனில், அண்ணலார் (ஸல்) அவர்கள் காலத்திலேயே அரபுநாட்டில் திருட்டுகள் மிக வேகமாகக் குறைந்து விட்டன. நாள்தோறும் திருட்டுகள் மலிந்திருந்த அந்நாட்டில் வாரத்தில் சில திருட்டு களாக மாறி, பிறகு மாதத்தில் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளாகி, காலக்கிரமத்தில் ஒரு ஆண்டில் ஓரிரு திருட்டுகள்கூட நடை பெறாத நாடாக அது மாறிவிட்டது.

கை இழந்தவர்கள் சமுதாயத்தில் மிகவும் கேவலமாகக் கருதப்பட்டார்களாதலால், அவர்கள் மக்கள் முன் மீண்டும் நடமாடமுடியாதவர்களாகி நாட்டை விட்டே ஓடத்தொடங்கி னர். திருந்திய பலர், தாங்கள் செய்துவிட்ட தவறை பகிரங்க மாகக்கூறி, தவ்பாச் செய்து மீண்டுவிட்டதை வெளிப்படுத்தி யோக்கியமாக வாழ்ந்தனர்.

மாநபி காட்டிய இந்த மறைவழி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திற்குப் பின்னும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டது. நான்கு கலீபாக்களின் ஆட்சிகளிலும் அவர்களைத் தொடர்ந்து அப்பாஸியாக்களின் ஆட்சியின் போதும், இந்தியாவில் ஆரம்ப முஸ்லிம் மன்னர்கள் பலருடைய ஆட்சி களின் போதும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இன்றும்கூட சவூதி அரேபியா போன்ற பல அரபு நாடுகளில் இச்சட்டம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கு இச்சட் டம் அமுலில் உள்ளதோ அங்கெல்லாம் திருட்டுகள் நடப்ப தில்லை என்ற உண்மை உலகில் நிரூபிக்கப்பட்டு வருகிறது.



ஒவ்வொரு ஆண்டிலும் உலகின் பல பாகங்களைச்சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் புனித ஹஜ்ஜை நிறைவேற்ற சவூதி அரேபியாவுக்குச் செல்கின்றனர். தாங்கள் சில மாதங்கள் தங்குவதற்கு வசதியாக ஏராளமான பணத்தையும் பொருள் களையும் எடுத்துச் செல்கின்றனர், பல சமயங்களில் அவர் களில் பலர் தங்கள் அஜாக்கிரதையின் காரணமாகத் தங்களு டைய பணங்களையோ அல்லது விலையுயர்ந்த பொருள் களையோ தாங்களாகவே தவற விட்டுவிடுவதுண்டு. எனினும் அவற்றைக்கூட யாரும் எடுத்துத் தங்கள் உடைமையாக்கிக் கொள்வதில்லை, போலீஸ் நிலையத்தில் ஒப்புவித்து உரியவர் களிடம் சேர்த்துவிட உதவிகள் செய்வோராகவே இருக் கின்றனர்.

# 3. சட்டத்தின் விளக்கங்கள்

இஸ்லாம் மார்க்கம் திருட்டை ஒரு பெரும்பாபச் செயல் லாகக் கருதுகிறது, திருடுகிறவன் இறைவன் சன்னிதானத்தி லும் குற்றவாளியாகிறான். உலகத்தின் கண்களை அவன் ஏமாற்றி விட்டாலும் இறைவனின் தண்டனையிலிருந்து அவன் தப்ப முடியாது என எச்சரிக்கை செய்கிறது.

சமுதாய அடிப்படையில் கூறும்போது, திருடுகிற ஒருவன் ஒரு அநீதிக்காரன் என இஸ்லாம் கருத்துக்கொண்டிருக்கிறது. பிறருடைய பொருளைக் களவு செய்வதன் மூலம் நிரபராதி யான ஒருவரை அல்லது பலரை திடீரென நஷ்டத்திலும், கவலையிலும் ஆழ்த்துகிறான்; சமுதாயத்தில் நிம்மதியான வாழ்வைச் சீர்குலைக்கிறான். திருடுகிறவன் ஒரு முறை வெற்றி கண்டு விட்டாலும், தொடர்ந்து அத்தீச்செயலில் ஈடுபடும் ஆர்வத்துக்கு உள்ளாகிறான். தண்டனை எளிதாக இருந்தால் அவன் தொடர்ந்து திருடுவதில் ஆர்வமுடையவ னாக இருக்கிறான் என்பதே திருட்டைப்பற்றி இஸ்லாமிய கண்ணோட்டமாகும். ஆதலால் அதற்குரிய தண்டனையைக் கடுமையாக வைத்துள்ளது.

பருவ வயதை எட்டிய (பாலிஃ ஆன) ஆண், பெண்களில் (பைத்தியமின்றி) அறிவு தெளிவாக உடைய ஒரு நபர் செய்யும் திருட்டுக்கே கையை வெட்டவேண்டும் என்பது சட்டத்தின் அடிப்படையாகும், அதோடு திருடப்படும் பொருள் எந்த அளவு இருக்கவேண்டும். அதன் நோக்கம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதிலெல்லாம் தெளிவான உப பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மார்க்கச் சட்ட ஞான விளக்கங்களைத் தந்த இமாம்கள், திருடினால் கைகளை வெட்ட வேண்டும் என்ற அல்லாஹ்வின் பொதுவான கட்டளையை ஏற்றுக்கொண்டு, அருமை நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளை ஆராய்ந்து பற்பல விளக்கங்களைத் தந்துள்ளனர்.

ஒரு பொற்காசு (ஒரு தீனார்) அல்லது பத்து திர்ஹம் (வெள்ளிக் காசுகள்) பணத்தையோ அல்லது அந்த அளவு விலை மதிப்புடைய ஒரு பொருளையோ திருடினால்தான் கை வெட்டப்பட வேண்டுமென இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களும் அவர்களைச் சார்ந்த 'ஹனபி மத்ஹ' பைச் சார்ந்த இமாம்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களும் அவர்கள் வழிவந்த சட்டமேதைகளும் இந்த அளவுக்குச் சலுகை கொடுக்க முன் வரவில்லை. கால் பொற்காசை (கால் தீனாரை) அல்லது அதன் மதிப்புடைய பொருளைத் திருடினாலும் கையைவெட்டி விட வேண்டுமென்றும், மாலிக் இமாம் (ரஹ்) ஹம்பல் இமாம் (ரஹ்) ஆகியோர், முந்திய இமாம்களைவிடக் கடுமையாக, மூன்று திர்ஹம் நாணயமோ அதற்கு ஈடான பொருளோ திருடப்பட்டால் கையை வெட்டி விடலாம் என்றும் கூறியுள்ளனர்.

திருட்டு கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் அல்லது அதிகாரிகளிடம் வழக்கு செல்வதற்கு முன் குற்றவாளி தன் தவறை



உணர்ந்து உரியவர்களிடம் திருட்டுப் பொருள்களைக் கொடுத்துவிட்டால், அந்த நபர் கைவெட்டப்படும் குற்றத்துக்கு அப்பாற்பட்டவராகி விடுகிறார். ஆனால் வழக்குப் பதிவானதற்குப் பிறகு, திருடப்பட்ட பொருள் கைப்பற்றப் பட்டாலும் அல்லது திருடியவரே கொண்டுவந்து கொடுத்து விட்டாலும் அவர் கைவெட்டப்படும் தண்டனைக்கு உரியவரே ஆவார்.

[எந்தெந்தத் திருட்டுக் குற்றங்களுக்கு கை வெட்டக் கூடாது என்பதற்கான விபரங்களைக் கூறுவதானால் புத்தகம் விரிவடையுமென அஞ்சி அது சம்பந்தமான விளக்கங்களை சட்ட விளக்க நூற்களிலிருந்து அறிந்துகொள்ள சிபாரிசு செய்கிறோம். எனினும் இது சம்பந்தமான சில தகவல்களை வாசக நேயர்கள் பொதுப்படையாகத் தெரிந்துகொள்ள, சில ஹதீஸ்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.]

★ ''மரத்தில் தொங்கும் கனி (வகை) களைப்பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்களிடத்தில் வினவப்பட்டதற்கு அவர்கள் 'எவர் பசியின் காரணமாக அவற்றைப்பறித்து, படியில் வைத்துக் கட்டிக்கொண்டு செல்லாது; உண்டு விடுகிறரோ அவர் மீது (திருட்டுக்) குற்றமில்லை என்று கூறினர்.

அறிவிப்பவர்: அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி)
ஆதாரம்; சுனன்

இது திர்மிதியிலுள்ள வாசகமாகும். அன்றி அவர் அப் பழங்களிலிருந்து எதனையும் எடுத்துச் செல்வாரானால், அவரியமிருந்து அதனளவு நஷ்டஈடு பெறுவதும், (தக்க) தண்டனையும் உண்டு. (கையை வெட்டுவதல்ல) மேலும் அது பறித்துக் காயவைக்கப்பட்ட பழமாக இருந்தால் அதிலிருந்து எதனையும் திருடுவராயின் அதன் மதிப்பு ஒரு கேடயத்துக்குச் சமமாக இருப்பின் அவருடைய கையை வெட்டுவது கடமையாகும். ஆனால் அந்த அளவுக்குச் குறைவாக இருப்பின், அவரிடமிருந்து நஷ்டஈடு பெறுவதும் அவருக்குத் தக்க தண்டனை (கையை வெட்டுவதல்ல) உண்டு

என அபூதாவூதிலும், நஸயீயிலும் அதிகமாக விளக்கப் பட்டுள்ளது.

ஒரு ஆடு மந்தையை விட்டும் தவறி தன்னுடைய இருப்பிடத்தை அடையுமுன் இரவாகிவிடின் அந்த ஆட்டைத் திருடியவரின் கைவெட்டப்பட மாட்டாது. ஆனால் அது தன்னுடைய இருப்பிடத்தை அடைந்தபின் அதனை ஒருவன் திருடின் அவனுடைய கைவெட்டப்படும் என நஸயீயில் கூறப்பட்டுள்ளது,

ஃ ''திருடனுக்குத் திருடியதற்குரிய தண்டனையை அளித்தபின் திருடிய பொருளுக்குரிய இழப்புத் தொகையை அவன் அளிப்பது அவன்மீது கடமையல்ல'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி)
ஆதாரம்: நஸயீ

ஃ ''திருடு போன பொருளைத் திருடியவர் என்று சந்தேகமில்லாதவரிடம் கண்டால் அப்பொருளுக்குரியவர் நாடினால் அதனை அவர் விலை கொடுத்து வாங்கிய கிரயத் தைக் கொடுத்து அவரிடம் வாங்கிக் கொள்ளவும். அன்றி, அவர் விரும்பின் அதனைத் திருடியவனை (அவர் மூலம்) பின்தொடரவும் (துப்பறியவும்) என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினர்: இவ்விதமாகவே அபூபக்கர்(ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் தீர்ப்புகள் வழங்கினர்,

அறிவிப்பாளர்; உஸைதுப்னு ஹு"ளைர் (ரலி)
ஆதாரம்: நஸாயீ

இவைபோன்ற பல ஹதீஸ்களின் மூலமும், இமாம்களின் தீர்க்கமாக ஆராய்ந்த சட்ட விளக்கங்களின் மூலமும், திருட்டைத் தவிர்க்க இஸ்லாம் மார்க்கம் மிக நுணுக்கமாகச் சட்டங்களை வகுத்துள்ளது. திருடியவனின் கைகளை வெட் டிப் பழிதீர்த்துக்கொள்வது இஸ்லாமிய சட்டங்களின் மூல நோக்கமல்ல. திருடுகி ்ற மனோ நிலையையும், துணிவை யும் ஒழிப்பதே அதன் லட்சியமாகும்.



# 4. தண்டனையும் கடுமையும்

திருட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப் பட்டால், இந்தத் திருட்டுச் செயல் அவனுக்கு முதல் தடவை யாக இருந்தால், அவனின் வலது கை மணிக்கட்டுவரை வெட்டிவிடவேண்டும். இரண்டாவது தடவையும் திருடினால் அவனுடைய இடது காலின் கணுவரைத் துண்டித்துவிட வேண்டும் என்பதுதான் பொதுவான மரபு.

மூன்றாவது நான்காவது முறையும் திருடினால் அவனை என்ன செய்யவேண்டும் என்பதில் 'மத்ஹப்' இமாம்களி டையே கருத்துவேறுபாடுகள் உள்ளன. மூன்றாவது முறை திருடினால், அவனது இடது கரத்தை மணிக்கட்டுவரையும், நான்காம் முறை திருடினால் வலது காலின் கணுவரையும் துண்டித்தே ஆகவேண்டும் என்று இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களும், அவர்களைப் பன்பற்றிய நீதவான்களும், மூன்றா வது நான்காவது திருட்டுக்களுக்கு எதையும் துண்டிக்காமல், அவன் தவ்பாச் செய்து மீளும்வரை (தன் குற்றத்துக்காக வருந்தி திருந்தும் வரை) அவனை மனிதர்களை விட்டுப் பிரித்துவைக்க (சிறையிலடைக்க) வேண்டுமென்றும் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களும் மற்றும் ஹனபி மத்ஹபின் நீதவான்களும் கூறியுள்ளனர்.

கை வெட்டப்படுவது என்பது சட்டமாகிய பிறகு, அவ் விதம் கையையோ அல்லது காலையோ வெட்டினால் அத னால் உயிருக்கு ஆபத்து நேராவண்ணம், வைத்திய முறை ஏற்பாடுகளும் வழக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. கூரிய ஆயுதத்தைக் கொண்டு ஒரே முறையில் கை நறுக்கப்படு கிறது. பக்கத்திலேயே தயாராக வைத்திருக்கும் ஒருவித எண்ணைக் குழம்பில் வெட்டுவாய் உடனடியாக நனைக்கப் படுவதன் மூலம். ரத்தம் பீறிட்டு வெளிவருவது கூட நின்று விடுகிறது. அதைத் தொடர்ந்து தடவப்படும் மருந்தின் மூலம் இரண்டொரு தினங்களிலேயே சுகம் ஏற்பட்டுகிறது.

திருடியவர்களுக்குக் கைகளை வெட்டுவதன் நோக்கம் அவர்களைச் சித்திரவதைச் செய்யவேண்டும் என்பதல்ல. அதற்கு மாறாக அவன், அல்லது அவள், மீண்டும் அத் தொழிலைச் செய்ய அஞ்சவேண்டுமென்பதும், அவர்களைப் பார்க்கும் மற்றவர்களும் பயத்தால் திருட்டை நினைக்கக் கூடாது என்பதுமேயாகும். இதனால்தான் இத்தண்டனையை ரகசியமாக நிறைவேற்றக்கூடாது என்றும் மக்கள் எதிரில் பகிரங்கமாக நிறைவேற்ற வேண்டும் என்றும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இப்போது இத்தண்டனை நிறைவேற்றப்படுவதை 'டெலிவிஷன்' மூலம் எல்லோரையும் பார்க்கச் செய்கிறார்கள்.

பொதுவாகப் பார்க்குமிடத்து, திருட்டுக்காக கைகளையும், கால்களையும் வெட்டுவது என்பது கொடுமையான தண்டனையேயாகும் என்று உலகத்தில் பெரும்பாலான நாடுகள் இன்னும் விவாதித்துக் கொண்டே இருக்கின்றன. இவ் விஷயத்தில் இஸ்லாமிய சட்டம் மனிதத் தன்மையற்ற காட்டு மிராண்டித்தனமான முறையைக் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டுகின்றன.

ஆனால் ஒரு உண்மையை அவர்கள் மறுக்கவில்லை. அதாவது உலகில் திருட்டே இல்லாத, அப்படியே!இருந்தாலும் ஒரு ஆண்டில் ஒன்றிரண்டு திருட்டுச் சம்பவங்களோடு நின்று விடுகின்ற நாடுகள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள், இதற்கு மாறாக மனிதர்கள் சட்டங்களை வகுத்து வைத்துக்கொண்டுள்ள நாடுகளில், திருட்டு என்பது ஒரு பெரிய கலையாக வளர்க்கப்பட்டு, நாளுக்கு நாள் அக் கலை நவீன முறைகளில் வளர்ந்து வருவதைக் கண்டு வேதனைப்படாமல் அவர்களால் இருக்க முடியவில்லை.

உலகில் இந்த 'இஸ்லாமிய சட்டம் அமுல்படுத்தாத நாடுகளில், திருட்டுக்கு எதிராக, அதாவது அதைக்கண்டு பிடிக்கவும், மற்றும் அதைத் தடுக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், மக்களின் வரிப்பணம் கோடானுகோடி செலவிடப்படுகிறது. திருட்டுக்கொடுத்து தனி'மனிதர்கள் நஷ்டப்படுவது ஒரு புறமிருக்க, இந்த ஒரு பிரச்னைக்காக அரசாங்கப் பணமே ஏராளமாகச் செலவிடப்பட்டுக்கொண்டே இருக்கிறது.



ஐந்து ரூபாய் மதிப்புள்ள ஒரு பித்தளைச் சொம்பை ஒரு கிராமத்தில் திருடிவிட்ட ஒரு குற்றவாளியைக் கைது செய்து. அவனை நகரத்திலுள்ள ஒரு போலீஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்று, பல தினங்கள் சிறையில் அடைத்து வைத்து, குற்றத்தை நிரூபிக்கப் பல தடவைகள் அவனை கிராமத்துக்குக் கொண்டுவந்து, ஆதாரங்களைத் திரட்டி, அவனை நீதிமன்றம் உள்ள பெரிய நகரத்துச்குப் பலமுறை கொண்டுசென்று அவனுக்கு ஆறு மாதங்கள் தண்டனை வாங்கிக் கொடுத்து, அவனைச் சிறையில் வைத்துச் சோறு போட்டு வெளியே அனுப்ப சுமார் 4400 ரூபாய் அரசாங்கத்துக்குச் செலவானதாக ஒரு புள்ளி விபரம் கூறுகிறது.

மொத்தத்தில் ஒரு நாட்டில் திருடர்கள் திருடும் பொருள் மதிப்பைவிட, அவர்களைப் பிடிக்கவும், கண்காணிக்கவும், நீதி வழங்கவும், சிறையில் அடைக்கவும், சாப்பாடு போடவும் ஆகும் செலவுகள் 100 மடங்குக்கு மேல் அதிகமாகிறது என்பது உலகம் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

இவ்விதம் ஒன்றுக்கு நூறாகச் செலவிட்டும் உலகில் இஸ்லாமியச் சட்டம் அமுல் நடத்தாத நாடுகளில், திருட்டுப் பயம்' என்பது ஒழிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, நாளுக்கு நாள் நாள் அந்தப்பயம் வளர்ந்துகொண்டே இருக்கக் காண்கிறோம். பணக்காரர்கள் மட்டுமல்ல. நடுத்தர குடும்பத்தினரும் ஏழைகளும்கூட இந்தப் பயத்துக்கு விதிவிலக்காக இல்லை.

இதற்கு நேர்மாறாக சவூதி அரேபியா போன்ற நாடுகளில், 'திருட்டுப்பயம்' என்ற சர்வதேச வியாதியிலிருந்து மக்கள் விடுதலை பெற்றவர்களாக இருக்கிறார்கள். கடை திறந்து வைத்திருக்கும் வியாபாரிகள், 'பாங்கு' சப்தம் கேட்டவுடன், அப்படியே கடைகளைத் திறந்து வைத்து விட்டுப் பள்ளிவாசல்களுக்குப் போய்த் தொழுது விட்டுத் திரும்புகிறார்

கள். அவர்கள் கடைகளில் திருட்டுப் போனதாக இதுவரை முறையிட்டுக்கொண்டதில்லை. போலீஸ் இலாக்காவின் வேலைகளில், திருட்டு சம்பந்தமான வேலைகளே மிகவும் குறைவாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கைதவறி கீழே போட்டுவிடப்பட்ட சாமான்கள்கூட திருட்டுப் போவதில்லை என்ற நிலை நிலவுகிறது.

மேலும் சட்டம் இவ்வளவு கடுமையாக இருந்தும், அதனால் பாதிக்க பட்டவர்களின் கணக்கைப் பார்க்கும்போதும், உலகிலுள்ள மற்ற நாடுகளில் உள்ள எண்ணிக்கையைவிட 100க்கு கால் சதவிகிதத்துக்கு குறைவுதான் என்று அறிய முடிகிறது. அதாவது ஐந்து லட்சம் மக்கள் உள்ள ஒரு நகரில் ஒரு மாதத்தில் ஆயிரம் திருட்டுச் குற்றங்கள் நடைபெறுகின்றன என்றால் இஸ்லாமிய சட்டம் அமுல்படுத்தப்படும் நாட்டில் இரண்டு குற்றங்களே நிகழ்கின்றன என்று கணக்கிட்டுக் கூறியுள்ளார்கள்.

எனினும் தண்டனையின் கடுமையைப்பற்றி விமர்சித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்; ஆனால் அந்த அளவுக்குக் குக் குற்றத்தின் கொடுமைபற்றி அவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள்.

திருடுகிறவன் திருடும் நோக்கத்துடன் தான் செல்கின்றான். எனினும் கொலை செய்யவும் தயாராகவே அவன் செல்கிறான் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. நான் பிடிபட்டுவிடுவோம் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டால், அவன் எதிர்ப்பட்டவர்களைக் கொலை செய்யவும் தயங்குவதில்லை; அல்லது படுகாயப்படுத்தவும் அஞ்சுவதில்லை. அவன் அபாயகரமான நபராகி விடுகிறான். அதனால்தான் திருடனைக் கண்டு உலகம் அஞ்சுவதுபோல தண்டனையைக் கண்டு அஞ்சி நடுங்கவேண்டும் என்று அல்லாஹு தஆலா, தானாகவே இத்தண்டனையை பிரகடனப்படுத்தியிருக்கிறான். ஆண்டவனுடைய இத்தண்டனை அமுலுக்கு வரும்வரை உலகில் திருட்டையும், திருட்டு பயத்தையும் ஒழிக்க முடியாது என்பது நிச்சயம்.

# தீமைகளை வெல்லுவோம்!

மதுவருந்துதல், விபச்சாரம் செய்தல், சூதாடுதல், திருடுதல் போன்ற உலகப் பெருந் தீச் செயல்கள் ஒருபக்கமிருக்க மனித வாழ்வுக்கு அஸ்திவாரமாக இருக்க வேண்டிய நன்னம்பிக்கையை (ஈமானை)ச் சீர்குலைத்துத் தவறான வழிகளில் இழுத்துச் செல்லக்கூடிய, பல மூடநம்பிக்கைகளும். செயல்களும், பற்பல தீமைகளுக்குக் காரணமாக இருக்கின்றன.

இந்த மூடநம்பிக்கைகள், நாட்டுக்கு நாடு வேறுபட்டுள்ளன.

## 1. வியாதிக்கு தெய்வங்கள்

★ 1400 ஆண்டுகளுக்கு முன்பு அரபியர்களிடம் அவ்விதம் சில மூடப்பழக்க வழக்கங்கள் குடிகொண்டிருந்தன. 360 விக்ரகங்களைத் தங்கள் தெய்வங்களாக வைத்து வணங்கிக்கொண்டிருந்த அம்மக்கள், தங்களுடைய ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்க்க ஒவ்வொரு தெய்வத்தால்தான் முடியும் என்ற நம்பிக்கையில், அவைகளைக் கொண்டாடிக்கொண்டிருந்தனர்.

உதாரணமாக, சில தெய்வங்களைத் தொத்து நோய்களுக்கு அதிபதிகள் எனவும், சில தெய்வங்கள் பொதுவான நோய்களுக்குப் பாதுகாவலர்கள் எனவும், மற்றும் சில அதிர்ஷ்டங்களை அளிக்கின்ற சக்தி வாய்ந்தவை எனவும், இன்னும் சில பேய்களை அடக்கியாளும் வல்லமை பெற்றவை என்றும், மேலும் சில குழந்தைகளை அளிக்க ஆற்றல் பெற்றவை எனவும் கருத்துக்கொண்டிருந்தனர். இதன் காரணமாக இந்த தெய்வங்களைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருப்பது தங்கள் கடமை என நம்பினர். அவ்விதம் சந்தோஷப்படுத்தாவிடின் அவை கோபம்கொண்டு விடுமெனவும் அத

னால் பல தொல்லைகளைத் தங்களுக்கு அளிக்குமெனவும் அஞ்சினர்.

## 2. சகுனங்கள் பார்த்தல்

★ இது போல, ஒட்டகங்கள் கொட்டாவி விட்டால், சில பறவைகள் இரவில் கூச்சலிட்டால், சில பறவைகள் தங்கள் பேரீச்சத் தோப்புகள் அல்லது திராட்சைத் தோட்டங்களில் வந்து உட்கார்ந்து குரலொலித்தால். மனிதர்கள் சில பேச்சுக்களின் மத்தியிலே தும்மினால், பல்லிகள் கத்தினால் ஒரு நல்ல காரியத்துக்குப் போகும்போது அடிமைப்பெண்கள் குறுக்கே போய்விட்டால், வர்த்தகத்துக்குச் செல்லும்போது குழந்தைகள் அழும் சப்தம்கேட்டுவிட்டால், அவைகளெல்லாம் தீமைகளின் அறிகுறி என நம்பினர். இவைபோல இன்னும் பல விதமான நம்பிக்கைகளை அவர்கள் கொண்டிருந்தனர்.

## 3. நல்ல நாள் கெட்ட நாள்!

ஃ இது போன்றே, ஒவ்வொரு நாளிலும் நல்லநேரம் கெட்டநேரம் என்றும், ஒவ்வொரு மாதத்திலும் நல்ல நாட்கள் கெட்ட நாட்கள் என்றும், ஒவ்வொரு வருடத்திலும் நல்ல மாதம் கெட்ட மாதம் என்றும் அவர்கள் பிரித்து வைத்து, 'நஹ்ஸ்' கணக்குகள் பார்த்தனர். குறிப்பிட்ட கெட்டநேரம் கெட்ட நாள், கெட்ட மாதங்களில் பல நல்ல காரியங்களைச் செய்யக்கூடாது என்று வகுத்து வைத்திருந்தனர். அவர்கள் வகுத்து வைத்திருந்த கெட்ட நேரங்களில் பிறக்கும் குழந்தைகள் குடும்பத்தின் மானத்துக்கு ஆபத்து ஏற்படுமென்றும் நம்பினர். இதன் காரணமாக தாங்கள் பெற்ற குழந்தைகளை உயிருடன் புதைக்கக்கூட அவர்கள் தயங்கவில்லை. கொள்வினை, கொடுப்பினைகள்கூட நாள் நேரம் நட்சத்திரம் பார்த்தே செய்தனர்.



## 4. ஜாதகம், குறி, நம்பிக்கை

ஃ இவ்விதமெல்லாம் ஜாதகம் பார்த்துச் சொல்லவும், குறிகள் கூறவும், எதிர்கால வாழ்வைக் கணித்துச் சொல்லவும் ஒரு கூட்டமே பிழைப்பு நடத்திக்கொண்டிருந்தது. வான மண்டலத்திலுள்ள நட்சத்திரங்களின் அசைவுகளையெல்லாம் தனி மனித வாழ்வோடு சம்பந்தப்படுத்தி, கதை கதையாகக் கூறி வந்தனர். இவற்றையெல்லாம் வாழ்க்கையோடு இணைத்துக்கொண்டு, மக்கள் மனத்தெளிவின்றி வாழ்ந்து வந்தனர்.

## 5. ஈமானின் பேரொளி

அண்ணலெம்பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹு சுப்ஹானஹு தஆலா 'நுபுவ்வத்' என்னும் தன் பேரொளியை வழங்கி, அவர்கள் மூலமாக 'ஈமான்' என்னும் பெருவிளக்கை மக்கள் உள்ளங்களில் ஏற்றி வைக்கச் செய்தபின், அவ்வராபிய மக்கள் ஒவ்வொரு மடமையினின்றும் விடுபட்டனர்.

ஃ வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், அவை ஒன்றுக்கொன்று (முரண்பட்டு) (அனைத்தும்) அழிந்தே போயிருக்கும். அர்ஷின் அதிபதியாகிய அல்லாஹ் அவர்கள் வர்ணிக்கும் (இத்தகைய) தன்மைகளிலிருந்தும் மிகப் பரிசுத்தமானவன்''

அல்குர்ஆன்; 21: 22

ஃ ''அவன் செய்பவைகளைப்பற்றி (ஏன் செய்தாய்; எதற்காகச் செய்தாய் என்று, எவருமே அவனைக் கேட்க முடியாது, (அவ்வளவு சர்வ சுதந்திரமும் வல்லமையும் உடையவன்) எனினும், அவனோ, யாவரையும் (அவர்களுடைய செயல்களைப்பற்றிக்) கேட்கக் கூடியவன்.''

அல்குர்ஆன்: 21; 23

இவைபோன்ற பல திருவசனங்கள் அவர்களின் அறிவுக் கண்களைத் திறந்தன. அல்லாஹ்வின் மீது அவர்கள் 'தவக்கல்' (பூரண நம்பிக்கைப் பொறுப்பு) வைத்தனர். அவனன்றி எதுவும் நடைபெறாது என்ற சத்தியத்தைப் புரிந்தபின் தங்கள் மூட (பாரம்பர்ய) நம்பிக்கைகளையெல்லாம் விட்டொழித்து பரிசுத்தமான மக்களாயினர். உலகில் உயர்ந்தனர்.

## 6. நம்மில் சில பலவீனர்கள்!

பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படை உண்மைகள் புரியபடாத நிலையில், உலகின் சில பாகங்களில், முஸ்லிம்களெனப் படுவோரில் சிலர், தங்களைச் சுற்றி வாழும் முஸ்லிம்களல்லாதாரின் (காபிர்களின்) நம்பிக்கைகள் பலவற்றில் தங்களை ஆட்படுத்திக் கொண்டு வழிதவறிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

★ உதாரணமாக, 'அம்மை' என்ற தொத்து நோய் ஏற்பட்டால் ஒரு குறிப்பிட்ட விக்ரகத்துக்கு நேர்ச்சைகள் செய்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற காபிர்களின் வழக்கத்தை, முஸ்லிம்களில் சிலரும் அறியாமை காரணமாகக் கடைபிடிக்கின்றனர், அந்த விக்ரகம் தான் 'அம்மை' என்ற வியாதிக்கு அதிபதி என்று நம்புகிறார்கள்

இப்பொழுது உலக நாடுகளெல்லாம் கூடி, 'அம்மை' என்ற நோய்க்குக் காரணமான கிருமிகளைச் செயல்படாமல் அடக்கி விட்டார்கள். 'யாருக்காவது அம்மை நோய்க்கண்டதைச் சொன்னால் 1000 ரூபாய் தருகிறோம்' என்று சவால் விட்டு, அம்மையை ஒழித்துவிட்ட பெருமையை நிலைநாட்டி வருகின்றனர். அம்மை நோய்க்கு ஒரு தெய்வம் இருந்தால், அந்த தெய்வத்தை இப்போது வேலையில்லாத தெய்வமாக்கி விட்டனர். இந்த உண்மை உணர்த்தப் பட்டுங்கூட அறிவு பெற்றதோர் கூட்டத்தில் முஸ்லிம்களெனப் படுவோரில் சிலரும் உள்ளனர் என்றால் அது வேதனைக் குரியதே!



★ இது போன்றே, சகுனங்கள் பார்த்தல் என்பதும் இஸ்லாம் மார்க்கம் ஒப்புக்கொள்ளாததாக இருந்தும், பிற சமூகத்தவரின் கலாச்சார பழக்க வழக்கங்களின் தோஷத்தால் அவற்றின்மேல் நம்பிக்கைக் கொள்வோரில் முஸ்லிம்களில் ஒரு சிலர் இருப்பதும் பரிதாபத்துக்குரியதேயாகும். உதாரணமாகத் தும்மல் ஒரு மனிதனுக்கு வெளிப்படுவது என்பது இஸ்லாம் மார்க்கத்தின்படி மிகமகிழ்ச்சிக்குரிய ஒரு நல்ல அறிகுறியாகும். அதனால் தான் தும்மல் வெளிப்பட்டால், ''அல்ஹம்து லில்லாஹ்'' (எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே) என்று அவன் உடனே நன்றி தெரிவிக்க வேண்டும் என மார்க்கம் உபதேசித்துள்ளது. இதைக் கெட்ட சகுனம் என்று நினைப்பது எத்தகைய மதியீனம்?

ஆந்தை அலறல், காக்கை கரைதல், பல்லி கீச்சிடல், கடிகாரம் மணியடித்தல் போன்றவைகளுக்கும், நாவிதர், விதவை, தயிர்க்காரி போன்றவர்கள் குறுக்கே செல்வதற்கும் கெட்ட சகுனம் என்பதற்கும் இஸ்லாம் மார்க்கத்தில் எந்த இடமுமில்லை. அது போன்றே சிலர் நம்பும் நல்ல சகுனங்கள் என்பதற்கும், மார்க்கத்தில் எவ்வித ஆதாரமோ, ஆதரவோ இல்லை.

★ குழந்தை பிறந்தவுடன் தேதி, கிழமை, நேரம் ஆகியவைகளைக் குறித்து வைத்துக் கொண்டு ஜாதகம், ஜோஸியம் ஆகியவைகளைப் பார்த்தல், திருமணம், தொழில் ஆரம்பித்தல், பிரயாணம் செய்தல் ஆகியவைகளுக்கு, நல்ல நேரம், கெட்ட நேரம் பார்த்தல், கொடுக்கல் வாங்கல், சொத்துக்கள் வாங்கல், விற்றல் ஆகியவைகளுக்கு காலம் கணித்தல், குலுக்குச் சீட்டுப் போட்டு அதிர்ஷ்டம் பார்த்தல், கிளி, மைனா போன்ற பறவைகள் தங்கள் தலைஎழுத்தைக் கூறுவதாக நம்புதல் போன்ற மூடப் பழக்க வழக்கங்களுக்குத் தங்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர் சிலர்.

இத்தகைய நடைமுறைகளெல்லாம் அல்லாஹ்வின் மீது ஒரு முஸ்லிம் வைக்க வேண்டிய 'தவக்கல்' என்ற உறுதியான

பாதுகாப்புக்கு முற்றிலும் முரணானதாகும். 'ஈமான்' என்ற பரிசுத்தமான நன்னம்பிக்கை நலிவுறச் செய்வதாகும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும், அருமை நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் வழி முறைகளுக்கும் மாறு செய்வதாகும்.

★ ''(நபியே!) நீர் கூறும்: அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கு யாதொரு நன்மையோ தீமையோ செய்து கொள்ள எனக்கு சக்தியில்லை. நான் மறைவானவற்றை அறியக் கூடுமாயின் நன்மைகளையே அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன்; யாதொரு தீங்குமே என்னை அணுகியிராது. நான் (பாவிகளுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், விசுவாசிகளுக்கு நன்மாராயங் கூறுபவனுமே யன்றி வேறில்லை''. 7:188

★ ''மறைவானவற்றின் சாவிகள் அவனிடத்தில்தான் இருக்கின்றன. அவற்(றிலுள்ள வற்)றை அவனைத் தவிர வேறெவரும் அறியார். தரையிலும், கடலிலும் உள்ளவைகளையும் அவன் நன்கறிகின்றான். அவன் அறியாமல் யாதொரு இலையும் உதிருவதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருளில் (புதைந்து) கிடக்கும் (கடுகு போன்ற சிறிய) வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் அவனுடைய தெளிவான (பதிவுப்) புத்தகத்தில் இல்லாமலில்லை''. 6:59

''நிச்சயமாக (உலக முடிவு) காலத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் (மட்டும்) தான் இருக்கிறது; அவனே மழையை இறக்கி வைக்கிறான்; அவனே கர்ப்பங்களில் உள்ளவைகளையும் அறிவான். (அவனைத்தவிர) எவரும் நாளைக்கு அவர் என்ன செய்வார் என்பதையும் அறியார்; அவர் எந்தப் பூமியில் இறப்பார் என்பதையும் (அவனைத்தவிர) எவருமே அறியார்; நிச்சயமாக அல்லாஹ்தான் (இவைகளை) நன்கறிந்தோனும் தெரிந்தோனுமாக இருக்கிறான்'', 31:34

**அல்ஹம்துலில்லாஹ்**